ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சு. யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹ ஆவணிமீ கூஉ (25-8-35) ஞாயிற்றுக்கிழமை பகுதி—அ.

## தோத்திரம்

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா முனிவர்சித்த ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற் பனைகடந்த செல்வ மாகிக்
கருதரிய மலரின்மணம் எள்ளிலெண்ணெய் உடலுயிர்போற் கலந்தெந் நாளுந்
துரியநடு வூடிருந்த பெரியபொரு ளியாததனைத் தொழுதல் செய்வாம்.

—தாயுமான சுவாமிகள்.

# தேசமுன்னேற்றத் திறவுகோல்

[திரு. சி. அகிலேஸ்வரன், தலைத்தீவு]

(முற்றொடர்)

"ஆடோம்பே" என்றமெட்டு

தேசத்தொண்டே செய்வோம்
தேசத்தொண்டே (தே)

பாசிப் பயறுசெய்து பருப்பெடுப்போம்—சைனப்
பட்டினத்தில் வாங்குதற்கு மறுப்பெடுப்போம்
வாசத் துவரைக்கிங்கே மண்ணை அறிவோம்—இதனை
வளமையாகச் செய்யமனக் கண்ணைஎறிவோம். (தே)

வேர்க்கடலை வித்துக்கிங்கே விருப்பம்வைப்போம்—இன்னும்
வேற்றாரார் கொண்டுவரின் திருப்பிவைப்போம்
பார்க்குமிடம் வேர்க்கடலை பரவச்செய்வோம்—கொண்டல்
பட்டாணிக் கடலைகள் பக்குவஞ் செய்வோம். (தே)

கோதுமைக்கு ஏற்றநிலம் குறித்துச்செய்வோம்—ஆறு
குளங்களில் உள்ளநீரை மறித்துக்கொள்வோம்
வாதுமைப் பருப்பைஇங்கே மணக்கச்செய்வோம்—எங்கள்
மண்களுக்கு ஏற்றபயிர் வகைகள்செய்வோம். (தே)

கேள்வரகு எள்உழுந்து எங்கும்செய்வோம்—சீர்
கேடியாய் இருப்பவரைப் பங்கம்செய்வோம்
நாள்உணவு க்கானபொருள் நன்குசெய்து—எங்கள்
நாட்டுக்குள்ளே விற்றுலாபம் பங்குசெய்வோம். (தே)

வெங்காயம் மிளகாய்கள் இங்குசெய்தென்ன?—வணிகர்
வெளியூரில் எடுப்பித்து இங்கேவிற்கின்றார்
எங்கேயும் வெட்கக்கேடு இதுபோல்உண்டோ?—இனி
எங்கள் தேசஅளவுக்கு நாங்களேசெய்வோம். (தே)

இந்தியாவின் எள்ளுஇங்கே எண்ணை ஆகுதே—ஏன்
இலங்கையிலே எள்விளையும் பூமிஇல்லையோ?
சொந்தமான சோம்பற்பேயை நாடுகடத்தி—இங்கே
சுறுசுறுப்பாய் எள்விதைத்து எண்ணைஎடுப்போம். (தே)

காலைமாலை கோப்பிப்பானம் வேண்டுமென்றால்—இதில்
கலந்துகொள்ளும் இனிப்பும்ஒன்று வேண்டும்தானே
ஓலமிட்டு யாவாச்சீனி எடுப்பிக்கின்றோம்—வீணாய்
எத்தனையோ லட்சம்பணம் இறைக்கின்றோம். (தே)

பனைவெல்லம் சீனியாகச் செய்யவேண்டும்—முதலில்
பக்குவம்செய் யந்திரங்கள் இங்கேவேண்டும்
அனைவரும் இதில்ஆசை கொள்வோம்ஆனால்—இங்கே
அடுத்தமாதம் பனைவெல்லம் சீனிஆகும். (தே)

கோப்பியொடு தேயிலைகம் தேசத்தில்உண்டே—இதனால்
கொள்ளையான லாபம்சில வெள்ளையருக்கே
வாய்ப்புடன் இதனையும் நாம்பழகிச்செய்வோம்—இதில்
வருகின்ற லாபத்தையும் பங்கிட்டுக்கொள்வோம். (தே)

ஆங்கிலக்கல்விதனை அதிகம் கற்று—உரிய
அரசாட்சி உத்தியோகம் எதுவும்அற்று
ஓங்குகலை உணர்ச்சியைப் பாழாக்கித்—தெருவில்
உளைப்பின்றித் திரிகின்ற வாலிபர்வாரும், (தே)

(வருகும்)

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில், உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்"

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—7

# மானிப்பாய்க் கொலைவழக்கு.

## வைத்தியசாலைமுன் கத்திக்குத்து.

புதிய விதானையின் முரணை கூற்று

## எதிரி விடுதலையடைந்தார்.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம், 21.

யாழ்ப்பாணம் சுப்பிரீங்கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாகவும், ஆங்கிலம்பேசும் யூரிக்கனவான்கள் முன்பாகவும் சென்ற வைகாசி மாதம் 29-ந் திகதியளவில் மானிப்பாய் வாசியாகிய துரைசுவாமி—நமசிவாயம் என்பவரைக் கத்தியாற்குத்தி அவரது மரணத்தை வருவித்ததாக ஆனைக்கோட்டைவாசியாகிய தம்பையா—செல்வத்துரை என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இன்று கோட்டில் ஏராளமான சனங்கள் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது. திருவாளர்கள் R. சண்முகம், V. T. மயில்வாகனம், A. பிலிப், L. S. குலத்துங்கம், K. இரத்தினசிங்கம், S. சிற்றம்பலம், S. ஜேக்கப் முதலியவர்கள் யூரிமாராகத் தெரிந்தெடுக்கப்பட, அவர்களுள் திரு. S. ஜேக்கப் அவர்களைத் தலைவராகத் தெரிந்தெடுத்தனர்.

வழக்காளியின் சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. நிகால் குணசேகராவும், எதிரியின்சார்பாக நியாயதுரந்தரர் திரு. R. R. நல்லையா அவர்களின் அநுசரணையின் பேரில் நியாயவாதி திரு குணம் ஸ்பென்சர் அவர்கள் யூனியர் கவுன்சிலாகவும், நியாயவாதி திரு. S. துரைசுவாமி தம்பு அவர்கள் சீனியர் கவுன்சிலாகவும் ஏற்பட்டனர்.

முடிக்குரிய நியாயவாதி திரு. குணசேகரா அவர்கள் வழக்கின் விபாத்தை யூரிமார்களுக்கு எடுத்துரைத்ததின்மேல் யாழ்ப்பாணம் ஜுடிஷல் மெடிக்கல் ஆபீசர் டாக்டர் K. இராசா அவர்கள் சாட்சியங்கூறினர். அவர் கூறியவற்றின் சாராம்சம் பின்வருமாறு:—

"வைகாசி மாதம் 30-ந் திகதியன்று 8-30 மணியளவில் நான் பிரேதத்தைப் பரிசோதித்தேன். அப்பிரேதம் கடையினுள் ஓர் சோபாக்கட்டிலில் கிடத்தியிருந்தது. காலஞ்சென்றவரது சகோதரர்களாகிய சபாபதியும், நடராசாவுமே துரைசுவாமி நவசிவாயத்தினுடைய பிரேதந்தானென அடையாளங் காட்டினர்கள். சவத்தின் வலதுபக்கத்திலிருந்த சுவரில் இரத்தம் சிந்தியிருந்தது. நிலத்திலும் இரத்தம் சிந்திக்கிடந்தது.

### காயங்கள்

இடதுபக்கத்தில் முதுகில், முள்ளெலும்புக்கும் தோள்மூட்டெலும்புக்கும் இடையே $1\frac{1}{4}$ அங்குல நீளமுள்ள குத்துக்காயங் காணப்பட்டது. 5-ம் விலா எலும்பை வெட்டியதுடன் நெஞ்சினுள்ளே காணப்படும் பெரிய இரத்தோட்டு நரம்பையும் வெட்டியிருந்தது. இடதுபக்கத்து நெஞ்சினுள் பெரிய இரத்தக்கட்டியும் இருந்தது. நெஞ்சினுள்ளேகாணப்படும் பெரிய இரத்தோட்டுநரம்பு வெட்டப்பட்டதின் காரணமாக இரத்தம் அளவுமீறிப் பாய்ந்தமையாலேயே மரணம் சம்பவித்திருக்கிறது. பெலனாகக் குத்தப்பட்டதினாலேயே இக்காயம் ஏற்பட்டிருக்கும். குத்தியவன் பின்னுக்கோ அல்லது பக்கத்தில் நின்றோ குத்தியிருத்தல் வேண்டும். காலஞ்சென்றவரது வயது ஏறக்குறைய 20 இருக்கும். எதிரியைவிட இறந்தவர் பெலசாலியென எண்ணுகின்றேன்."

டாக்டர் மீண்டும் குறுக்குவிசாரணையின்போது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"31-ந் திகதி காலை $8\frac{1}{2}$ மணியளவில் எதிரியையும் சோதித்தேன். இரண்டு கண்களும், முகத்தின் இரண்டுபக்கங்களும், மூக்கும் காயப்பட்டு வீங்கியிருந்தது. வலது பக்கத்து நெற்றியில் வீக்கமுள்ள காயமிருந்தது. தலையின் வலதுபக்கத்தில் காயமுள்ள வீக்கங் காணப்பட்டது. அவைகள் பாரதூரமான காயங்களல்ல. தலையிலுள்ள காயம் தடியாலேற்பட்டிருக்கலாம். கன்னங்கள் வீங்கியிருந்தமைக்குக் காரணம் அடிக்குமேல் அடி அடித்ததினால் உண்டாயிருக்கலாம். எதிரி ஏறக்குறைய ஒரு கிழமைவரையில் மறியற்சாலையிலுள்ள ஆஸ்பத்திரியில் வைத்தியஞ் செய்துகொண்டவர்.

2-ம் எதிரியாகவிருந்து விலத்தப்பட்ட இரத்தினம் என்பவரையும் பரிசோதித்தேன். அவருக்கும் இரு கண்களும் முகத்தின் இருபக்கங்களும் வீங்கியிருக்கக் காணப்பட்டது அவைகளும் சாதாரண காயங்களே. எதிரிக்கு 19 வயது இருக்குமென்று சொல்லலாம்."

அதன்மேல் காலஞ்சென்றவரது தமையனாகிய துரைசுவாமி—சபாபதி சாட்சியங்கொடுக்கையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"நானே டாக்டருக்கு எனது சகோதரனுடைய சவந்தானெனக் கூறினேன். சம்பவம் நடைபெற்றவன்று $3\frac{1}{2}$ மணியளவில் தனிமையாகவே கடைக்குவந்தார். சீனிவாசகம் வந்ததை நான் காணவில்லை."

குறுக்கு விசாரணையின்போது கூறியவற்றின் சாராம்சம்வருமாறு:—

"நான் மானிப்பாயிலுள்ள கிறீன் மெமோறியல் ஆஸ்பத்திரிக்குமுன்னாகக் கடைவைத்திருக்கிறேன். கூலிக்குவிடும் கார் என்னிடத்திலில்லை. காலஞ்சென்றவர் கார் வைத்திருந்தார். நானும் காலஞ்சென்றவரும் நடராசாவும் ஆனைக்கோட்டை வாசியாகிய நாகலிங்கம்—கந்தையா என்பவர்க்குச் சார்பாக நகையைப் பறித்ததாக வழக்கு வைக்கப்பட்டு, பின்னர் பொய்வழக்கென நிகாகரிக்கப்பட்டது, எங்கள் மூன்று சகோதரர்களுக்குமெதிராக ஆனந்தமுருகன் என்றபஸ்ஸை நிற்பாட்டித் தொந்தரவு செய்ததாக மானிப்பாய் ஆஸ்பத்திரி டாக்டர் பொலிசுக்கு முறையிட்டாரோ என்பது எனக்குத் தெரியாது. சப்இன்ஸ்பெக்டர் கொறேயா விசாரணைக்கு வந்தமையும் எனக்குத்தெரியாது. இவ்வழக்கின் சாட்சியாக வந்திருக்கும் தியாகு அல்லது தியாகராசா என்பவர் வழமையாக எமது கடைக்கு வராவிட்டாலும் சிலவேளைகளில் வருவார். எதிரியாகிய செல்வத்துரையின் சகோதரி படிப்பிப்பதன்பொருட்டு மானிப்பாயில் கடையைக் கடந்து போவதைக் கண்டிருக்கிறேன். அப்போது நானும் இறந்தவராகிய எனது தம்பியும் வேறுமாட்களுஞ்சேர்ந்து அவளைக் கேலிசெய்யவில்லை. தியாகராசாவும் பகிடிவிடுவதென்பதை நான்மறுக்கிறேன். தியாகராசாவுக்குமெதிரிக்குமிடையில், நடைபெற்ற சண்டையைப்பற்றி எனக்குத் தெரியாது. காலஞ்சென்றவர் தியாகராசாவின் சிநேகனல்லர். தியாகுவுக்காக ஏன் அடித்தார் என்பது எனக்குத் தெரியாது."

மூன்றாவதாக பொன்னுச்சாமி-அமிர்தலிங்கம் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

வைகாசிமாதம் 29-ந் திகதியன்று பின்னேரம் 4 மணியளவில் நான் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு முன்னாகவுள்ள சவரக்கடையில் நிற்கும்போது காலஞ்சென்றவர் சீனிவாசகத்துடன் வந்து என்னைச் சந்தித்தார். சீனிவாசகத்திற்கு ஓர் பைசிக்கிள் வாங்கிக்கொடுக்க வேண்டுமெனவும், அச்சைக்கிள் ஆலடியிலிருக்கும் சுப்பிரமணியம் என்பவரிடம் இருப்பதாகவும், காசு குறைவாக இருக்கிறபடியால் அக்காசுக்கு என்னைப் பிணை நிற்கும்படியும் கூறி என்னைக் கூப்பிட்டார்கள். உடனே நாங்கள் மூவருமாகச் சேர்ந்துபோனோம். வழியில் தியாகுவை அடித்ததைப்பற்றிக் கேள்விப்பட்டோம். தியாகராசா என்பவர் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுள் ஒருவர். நாங்கள் சுந்தரத்தின் கடைக்குக்கிட்ட வரும்போது சின்னத்துரையைக் கண்டோம். அவரையும் அழைத்துச் செல்வதற்காக அக்கடைக்குச் சென்றோம். அவர் சைக்கிளைத் தீர்த்தபடியால்தான் அவரையும் அழைத்துச்செல்ல எண்ணினோம். நாங்கள் கடைக்குட்போனபோது இரத்தினமும் இவ்வெதிரியாகிய செல்வத்துரையும் தேனீர் பருகிக்கொண்டிருந்தனர். அதைக்கண்ட காலஞ்சென்றவர் இரத்தினத்தை நோக்கி 'ஏன் தியாகுவையடித்தாய்' எனக்கேட்க இரத்தினம் "அடித்தால் என்னடாசெய்வாய்" எனச் சொல்லிவிட்டு எழுந்து அவர்பக்கத்துக்குப் போய்க் கையினால் கன்னத்தில் அடித்தார். இதனைக் கண்ணுற்ற நான் அவர்களைப பிடித்துவிட இவ்வெதிரி பிற்பக்கத்தில் நின்று மடியிலிருந்த கத்தியை எடுத்து விரித்துக் குத்தினார். (பார்த்து) இக்கத்தியாலேயே காயம் உண்டாக்கப்பட்டது. காயமடைந்தவர் பின்னடிச்சென்று சுவரில் சாய்ந்து பின்னர்க் கீழேவீழ்ந்தார். உடனே நான் எனது சால்வையினால் இரத்தத்தைப் பெருகவிடாதபடி காயத்தை அமத்தினேன். எதிரியைச் சுப்பிரமணியம் பிடித்துக் கடைக்கு வெளியே கொண்டுபோனார். இரத்தினத்தை யார் பிடித்தார்களென எனக்குத்தெரியாது. பொலிஸ்விதானை வரும்வரையில் நான் கடையுள் நின்றேன். எதிரியையும் செல்வத்துரையையும் அடித்தவர்கள் யாரென எனக்குத் தெரியாவிட்டாலும் அடித்த சப்தத்தைக் கேள்வியுற்றேன். அத்துடன் அடியுங்கடா, கொல்லுங்கடா வெளியே விடாதேயுங்கடா எனவும் கேள்விப்பட்டேன். சம்பவம் நடைபெற்ற 15 நிமிடங்களுக்குள் பொலிஸ்விதானை அவ்விடத்திற்கு வந்தார். அடுத்தநாள் அதிகாலையிலேயே வாக்குமூலங் கொடுத்தேன். அன்றைய தினம் 6 அல்லது 7 மணியளவில் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு வாக்குமூலங் கொடுத்தேன். அப்பொழுது காலஞ்சென்றவரது கையில் ஆயுதங்கள் யாதேனுமில்லை"

சாட்சி மீண்டுங் குறுக்கு விசாரணையின்போது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

நான் காலஞ்சென்றவரது பந்துவல்ல. எனது தந்தையார் ஏதோ ஒரு உத்தியோகமாக அரசாங்கத்தில் இருந்தாரெனத் தெரியுமேயொழிய என்ன உத்தியோகத்தில் இருந்தாரென இன்றுவரையில் எனக்குத் தெரியாது. தாங்கள் சொல்வதுபோல நான் மானிப்பாய் நகரில் தலைசிறந்த காவாலி—சட்டாமுட்டியல்லன். கழுசறையுமல்லன். காலஞ்சென்றவரைக் கடந்த 4, 5 வருடமாக எனக்குத் தெரியும். வழமையாக அவரைச் சந்திப்பேன். அவரது சகோதரனுடைய கடைக்கு அலுவல்இருந்தால் போவேன். காலஞ்சென்றவருக்கும் எதிரிக்கு மிடையில் திருப்தியீனமோ கொடுக்கல்வாங்கற்பிணக்கோ இருந்ததாக எனக்குத்தெரியாது. தியாகு என்பவரை எனக்குத் தெரியுமென்றாலும் அதிக பழக்கமில்லை. காலஞ்சென்றவருக்கும் அவருக்கும் அதிக நட்பு இருந்ததாக எனக்குத் தெரியாது. அவரது விஷயத்தில் நான் அதிக சிரத்தை எடுக்கமாட்டேன். காலஞ்சென்றவரோ சகோதரர்களோ கடைக்காரர்களாகவும் கார் வைத்திருப்பவர்களாகவிருந்தும் ஆதனமில்லாத என்னைப் பிணைநிற்கும்படி ஏன் கேட்டார்களென்பது எனக்குத் தெரியாது. சீனிவாசகம் எனது வீட்டிற்கு அயலிலே இருப்பவர். நமசிவாயம் இருப்பது $\frac{1}{4}$ மைல் தூரத்திற்கு அப்பாலேயே. சீனிவாசகமும் நமசிவாயமும் சொந்தக்காரர்களல்லர். சின்னத்துரை காலஞ்சென்றவருக்குச் சொந்தக்காரனே. அவர் கத்திச்சேட்டை விட்டதன்பயனாக மறியலுக்கும்போய்வந்தார். நாங்கள் ஆஸ்பத்திரிப்பக்கம்போய் வருவதால் சின்னத்துரை அப்பக்கத்திற்கு வருவதில்லை. சுந்தரத்தினுடைய கடைக்குச் சென்றபோது அங்கு (வேறு) சுப்பிரமணியம் என்பவர் பைசிக்கிள் திருத்துவித்துக்கொண்டிருந்தார். அங்கு அவரை (சின்னத்துரையை)க் காணாவிட்டால் அவரது வீட்டிற்குச் சென்று அழைத்துச்சென்றிருப்போம். நீங்கள் சொல்வதுபோன்று முன்னாகவே நாங்கள் எதிரிகள் வந்திருப்பதால் அவர்களை அடிப்பதன்பொருட்டுச் சின்னத்துரையையும் சுப்பிரமணியத்தையும் அனுப்பவில்லை. தியாகராசாவை அடித்ததால் எதிரிகளுக்கு நல்லதோர் பாடம்படிப்பித்தல் வேண்டுமென்றாவது யாதாவதொரு குறிப்புக்கூறியாவது நாங்கள் செல்லவில்லை. நான் பொலிஸ் விதானையிடம் சம்பவம் நடைபெற்றவன்று வாக்குமூலங் கொடுக்கவில்லையென்பது மெய்.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

இந்திய வங்கி லிமிற்றெட்
THE INDIAN BANK Ltd.
[Incorperated in British India in 1907]
ஷை வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.
(2) 2-6-35.

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணு 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 5.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, காற்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—சு. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவஞு ஆவணிமீ கூ௨ (25-8-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—அ.


# யாழ்ப்பாணப் புகையிலை - சுருட்டுத் தொழில் நிலைமை.

## முன்னேற்றத்துக்குக் கொண்டுவர யோசனை

## புகையிலைப் பொருட்காட்சிக்கு ஏற்பாடு.

### தொழிற்சாலைச் சட்டம் உண்டாக்குவதனவசியம்.

புகையிலைத் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக இம்மாதம் 17-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் திருநெல்வேலி அரசினர் கிருஷிக பாடசாலையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலிருந்தும் தீவுப்பற்றுகளிலிருந்தும் பெருந்தொகையான கமக்காரரும் புகையிலைத் தொழிலாளரும் வியாபாரிகளும் சமுகங்கொடுத்தனர். அவ்வமயம் வடபிரிவுக் கிருஷிக உத்தியோகஸ்தர் திரு. W. R. C. போல் அவர்கள் தலைமை வகித்தனர்.

இக்கூட்டத்தைக் கூட்டிவைத்த அரசினர் முன்மாதிரித் தோட்ட அதிபர் திரு. M. R. ஜெயரத்தினம் அவர்கள் கூட்டக் காரியதரிசியாகக் கடமையாற்றி, யாழ்ப்பாணத்தின் சுருட்டுக் கைத்தொழிலடைந்துள்ள கஷ்டங்களை விரித்துரைத்தனர். யாழ்ப்பாணத்தவரின் உயிர்நிலைபோன்றிருக்கும் இத்தொழில் கீழ்நிலையையடைந்த காரணங்களையும் அவற்றை நிவிர்த்திசெய்வதற்குரிய வழிவகைகளையும் நன்ருக ஆராயவேண்டுமெனப் பொது சனங்களை வேண்டினர்.

அதன்பின் அக்கிராசனர் அவர்கள் புகையிலைத் தொழிலைக்குறித்துப் பின்வருமாறு பேசினுர்கள் :–

"புகையிலை 1610-ம் ஆண்டு போர்த்துக்கேயரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன்பின் சுருட்டுக் கைத்தொழில் ஏற்படுத்தப்பட்டு வியாபாரம் யாழ்ப்பாணத்திலேயே நடந்தது. அதிகமான சனங்கள் தமது நாளாந்த சீவியத்திற்கு இத்தொழிலையே நம்பியிருந்தனர். 1914-ம் ஆண்டிற் கிருஷிகப் பகுதியார் யாழ்ப்பாணத்திற்கேற்ற இனப் புகையிலையைக் கண்டுபிடிப்பதற்குப் பல பரீட்சைகள் செய்தனர். முப்பத்துமூன்றுக்குக் குறையாத இனங்கள் பரீட்சிக்கப்பட்டு "வெள்ளைப்பேளிப் புகையிலை"யே ஏற்றதெனக் காணப்பட்டது."

பின்னர்ப் புகையிலை வியாபாரம் கீழ்நிலையடைந்த காரணங்களை எடுத்துக்காட்டி பின்வருமாறு பேசினுர். "புகையிலையின் பல இனங்களுக்குமுள்ள பிரியம் இலங்கையிலன்றி ஐரோப்பாவிலும் அடிக்கடி மாற்றமடைகின்றது. உதாரணமாக இற்றைக்கு 30 வருஷங்களுக்கு முன் அதிகம் மதிப்புப்பெற்றிருந்த சிகறெற் புகையிலையான எகிப்திய இனத்தின் இடத்தை இப்பொழுது வேறு அநேக இனங்கள் எடுத்துவிட்டன. கடந்த 10 வருடங்களுள் 30, 40. இனப் புகையிலைகள் சிகறெற் செய்ய உபயோகப்படுகின்றன. யாழ்ப்பாணத்திற் செய்யப்படும் புகையிலை வன்னிநாட்டிற் செய்யப்படும் புகையிலையிலும் சிறந்தது." பின்னர் லண்டனுக்கனுப்புவதற்குத் தகுதியாக யாழ்ப்பாணத்தில் இப்போகத்திற் செய்யப்பட்ட சில புகையிலைகளையும் தகுதியற்ற சிலவற்றையுங் காட்டினுர்.

பின்னர் திரு C. அருளம்பலம் (நியாயதுரந்தரர்) அவர்கள் திருவாங்கூருடன் செய்யப்படும் வியாபாரத்தைப்பற்றிப் பின்வருமாறு சுருக்கமாகப் பேசினுர். "திருவாங்கூரில் தேங்காய் வியாபாரம் நன்னிலையிலிருந்தபோது புகையிலை வியாபாரமும் விருத்தியடைந்தது. தேங்காயின் விலை குறையவே அவ்வூர்ச் சனங்களும் குறைந்த இனப் புகையிலையை நாடவேண்டியவர்களானுர்கள். யாழ்ப்பாண வியாபாரிகளிற் சிலர் திருவாங்கூரிலேயே புகையிலைச் செய்கையைத் தொடங்கிவிட்டார்கள். சென்ற 15 வருடங்களாகப் புகையிலை வியாபாரம் குறைவடைந்து வந்தது. ஆனுற் சென்ற 4 வருடங்களாக இத்தொழில் அதிகம் வீழ்ச்சியடைந்து மக்களிற் பலவகுப்பினருக்கும் தொழிற்பஞ்சத்தை யுண்டுபண்ணிவிட்டது. புகையிலைச் செய்கையை மட்டுப்படுத்தி விற்பனைக்கு மற்றநாடுகளிலிடங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். இத்தொழிலை ஸ்திரப்படுத்த மிகவுந் திறமையான அமைப்பு வேண்டும். திரு A. ஞானப்பிரகாசம் அவர்கள் தமது கடிதத்திற் காட்டியபடி யாழ்ப்பாணத்தில் புகையிலை மகாநாடொன்று புகையிலைப் பொருட்களைக்கொண்ட ஒருகாட்சியுடன் கூட்டப்படவேண்டும். புகையிலையுடன் சம்பந்தமான எத்தொழிலையும் யாழ்ப்பாணத்திலேயே நிறுவவேண்டுமென்று அரசினரை நாம் கேட்கவேண்டும்.

இதன்பின் யாழ்ப்பாணத்திலுள்ள தொழிலாளர் சார்பாக திரு. நாகலிங்கம்—மயில்வாகனம் அவர்கள் கூறியதாவது: "இப்பொழுது புகையிலை–சுருட்டு அனுப்புவதற்குரிய செலவு தொழிலாளரை அதிகம் பாதிக்கின்றது. யாழ்ப்பாணத்திற்குப் புகைரதவீதி அமைப்பதற்கு முன் 600 இருத்தல்நிறையான புகையிலை $3\frac{1}{2}$ ரூபா செலவுடன் உருக்கள் மூலம் அனுப்பப்பட்டது. இப்பொழுது அதே நிறையான புகையிலையைப் புகைரதமூல மனுப்பப் பல ரூபா செலவாகின்றது. இவ்விஷயத்தை அரசாட்சியார் இரக்கத்துடன் கவனிக்கவேண்டும். இத்தீவில உண்டாக்கப்படும் சுருட்டின் குணமும் திருத்தமடைவது ஆவசியமாகும். கிருஷிகப்பகுதியாரால் பீடிச் செய்கையும் வியாபார முறையில் கைக்கொள்ளப்படலாம். பிறதேசங்களில் விற்பனைசெய்யும் வசதிகளும் அரசினரால் ஆக்கப்படவேண்டும். இலங்கைமக்களில அதிகத்தொகையானேரும், மலாயா, ஆபிரிக்கா, மத்திய அமெரிக்காவிலுவள இந்தியரும், யாழ்ப்பாணச் சுருட்டைவிரும்புகிறுர்கள. ஆனுல் ரேகுத்தீர்வையினுல் அவர்கள இச்சுருட்டை உபயோகிக்க முடியாது கஷ்டப்படுகிறுர்கள். சிஙகளத் தலைவர்கள் "பீடி" "சிகறெற்" புகைப்பதை விடுத்துப் புகையிலை செய்வோரை ஊக்கப்படுத்துவார்களாக.

இதன்பின மயிலிட்டிக் கிராமச்சங்கத்தலைவரும், திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை அதிபருமான திரு. சி. சுவாமிநாதன் B. A., அவர்கள் கூலியாட்களும் தொழிலாளரும் நன்மையடையும்படி தொழிற்சாலைச் சட்டமொன்று ஏற்படுத்தவேண்டுமென்றும அச்சட்டத்தால் புகையிலை, சுருட்டு முதலியவற்றின தன்மை திருத்தமடையுமென்றுங் கூறினுர்கள்.

இதன்பின்னர் திருவாளர்கள் A. செல்லையா, N. சுப்பையா, நியாயதுரந்தரர் A. இராமநாதன், S. முருகுப்பிள்ளை என்போர் பேசினுர்கள.

பின்னர் "புகையிலை மகாநாடொன்று பொருட்காட்சியுடன்" நிறுவுதல் வேண்டுமென்று திரு. K. S. சுப்பையா அவர்கள் பிரேரிக்க, திரு. C. அருளம்பலம் அவர்களால் அநுவதிக்கப்பட்டுச் சபையோ ரங்கீகாரம்பெற்றது.

பின் சபைத் தலைவருக்குக் கூறப்பட்ட நன்றியறிதலுடன் கூட்டங் குலைந்தது.

(குறிப்பு) புகையிலை மகாநாட்டின் முதலாவது நிர்வாகசபைக் கூட்டம செப்டம்பர் மாதம் 7-ந் திகதி அரசினர் கிருஷிகசாலையில் நடைபெறும். —நமது நிருபர்

# பசிப்பிணி.

(கண்டாச்சிபுரம், திரு. அ. முத்தையாபிள்ளை அவர்கள்.)

இறைவன் சிருஷ்டியிலடங்கிய பல ஜீவர்களும் தத்தம் வாழ்நாளிடையே பலபல விதத்தில் பயனுகர்கின்றனர். மக்கள் சேவகம், பயிர்த்தொழில், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய செய்தும், திரைகடலோடியும, அறநெறிகளாலும், கொலை, களவு, வஞ்சம், பொய், சூது ஆகிய மறநெறிகளாலும் பொருளீட்டுகின்றனர். இவைகளையெல்லாம் யோசிக்குமளவில் எண்சாணுடம்பினை யோம்புதற்கேயன்றி வேறல்ல என்பது,

"சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க்கடல்கடந்தும, பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம், பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால், நாழியரிசிக்கே நாம"

என்னும் நல்வழி வெண்பாவால் பெறப்படுகின்றது.

"யோசிக்கும் வேளையில் பசிதீரவுண்பது முறங்குவதுமாக முடியும்" என்றுர் நம் தாயுமானுர்.

மக்கள்யாக்கை உணவினுலாகிய பிண்டம். "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்பது புறநானூறு. உணவில்லாது ஒரு கணமும் உயிர் நிலையாது. உணவு கிட்டாதபோது பசியென்னும் பெரு வியாதி பிடித்து வருத்தும். முடியுடைமன்னரும, மொய்ம்புடை வீரரும், முற்றுக துறந்த யோகிகளும், சித்தர்களும், முனிவர்களும, தபசிகளும் பசிநேரிட்டால் தஙகள் தங்கள நிலைகெட்டுத் தவிக்கின்றனர்.

"பூணும் பணிக்கல்லப் பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக், காணும் படிக்கலல மங்கையர்க கல்லநற் காட்சிககல்ல, சேணுங கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச், சாணும வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே"

என்ற பெரியோர் வாக்கு ஈண்டு நோக்கற்பாலது.

முன்னெருகால் கௌசிக முனிவர் மழையின்மையாற் பஞ்சமேற்பட்டு உணவு கிடையாது மெலிந்து நாயிறைச்சியைத் தின்ன முயன்று முதலில் ஒரு பகுதியைத் தெய்வங்கட்கு பலியிட, அஃதறிந்த இந்திரன் மழைபெய்யச் செய்தனன் எனவும், அதனுல் பஞ்சம் நிவிர்த்தியாயிற்றெனவுங் கூறுவர். கௌசிகர் தவவலியுடையரா யிருந்தும் பசிக்கொடுமையால் இதைச் செய்தனர் எனத் தெரிகிறது. "மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை, தானம் தவம் முயற்சி தாளாண்மை, தேனின்–கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்"என்பது ஔவையாரின் அருள்வாக்கு.

"குடிப் பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கலவிப் பெருபுணை விடூஉ, நாணணி களையுமாணெழில சிதைக்கும், பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும், பசிப்பிணி யென்னும பாவி"

என்றுர் பிறரும். தன்னுற்சாரப்பட்டாரிடத்துள்ள எல்லா நன்மைகளையும் அழித்தற்கொடுமை பற்றிப் பசியைப் 'பாவி' என்றும 'அழிபசி' யென்றும் இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களையழித்து அதனுல் வருமுடம்புக்குத் துனபஞ்செய்தலின் 'தீப்பிணி' என்றும பெரியோர் கூறியிருக்கின்றனர். பசிப்பிணி ஒருவனைப்பற்றியதும் அவனது குணங்களெல்லாம் பேதப்பட்டு மனநதடுமாறிப் புத்திகெட்டுச் சித்தங்கலங்கி வலியழிந்து பிராணன் சுழல்கின்றது. கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது. காது கும் மென்று செவிடுபடுகின்றது. நாவு

(தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

இல்லறத்திற்குரிய குணம் மனையாளிடத்திலையேல் அவ்வில்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைத்தாயினும் பயனில்லை.

கதைப்பகுதி.

# உத்தம மனைவி.

(திரு. பொன். குமாரவேற்பிள்ளை.)

(முற்றொடர்.)

"என் அருமைச் சகோதரி, நன்று கூறினை! யான் ஒன்று கருதியிருக்க நீ ஒன்று கூறுகின்றாய். நற்குணம் படைத்த ஒருவனை உனக்கு மணம்புரிந்து வைக்கலாம் என்பதே என்கருத்து. இதுவே தற்காலச் சமூகச் சீர்திருத்தக்காரனின் கொள்கையாகவிருக்கவும் நீ நளாயினியையும் கண்ணகியையும் பின்பற்றுகின்றாய். மறுமணம் செய்தல் வசை எனக்கருதும் உயர்குலப் பெண்கள் சிலரால்லவா பல பெண்கள் கணவனிறந்தாலும்கூட மறுமணம் புரியாது வாடிவதங்குகின்றனர்" என்றாள் கண்மணி.

"தங்காய், நீ கூறுவது நம்நாட்டுக்குப் புதியதன்று. கணவனை இழந்த ஒருத்திக்கு மறுமணம் செய்யாது அவளைத் தம் எண்ணப்படி சிறையிலடைக்கும் தென்னிந்தியர்க்கே உன் கூற்றுப் புதியதாகும். நம் நாட்டுப் பெற்றோர்கள் தம் புதல்வியர் விதவையராவார்களானால் அவர்களுக்கு மறுமணம் புரிந்துவைக்கப் படும்பாடு சிறிதன்று. பெண்கள் முன்னேற்றத்தில் நம்நாடு அவ்வளவு கீழ்நிலையையடைந்திருக்கவில்லை. நம் நாட்டில் உள்ள பெருங்குறை என்னவெனில் பெற்றோர் பிள்ளைகட்கு அவர்களின் நலத்துக்காக அவர்கள் எண்ணத்துக்கு மணம் செய்யாது தங்கள் நலத்துக்காகத் தங்கள் எண்ணத்திற்குட்டுமே செய்கின்றனர். இது வெறுத்தொதுக்கவேண்டியது. தன் நாயகன்மீதுவைத்த உண்மை அன்புகாரணமாகப் பத்தினித் தன்மையராய் வாழ்பவரை நம்நாட்டார் தெய்வமாகப்போற்றுமியல்பினர் என்பதும் நீயறிந்ததே. இளம் விதவைகளையும் கணவனிறந்த பின்னரும் மணம்புரிந்து வாழவிரும்பும் வயதேறிய விதவைகளையும்மணம்செய்ய வொட்டாது தடுக்கும் மூடக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிய எழுந்த தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் கற்பு, காதல் என்பனவெல்லாம் வெறும் கற்பனையே எனக்கூறி இந்தியப் பெண்ணுலகம் அடியோடு அழிந்துபோவதற்கு அடிகோலுகின்றனர். கற்பெனப்படுவது கற்பனையாயின், அன்பு, அருள், வாய்மை என அவர்கள் அடிக்கடி கூறும் சொற்களும் பொருளற்றனவாம் என்பதை அவர்கள் உணராதிருத்தல் முழூமடமையாலன்றி மற்றெதனாலென்பது. ஒருவன் தன்னைத் தன் மனைவிக்கும், ஒருத்தி தன்னைத் தன் கணவற்கும் உரிமையாக்கல் கற்பனையெனின், இப்போலிச் சீர்திருத்தக்காரர்கள் உங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் உங்கள் தாய் நாட்டுக்கு உரிமையாக்குங்கள் எனக் கூறுவது வெற்றுரையேயன்றோ! தங்கள் நாட்டுக்காக இன்பவாழ்க்கையைத் தியாகஞ்செய்பவர்களும் கற்புடையவர்களே. தன் நாயகன் இறந்தால் அவன்மீதுள்ள அன்புப்பெருக்கால் மறுமையில் அவனுடனுறைதல்வேண்டி இவ்வுலகின்பந் துறந்து வாழ்பவள் கற்புடையவளே. இங்ஙனமியற்றும் ஆடவனும் கற்புடையவனே. இன்னும் அப்போலிச் சீர்திருத்தக்காரர்கள் மற்றைய நாடுகளில் உள்ளோர் தங்கள் வாள்வலியாலும் தோள்வலியாலும் அறிவுவலியாலும் ஒற்றுமைவலியாலும் வீர சுதந்திரம் பெற்று நலம் பலவெய்தி வாழ்வதைக் கண்ணாரக் கண்டுகொண்டிருந்தும் தங்கள் அங்ஙனமியற்றுவதைவிடுத்துக் கூட்டங்கள்கூடித் திண்மை என்பது சற்றேனும் இல்லாத தம் இனத்தவரைப்போன்று பெண்ணினத்தையும் அமைத்திட எண்ணிக் கற்பெனும் திண்மையை விடுமின்! விடுமின்! எனவும் கூறுகின்றனர். புரைதீரக் கல்லாப் போலிச் சீர்திருத்தக்காரர்தான் இங்ஙனம் கூறுகின்றனரா! இல்லை! இல்லை! தமிழ்நாட்டின் நிகரில் அறிஞரெனப் போற்றப்படும் ஆசிரியர் மறைமலையடிகளார் கூடக் கற்பெனப்படுவது கணவன் சொற்கடவாது நடத்தலே எனவும் எத்தனை கணவன்மாரை இழந்திழந்து மருவினும் அவ்வக்காலத்து அவரவர் சொற்கடவாது நடத்தல் ஒன்றே கற்பென்னும் திண்மையாம் என்னும் கருத்துறவும் நுட்ப ஆராய்ச்சி செய்கின்றார். அம்மம்ம! இப் பேராசிரியரே இங்ஙனம் கூறுவாரானால் மற்றையோர் என்றான்செய்யார். கண்மணி, நீயும் அவர்களைப் பின்பற்றியவளாகவேயிருக்கின்றாய். நளாயினியையும் கண்ணகியையும் பின்பற்றுதல் பிழையென நீ கருதுகின்றாய். அவர்களைப் பின்பற்றுவதினால் நம் நாடு சீர்கேடடைந்துவிடாது. அவர்களின் ஒளியே இன்றுவரை இந்தியப் பெண்ணுலகைக் காத்துவருகின்றது. அவர்களைப்போல் ஒருபெண் இன்று இங்கு தோன்றுவாளேல் தன் சுதந்திர உணர்ச்சியை ஒவ்வொருவர் உள்ளத்திலும் உகுத்துத் தன்போல் வீரசுதந்திர ஆவேசம் அடையச்செய்து எண்ணியவற்றை எண்ணியபடியே இயற்றத் தவறுவாளோ? மிருகத்தன்மை விரவிய மக்கட் கூட்டமானது பல்லாயிரம் ஆண்டுகட் கொருவராய்த்தோன்றும் பெரியோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுதலினாலல்லவா சற்று ஒழுங்கான வழியில் நடந்துகொண்டிருக்கின்றது. பெண்களானோர் யாவரும் அவர்களைப் பின்பற்றுவதுடன் காலத்துக்கேற்ற சில மாறுபாடுகள் செய்துகொள்ளலாம். இம்மாறுபாடுகள் கற்பைத் தழீஇயனவாயிருத்தல் வேண்டும்" என்றாள் மனோன்மணி.

"மனோன்மணி, உன் விரிவுரையை நிறுத்து. கண்மணி உன் மறுமொழியை நன்கு ஆராய்ந்து நாளைக் கூறு. அறிஞர்கள் சிலர், "மொழிப் பயிற்சிமட்டும் கல்வியாகாது, உணர்ச்சியே கல்வி" எனப் பலமுறை பேசக்கேட்டுள்ளேன். அஞ்ஞான்று அவர்கள் கூறுவதன் கருத் தென்னவென்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. இன்று மனோன்மணியின் பேச்சு அதைப் புலப்படுத்திற்று" என்றார் மாசிலாமணிப்பிள்ளை.

"எல்லாவற்றையும் அமைதியாக நாளைக்குப் பேசலாம், எழுந்து சாப்பிடுங்கள்" என்றார் மாரிமுத்தம்மையார்.

"இச் செய்திகள் யாவும் யாண்டறிந்தனை? என்னும் பழையகேள்வியையே மீட்டும் எழுப்பினார் மாசிலாமணிப்பிள்ளை.

"என் உடன்பிறந்தாள் நீங்காத் துயருழக்க யான் இன்பந்துய்த்தேனே. இஃது உங்களாலல்லவா? என் சகோதரிக்குற்ற இன்னலைப்பற்றி எனக்கு இதுவரை அறிவியாதிருந்த உங்கள் உள்ளம் இரும்போ! பெரும் பாறையோ!!" என்றாள் கண்மணி.

"உன் சகோதரி இச்செய்தியை உனக் கறிவிக்காதிருக்கும் வண்ணம் பன்முறை மன்றாடிக் கேட்டுக்கொண்டமையாலன்றோ யான் என்கடமையைச் செய்யாதிருந்தேன்" என்றார் மாசிலாமணிப்பிள்ளை.

"இச்செய்தியை, உனக்குக் கல்வியில் மனவூக்கம் செல்லாவாறு தடுத்துவிடும் எனக் கருதியே அறியப்படுத்தவில்லை" என்றாள் மனோன்மணி.

(தொடரும்)

சரித்திரப்பகுதி [பதிப்புரிமை ஆசிரியர்க்கே உரியது]

# "இலங்கைச் சரித்திரக் கதைகள்"

[சுன்னாகம் மயிலணிச் சைவ வித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் எழுதியது.]

(முற்றொடர்)

## II. எல்லாள மன்னனின் ஆட்சி.

எல்லாளன் இலங்கைக்கரசனாகி, அநுராதபுரத்திலிருந்து அரசியல் நடத்தினான். இவன் சைவசமயத்தவனாயிருந்தபோதும், சிங்களசாதியாருக்கும் புத்தசமயத்திற்கும் ஒருவித இடுக்கண்ணுஞ் செய்திலன். இவனுடைய நீதித் திறனைக்குறித்துப் பலகதைகளுள.

அரசன் தன் சயன மண்டபத்தில் ஒரு மணியைக் கட்டுவித்தான். அம்மணியில் நீளமான ஒரு கயிறு கட்டப்பட்டிருந்தது. அக்கயிறு அரண்மனை வாயிலில் தொங்கவிடப்பட்டது. அரசனுக்குத் தங்குறைகளை முறையிட விரும்புவோர் அக்கயிற்றை இழுத்து மணியைஅடிப்பார்கள். அரசனும் உடனே அவர்களை அழைத்து விசாரணைபுரிவான.

ஒருநாள் மன்னரின் மகன் தேர் செலுத்தி விளையாடும்போது பசுக்கன்றொன்றைத் தேர்ச்சில்லால் நெரித்துக் கொன்றுவிட்டான். அதைக் கண்ட தாய்ப்பசு துயரம்பொறுக்க முடியாது, கயிற்றை இழுத்து மணியை அடித்தது. மணிச்சத்தங் கேட்டதும் அரசன் வெளியே வந்து பார்த்தான். பசுவொன்று கயிற்றைக் கௌவிநிற்பதைக் கண்டான். கண்டு அதிசயித்தான். எல்லாளன் அதிகம் யுக்தியுள்ளவன். உடனே பசுவின் குறையை அறிந்துகொண்டான். தன அருந்தவப் புதல்வனே பசுக்கன்றைக் கொன்றான் என அறிந்த அரசன், ஒரு கொலைஞனை வரவழைத்தான். வரவழைத்துத் தன் மகனைத் தேர்ச்சில்லால் நெரித்துக் கொல்லும்படி கட்டளையிட்டான். மந்திரிமார் மகனைக் கொல்லவேண்டாமென்று மன்னனை இரந்துநின்றனர். நின்றும் பயன் என்னை? அரசன் நீதியிற் றவறாதவன். தமர், பிறர் என்னும் பேதம் பாராட்டாதவன். தன் தீர்ப்புப்படியே மகனைக் கொலைசெய்வித்தான். பின் "உயிருக்கு உயிர்" என்று சொல்லிக்கொண்டு துக்கத்துடன் அரண்மனைக்குச் சென்றான்.

வேறொருநாள் ஒருகிழவி வெயிலில் கொஞ்ச நெல்லைக் காயவிட்டுத் தன் வேலைகளைச் செய்துகொண்டிருந்தது. உடனே அகாலமழை பெய்து நெல்லை நனைத்துவிட்டது. பாவம்! கிழவி அதிகம் வறியவள். நனைந்த அவ்வளவு நெல்லுமாத்திரமே கிழவியிடத்திலிருந்தது. ஆகையினால உண்பதற்கொன்றுமில்லாமல அதிக வருத்தத்துடன் அரச அரண்மனையைநோக்கி நடந்தாள். அரண்மனை வாயிலையடைந்ததும கயிற்றை இழுத்து மணியை அடித்தாள். மணிச்சத்தத்தைக்கேட்ட அரசன் கிழவியிடத்தில் வந்தான். வந்து அவளின் குறையை விசாரித்தான். கிழவியுந் தனக்கு நேர்ந்த கெடுதியைச் சொன்னாள். உடனே அரசன் அவளைத் தேற்றிப் பல உணவுப்பொருள்களைக் கொடுத்து வீட்டுக்கனுப்பினான். பின் பல நாட்களாக, விரதமனுட்டித்துத் தேசத்தில் மாதந்தோறும் மூன்று மழை இராக்காலத்தில் பெய்யவேண்டுமென்று தேவுக்களைப் பிரார்த்தனை செய்தான். அதன்பின், அப்படியே மாதமும்மாரி இராக்காலத்திலேயே பெய்ததெனக் கூறப்படுகின்றது.

இன்னொருநாள் அரசன் தன் தேரில் மிகுந்தலைமலைக்குச் சென்றான். அங்கிருந்து திரும்பி அநுராதபுரிக்கு வரும்போது தேர்ச்சில்லுகளிலொன்று, ஒரு புத்த சமாதியில் தற்செயலாகத் தட்டியது. தட்டவே சமாதியிலிருந்து சில செங்கற்கள் உடைந்து விழுந்தன. அரசனுடன் தேரிற் சில மந்திரிமாருஞ் சென்றனர். அவர்களிலொருவன் புத்தசமயத்தைச் சேர்ந்தவன். சமாதியிலிருந்து செங்கற்கள் விழுவதைக் காண அவனுக்கு மனஞ் சகிக்கவில்லை. உடனே அவன் எல்லாளனை நோக்கி, "நீர் எங்களுக்கு அரசனாயிருப்பதால் பரிசுத்த கட்டடங்களை இடிப்பதற்கு உரித்துடையீர் என்று நினைக்கிறீர்" என்று சொன்னான்.

எல்லாளன், தான் செய்தது பிழையென உணர்ந்தான். தான் சமாதியை ஊறுபடுத்த வேண்டுமென்று எண்ணிச்செய்ததாகச் சனங்கள் அபிப்பிராயப்படுவார்களே என்று மனம்வருந்தினான்; நீதியற்றவன் என நிந்திப்பார்களென மனங்கலங்கினான். உடனே இரதத்திலிருந்து நிலத்தில் விழுந்தான். விழுந்து தன்னைத் தேர்ச்சில்லால் நெரித்துக் கொல்லும்படி அம்மந்திரியை இரந்து கேட்டான்.

தமிழரசனைத் தொலைத்துவிடுவதற்கு இது ஏற்ற தருணமல்லவா? இருந்தும் அம்மந்திரி அரசனில் அன்புகொண்டு "அரசனே! எங்கள் புத்தபகவான் உயிர்க்கொலை செய்யக்கூடாதென்று உபதேசித்திருக்கிறார். அப்படியிருக்க, நான் எப்படி எங்கள் அரசனைக் கொல்லுவேன்," என்று கூறினான். பின் எல்லாளன் அச்சமாதியைத் திருத்தஞ் செய்வித்தான்.

இப்படியாக எல்லாளன் 44 வருடகாலமாய்த் தமர் பிறரென்றும், சைவர் புத்தரென்றும், செல்வர் வறியவரென்றும் பேதம் பாராட்டாது செங்கோலோச்சி, ஈற்றில் கைமுனு என்னும் சிங்கள அரசகுமாரனுடன் ஆடிய யுத்தத்தில் மடிந்தான்.

## அறிவித்தல்.

சியேட்ட பாடசாலைத் தராதரபத்திர வகுப்பு.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஷெ வகுப்பிற் படிக்க விரும்புவோர், வரும் செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்குமுன்னர் ஷெ பாடசாலையிற் சேரும்படி அறிவிக்கப்படுகின்றனர். ஏற்ற விடுதி வசதியும் அளிக்கப்படும்.

திருநெல்வேலி, 20—8—35.

இங்ஙனம்
வ. நடராசா
தலைமைஆசிரியர்.

இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ, னில்லவள் மாணாக் கடை.

# இலங்கைக்கு அரசியல்சீர்திருத்தம் எட்டவா? கிட்டவா?

## சேர் ஜயதிலகரும் – லண்டன் நிருபரும்

(கொழும்பு நிருபர்)

கொழும்பு, ஆகஸ்டு 21.

"அரசியல் சீர்திருத்தம் இப்பொழுது உங்களுடைய கவனத்தைப் பெறவேண்டியதில்லை. அது இப்பொழுது கிடைக்கும் என்பதற்கு அறிகுறிகள் காணப்படவில்லை......... சீர்திருத்தத்துக்குச்சார்பாக 1931-ல் இருந்த ஏகமனதான அபிப்பிராயம் இப்பொழுது இல்லை அரசாங்க சபையிலிருந்து சீர்திருத்தத்துக்கு முயற்சிசெய்வதாக வாக்களித்து அங்குசென்றவர்கள்கூட சீர்திருத்தத்தை ஆட்சேபிக்கிறார்கள். எனவே அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான எவ்வித வேண்டுகோளையும் குடியேற்றநாட்டுமந்திரி தற்பொழுது கவனிக்கமாட்டார் என நான் அபிப்பிராயப்படுகிறேன். சீர்திருத்தத்தைக்காட்டிலும் சமூக ஒற்றுமை இப்பொழுது முக்கியமானதாக விருக்கின்றது."

இவ்வசனங்கள் ஸ்ரீமான். க. பாலசிங்கம் அவர்கள் ஒன்றரை வருடத்துக்குமுன், யாழ்ப்பாணத் தமிழருக்கு விடுத்த அரசியல் கடிதத்தில் காணப்படுகின்றன. லண்டனிலிருந்து தற்பொழுது கிடைத்திருக்கும் செய்தி இவ்வசனங்களின் உண்மையைப் புலப்படுத்துகிறது. சேர். ஜயதிலகா, இங்கிலாந்துக்குப் புறப்பட்டபொழுது அவர் அரசியல் சீர்திருத்த விஷயமாகக் குடியேற்றநாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசுவார் என்று பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை. எனினும் அவர் இது விஷயமாகக் குடியேற்றநாட்டு மந்திரியைச் சந்திப்பது நிச்சயம் என விஷயமறிந்தோர் எதிர்பார்த்தார்கள். அவரும் அவ்வாறு செய்யத் தவறவில்லையென இப்பொழுது தெரிகிறது.

சேர். ஜயதிலகர், குடியேற்றநாட்டு மந்திரியும், ராம்சே மக்டோனல்டின் மைந்தனுமான திரு. மல்கொம் மக்டோனல்டைச் சந்தித்து, இலங்கை அரசியலைச் சீர்திருத்துவதன் அவசியத்தை எடுத்துக்காட்டினாரென்றும், அவர் கூறியவற்றைத் திரு. மக்டோனல்ட் வெகு அனுதாபத்துடன் கேட்டாரென்றும் அப்பொழுது குடியேற்றநாட்டுக் காரியாலய முக்கிய உத்தியோகத்தர்களும் பிரசன்னமாயிருந்தார்களென்றும் ஷை லண்டன் செய்தி கூறுகிறது. இன்னும் சேர். ஜயதிலகா, பிரிட்டிஷ் தேசாளுமன்ற அங்கத்தினர் பலரைக்கண்டு சம்பாஷித்தார் என்றும், முக்கியமாகத் தொழிற்கட்சி அங்கத்தினர் சிலரைச் சந்தித்தார் என்றும் தெரியவருகிறது.

ஆனால், இந்தச் சம்பாஷணைகளினால் ஏதாவது பயன் உண்டாகுமா? என்று வாசகர்கள் கேட்கலாம். இதற்குச் சேர் ஜயதிலகாவே பதிலளித்திருக்கிறார். "இலங்கைக்குச் சமீபத்தில் அரசியல் சீர்திருத்தம் கிடைக்குமெனத் தாம் நம்பவில்லையெனச் சேர் ஜயதிலகா என்னிடம் ஒப்புக்கொண்டார்" எனத் திரு. பிரெடரிக்கிரப் என்பவர் தெரிவிக்கிறார். திரு. கிரப். சென்னை "ஹிந்து", கொழும்பு, "டெயிலிநியூஸ்" முதலிய பத்திரிகைகளின் லண்டன் நிருபராய்ப் பலவருடங்களாக விருந்து தொண்டாற்றியவர். இந்த ஆங்கிலேயர் இலங்கையின் உத்தம நண்பர்களுளொருவர். சேர். ஜயதிலகாவுடன் தாம் லண்டனில் நிகழ்த்திய சம்பாஷணையின் விவரத்தை இவர் "டெயிலிநியூஸ்" பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறார்.

சேர். ஜயதிலகாவின் முயற்சி பலிக்காததன் காரணத்தைக்குறித்துத் திரு. கிரப் தமது சொந்த அபிப்பிராயத்தைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்:— மந்திரிகளின் அரசியல் சீர்திருத்த அறிக்கைக்கு அல்லது அதைப்போன்ற வேறு பத்திரங்களுக்கு இலங்கையில் பலமான பொதுசன ஆதரவு இருக்கிறதெனத் தெரியவரின் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் அவற்றிற்கு அதிக மரியாதையளிப்பார்கள். முற்போக்கான மனப்பான்மையுள்ளவர்கள் தங்கள் உரிமைகளைப் பலமாக வற்புறுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் சீர்திருத்தத்துக்குச் சார்பாகப் பலமான உணர்ச்சி இலங்கையில் இருப்பதாக இங்குள்ளவர்களுக்குத் தோன்றவில்லை. மேலும், வகுப்புவாதிகளும் அங்கு சும்மாவிருக்கவில்லையெனத் தெரிகிறது. அவர்களும் சமீபத்தில் குடியேற்றநாட்டுக் காரியாலயத்திற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்.

ஆனால், தற்பொழுது இருப்பதைக்காட்டிலும் அதிக அரசியல் அதிகாரம் வேண்டுமென இலங்கையர் கேட்கும் கோரிக்கை நியாயமற்றது என்பதைச் சனநாயகக் கொள்கையில் நம்பிக்கையுள்ள எவரும் மறுக்கமாட்டார்கள். நிர்வாகசபை ஆட்சிமுறையிருந்துவரும் வரையும் அரசாங்க சபைக்கு ஜவாப்தாரியானதும் கொள்கையில் ஒற்றுமைவாய்ந்ததுமான மந்திரிசபை ஏற்படமாட்டாது."

### இலங்கையும் இந்தியாவும்

இந்தியாவுக்குப் புதிதாக அளிக்கப்பட்டிருக்கும் அரசியல் திட்டத்தைப்பற்றி திரு. கிரப், விசாரித்தபொழுது சேர். ஜயதிலகா பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்தாராம்:— "இந்தியாவின் புதியதிட்டம், இலங்கை, ஏற்கனவே பெற்றிருக்கும் அரசியலைக்காட்டிலும் அதிக முற்போக்கு வாய்ந்ததாகக் காணப்படவில்லை. இந்தியா விஷயத்தில் இன்னும் அங்கீகரிக்கப்படாத இரு முக்கியமான கொள்கைகள் எங்கள் அரசியல் திட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றன. வயதுவந்த யாவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பது ஒன்று. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டிருப்பது மற்றது. துரதிர்ஷ்ட வசமாகப் புதிய அரசியல் திட்டம் இந்தியாவில் வகுப்புப்பிரிவினைகளைப் பலப்படுத்தக்கூடியதாகவிருக்கிறது. நாங்கள் இலங்கையில் இந்த ஆபத்தை விலக்கிவிட்டோம். ........ இந்தமாதிரியான திட்டம் எங்களுக்கு வேண்டாம். மந்திரிகளின் அரசியல் சீர்திருத்த அறிக்கை கூறும் முறை இதிலும் மேலானது."

இந்தியாவுடன் இலங்கை அதிக அரசியல் ஒற்றுமை வைத்துக்கொள்ளுவது விரும்பத்தக்கதா எனத் திரு, கிரப் கேட்டபொழுது, சேர். ஜயதிலகா, இலங்கையானது இந்திய சமஷ்டி அரசியலில் ஒரு மாகாணமாக இருப்பதைக்காட்டிலும் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் ஒரு தனிநாடாகவிருப்பது மேலானது என்றும், இரு நாடுகளுக்கு மிடையில் அரசியல் ஐக்கியம் ஏற்படுவது விரும்பத்தக்கதாயிருந்தாற்கூட அது காரியசாத்தியமாகவிருக்கமாட்டாதென்றும்கூறினாராம்.

சேர். ஜயதிலகா, இங்கிலாந்திலிருந்து ஜேர்மன், பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குச் சென்றுவிட்டுச் செப்டம்பர் மாதம் 21-ந் தேதி ரூலன் துறைமுகத்திலிருந்து கொழும்புக்குக் கப்பல் ஏறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வரவுசெலவுத்திட்ட வக்கரிப்பு

## இதுவரை 37 பேர் பேசிவிட்டனர்

பெண் அங்கத்தினர் பேச்சு

பூதல்வரி நீக்கவேண்டியதன் அவசியம்

## திரு விஜயரத்தினவின் தீர்க்கமான பதில்

(கொழும்பு நிருபர்)

கொழும்பு, ஆகஸ்ட் 22.

அடுத்தவருட வரவு செலவு திட்டத்தைப்பற்றி அரசாங்க சபையில் நேற்றுவரை 37 அங்கத்தினர் பேசினார்கள். பொதுவாக இவர்கள் யாவரும் மந்திரிசபையினர் ஒரு சிறந்த வரவு செலவு திட்டத்தைத் தயாரித்திருப்பதாகவும், திரு சேனநாயக்கா அதைத் திறமையானமுறையில் சபைக்குச் சமர்ப்பித்ததாகவும் அபிப்பிராயப்பட்டார்கள். இவர்களுள் பதினாறுபேர் இறந்தவர்களின் ஆதனங்கள் மீது விதிக்கப்படும் பூதல் வரியை (Death Duties) நீக்குவதை ஆதரித்தும் ஆறுபேர் அதை எதிர்த்தும் பேசியிருக்கிறார்கள். இருவர் தற்போதைய பூதல்வரிச் சட்டத்தைத் திருத்தி யமைக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

அரசாங்க சபையிலுள்ள இரு பெண் அங்கத்தினரும் பேசிவிட்டார்கள். பொதுமக்களுடைய மனதைக் கவரக்கூடிய பல அம்சங்கள் வரவு செலவுத்திட்டத்தில் இருப்பதாகவும், இறக்குமதித்தீர்வை குறைக்கப்பட்டதையும் பூதல்வரி நீக்கப்பட்டதையும் நீர்ப்பாசனவரி ஒருவருடகாலத்துக்கு இல்லாமற்பண்ணப்பட்டதையும் தாம் வரவேற்பதாகவும், ஆனால் ஏழைகளைப்பாதிக்கும் இன்னும் சில வரிகளை மந்திரிசபையினர் குறைக்க முன்வாராததற்காகத் தாம் வருந்துவதாகவும் ஸ்ரீமதி A. F. மொலமூரே (ருவான்வலை) கூறினார்.

ஸ்ரீமதி நேசம் சரவணமுத்து வரவு செலவு திட்டத்தை இவ்வாறு வரவேற்கவில்லை. அவர் அதற்குப்பதிலாக வரவு செலவு திட்டம் பணம் படைத்த முதலாளி வர்க்கத்தினரின் நன்மைக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்றும், இவ்வாறு இன்னும் சில வரவு செலவு திட்டங்கள் தயாரிக்கப்படுமானால் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையில இங்கிலாந்து போன்ற மேனாடுகளில் அடிக்கடி ஏற்படும் தகராறுகளைப்போல இங்கும் தகராறுகள் ஏற்படக்கூடுமென்றும், பூதல்வரியை நீக்குவதற்குப் பதிலாக அதிலிருந்து கிடைக்கும் பணத்தைக்கொண்டு ஏழை வயோதிபர்களுக்கும் நோயாளருக்கும் உதவி புரியலாமென்றும் கூறினார்.

மந்திரிகளுள் திரு பெரிசுந்தரமும், திரு. பனபொக்கேயும் பேசியிருக்கிறார்கள். திரு. பெரி சுந்தரம் தமது நிர்வாகசபையின் வருங்கால வேலைத் திட்டத்தைக்குறித்து ஒரு விரிவான சொற்பொழிவு நிகழ்த்தினார். யப்பான் ஜவுளி இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் இலங்கைக்கு நன்மைஏற்பட்டிருக்கிறதென்றும், "சோயாபீன"மீது உள்ள தீர்வையைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் அதிகரித்திருப்பதால் அதிக கொப்பராவை இனிமேல் இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பமுடியுமென்றும் இந்தியாவுடன் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்துகொள்ளும் நோக்கத்துடன் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சிலரை இங்கு அழைக்க மந்திரி சபையினர் யோசிக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

சுகாதார சேவைகளுக்காக அரசினர் ஒவ்வொரு வருடமும் 10,440,000 ரூபாய் செலவுசெய்து வருகின்றனர் என்றும், அரசாங்க சபையின் ஆயுட்காலத்தில் வைத்தியசாலைக் கட்டிடங்களுக்காக மொத்தம் 1,845,844 ரூபாய் செலவுசெய்யப்படுமென்றும், இலங்கையிலுள்ள ஆஸ்பத்திரிகள் இந்நாட்டுக்குக் கௌரவம் அளிக்கக்கூடியவை யென்றும் திரு. பனபொக்கே கூறினார்.

திரு. ஜியோர்ஜ் E. டீ சில்வாவும் (கண்டி) திரு. E.A.P. விஜயரத்னவும் (கேகாலை) அரசியல் சீர்திருத்த விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டனர்.

அரசியல் சீர்திருத்தம் மற்ற எல்லா விஷயங்களைக்காட்டிலும் முக்கியமானதென்றும் இலங்கையர் அதிக அரசியல் அதிகாரம்பெறுவதற்குத் தகுதியுடையவர்களென்பதை அரசாங்கசபை அங்கத்தினர் நிரூபித்துவிட்டனரென்றும், தற்போதைய அரசியல் திட்டத்தின்கீழ் சிங்களருக்கு என்னென்ன நன்மைகள் கிடைத்தனவோ அவை யாவும் மற்றச் சமூகத்தினர்களுக்குங் கிடைத்திருக்கின்றனவென்றும் திரு.டீ சில்வாகூறினார்.

அரசியல் சீர்திருத்தத்தைப்பற்றித் தற்காலீக சபைமுதல்வர் (திரு. சேனநாயக்கா) தமது பேச்சில் எதுவும் கூறாமல்விட்டது தமக்கு அதிக ஏமாற்றத்தை விளைவித்திருப்பதாகவும், பிரிட்டிஷ் அதிகாரிகளிடமிருந்து இதுவிஷயமாக ஏதாவது உறுதிமொழி கொண்டுவர சேர் ஜயதிலகா தவறுவாரானால் அவருடைய தலைமையில் இந்நாட்டு மக்கள் திருப்தியடையமாட்டார்களென அவருக்கு இப்பொழுதே அறிவித்து விடுவது நல்லதெனவும் தருணம் வாய்க்கும் பொழுது அரசாங்கசபை அங்கத்தினர்களின் கோரிக்கைக்குச் சார்பாக அரசாங்க சபையிலுள்ள மூன்று பிரதம உத்தியோகஸ்தர்களும் சாட்சியம் கொடுப்பார்களெனத் தாம் நம்புவதாகவும் திரு. விஜயரத்ன கூறினார்.

சர்வ கலாசாலையைக் கண்டியில் ஸ்தாபிக்காமல் கொழும்பில் ஸ்தாபிக்கவேண்டுமென்று திரு. நெவின்ஸ் செல்வத்துரை கூறிய யோசனையைக் கண்டிப்பகுதி அங்கத்தினர்களான திரு. ரத்நாயக்கா, திரு. காலியட்ட, திரு. ஜியார்ஜ் E. டீ சில்வா முதலியோர் பலமாக ஆட்சேபித்துப் பேசியிருக்கிறார்கள்.

சென்றசெவ்வாய்க்கிழமை சபையிலுள்ள பிரபல அங்கத்தவர்களுள் இருவரான சேர் ஹென்றி டீ மெல்லும் திரு. விஜயரத்னவும் பேசினார்கள். படித்த வாலிபர்களுக்கு வியாபாரப்பயிற்சி யளிப்பதற்காக அரசினர் முயற்சி எடுக்கவேண்டுமென்றும், கிராமப் புனருத்தாரண வேலைக்காகக் குறைந்தது 10 லட்சம் ரூபாயாவது அடுத்தவருடத்தில் செலவுசெய்யப்படவேண்டுமென்றும் சேர் ஹென்றி டீ மெல் கூறினார்.

பூதல்வரியை நீக்குவதன் அவசியத்தைப்பற்றித் திரு. விஜயரத்ன ஒரு சிறந்த பேச்சு நிகழ்த்தினார். இந்தவரியால் கிடைக்கும் வருவாயில பெரும்பாகம் அன்னியரால் கொடுக்கப்படுகிறதென்ற கூற்று உண்மையானதல்லவென்றும், 1927-28-ல் சேர்ந்த தொகையில் 100-க்கு 65 வீதப்பணத்தை இலங்கையர் கொடுத்தனர் என்றும், 1932-33-ல் சேர்ந்த தொகையில் 100-க்கு 73 வீதம் பணத்தை இலங்கையர் செலுத்தினர் என்றும் அவர் கூறினர்.

# ரொக்கப் பரிசு ரூபா 850!

## பெரிய ரொக்கப் பரிசுகள்

புதுமையான இந்த நவினப் போட்டியில் அவசியம் ஜயிக்கவேண்டும்!

களிப்பையும் ஊக்கத்தையும் தரும் இந்தப் போட்டிக்கு ரொக்கப்பரிசுகள் ரூ. 850 வழங்கப்படும்.

## முதற் பரிசு ரூ. 500

2-வது பரிசு ரூ. 250

3-வது பரிசு ரூ. 100

தவிர, 200 சந்தோஷப்பரிசுகள் ஒவ்வொன்றுக்கும் 12 லக்ஸ்டொய்லெட்ஸோப் பெரிய கட்டிகள் கொடுக்கப்படும்.



எத்தனை தேங்காய்கள் இந்தப் படத்தில் இருக்கின்றன?

படத்தில் காட்டியிருப்பது ஒரு தென்னை மரம். இலங்கையிலுள்ள தென்னைமரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்தான் ஸன்லைட்ஸோப் செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. ஸன்லைட்ஸோப் செய்வதற்கு வேண்டிய மற்றெல்லா சாமான்களையும்போல இந்த எண்ணெயும் நன்றாய் சுத்தி செய்த பின்பே சேர்க்கப்படுகிறது. தூய்மையான சரக்குகளால் மட்டுமே ஸன்லைட் ஸோப் செய்ய முடியும்—அதனால்தான் ஸன்லைட் ஸோப் எப்பொழுதும் ஒரே தன்மையுள்ள பரிசுத்த ஸோப்பென்று உத்திரவாதம்செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இப்படத்தில் உங்களால் பார்க்க முடியும் தேங்காய்கள் எத்தனை என்பதை எண்ணி, அந்தத் தொகையை இதனடியில் இருக்கும் கூப்பனில் எழுதிப் பின் உங்கள் பெயரையும் விலாசத்தையும் எழுதுங்கள். அப்படி எழுதிய கூப்பனுடன், ஸன்லைட்ஸோப் பெரிய இரட்டைக் கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொயிலெட் ஸோப் பெரிய கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொய்லெட் ஸோப் சிறிய கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 9ஐயும் சேர்த்து ஒரு கவரில் போட்டு மூடி அடியில் கண்டபடி விலாசம் எழுதி தபால்மார்க்கம் அனுப்புங்கள்.

**விலாசம் எழுதவேண்டிய விபரம்:—**

"ஸன்லைட் ஸோப் போட்டி"
**ஏ. சங்கரய்யர் அன் சன்ஸ்,**
91, குமாரவீதி, புறக்கோட்டை,
தபால்பெட்டி 366, கோழும்பு.

**இந்த போட்டிபந்தயம் 7-9-35அன்று முடிவடையும். இத்தேதிக்கு பிறகு வந்துசேரும் கூப்பன்கள் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.**

சரியானவிடை அல்லது கூடியவரை சரியான விடை அனுப்புபவருக்கு முதற்பரிசு அளிக்கப்படும் இதரப் பரிசுகள் மறறுமுள்ள விடைகளின் மகிமைக்குத்தக்கவாறு வழங்கப்படும்.

பலபேர் சரியான விடை அல்லது கூடியவரை சரியான விடை அனுப்பியிருந்தால் ரொக்கப் பரிசுகளை அவர்களுள் சம பங்கிட்டுக் கொடுக்கப்படும. சந்தோஷப் பரிசுகளை மற்றுமுள்ள விடைகளின் மகிமைக்குத் தக்கவாறு வழங்கப்படும். இந்தப் போட்டியின் விடையை ஸீல் போட்ட கவரில் கொழும்பு நாஷனல் வங்கி ஆபீஸில் ஒப்படைத்திருக்கிறது. போட்டி முடிவு தேதிக்குப் பிறகே ஷெ கவர் திறக்கப்படும்.

பரிசளிப்பவர்:—
லீவர் பிரதர்ஸ் லிமிட்டெட்,
போர்ட் ஸன்லைட், இங்கிலாந்து.

### கூப்பன்.

இந்தப் படத்தில் நான் கணக்கெடுத்திருக்கும் தேங்காய்களின் தொகை ..................

பெயர் ..................

விலாசம் ..................

..................

நீங்கள் எத்தனை விடைகள் வேண்டுமென்றாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு கூப்பனுடனும் ஸன்லைட் சோப் பெரிய இரட்டைக்கட்டிகளை சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொய்லெட் சோப் பெரிய கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொய்லெட் சோப் சிறிய கட்டிகளைச் சுதறியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 9ஐயும் சேர்த்து அனுப்பவேண்டும். இப்போட்டி சம்பந்தமாக யாதொரு விதமான கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. ஸன்லைட்சோப் கம்பெனியாரின் தீர்ப்பே முடிவானதாக ஒப்புக்கொள்ளவேண்டும். இப்போட்டியின் முடிவுதிட்டங்கள் இந்தப் பதிரிகையில் 29-9-35 அன்று பிரசுரிக்கப்படும்.





### பறக்கும் விமானங்களை வெடிக்கச்செய்யும் ஒளி

டென்மார்க்கில் வசிக்கும் ஹேறவின் என்னும் விஞ்ஞான சாஸ்திரி ஒருவர் ஆகாயத்தில் பறக்கும் விமானங்களை வெடிக்கச்செய்யும் ஒரு ஒளியைக் கண்டுபிடித்திருக்கின்றாராம். அந்த ஒளியை உண்டாக்கும் யந்திரத்திலிருந்து 60 மைலுக்கு அப்பால்செல்லும் விமானமும் ஒளிபட்டவுடன் வெடிக்குமாம். இவரை இங்கிலாந்திற்கு வருமாறு அழைக்கப்பட்டிருக்கின்றனரென அறிகின்றேம்.

### மாங்கனிகளில் வீரசத்தி

அல்பென்சோ சாதி மாங்கனியின் சதையிலும், தோலிலும் வீரசத்தி (C) அதிகம் இருப்பதாகவும், எல்லா மாங்கனிகளிலும் வெண்ணெயிலுள்ளளவு வீரசக்தி (A) இருப்பதாகவும் லண்டன் நகரத்தில் நடத்திய ஆராய்ச்சியில் டக்றர் சில்வா என்பவர் கண்டுபிடித்திருக்கின்றனரென அறிகின்றேம்.

### டீ வெலறு

அயர்லாந்துதேசத்தின் சுதந்தர வீரனுகும் டீ வெலறு என்பவர் அபிஸீனியாவிற்கும் இத்தாலிக்கு மிடையில் சமாதானங்கொண்டுவருவதற்காக முன் வந்திருக்கின்றாராம்.

அவர் ஜெனிவாநகரில் நடக்கவிருக்கும் சர்வதேசமகாநாட்டில் சமுகமாயிருந்து தமது தேசத்தின் எண்ணங்களை வெளியிடுவதாகவும், இத்தாலியர் சர்வதேசமகாநாட்டவரின் தீர்மானத்தை கைக்கொள்ளாவிடின் அபிஸீனியருடன் சேர்ந்து சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்குத் தம்மாலான மட்டும் உதவிபுரிவதாகவும் வெளியிட்டிருக்கின்றாராம்.

### றேடியோ காட்சிச்சாலை தீக்கிரையாயிற்று

சென்ற 19-ந்உ ஜெர்மனியில் பெர்லின் நகரில் நடைபெற்ற றேடியோ என்னும் மின்சாரக் காட்சிச்சாலையில் மின்சாரக் கம்பிகளினுல் உண்டான அக்கினிப் பொறிகளினுல் தீப்பற்றியது. அங்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களில் இலேசாக அக்கினி பிடிக்கக்கூடியதாகவிருந்ததனுல் 3 கட்டடங்களில் தீப்பற்றிச் சுவாலை 150 அடி உயரத்திற்கு எரிந்ததாம்.

காட்சிச்சாலையைப் பார்க்கச் சென்றோர் வெளியேறியிருக்கவேண்டுமென எண்ணப்படுகின்றது. ஆயின் 700 அடி உயரத்திலிருந்த மேல்மாடியில் விருந்தருந்திக்கொண் டிருந்தவர்களில் அனேகர் இறந்திருப்பார்களென எண்ணப்படுகிறது.

அக்கினி மிகவும் சுவாலையாகி எரிந்ததினுலும் கட்டடத்திற்கு இரும்பு அதிகமாய்ப் பாவிக்கப்பட்டிருந்ததனுலும் நெருப்பணைப்போர் கிட்டிச்சென்று உதவி புரியமுடியாமலிருந்ததாம். எனினும் 400 அடி உயரத்தில் இருந்தவர்களில் 10 பேர் மீட்கப்பட்டனராம்.

### உற்சவம்

நிகழும் யுவ௵ ஆவணி௴ 8-ம்உ (24-8-35) சனிக்கிழமை சிறுப்பிட்டி வல்லைப்புலத்துக் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் கருணுகடாட்சியம் பாளுக்கு துவஷாரோகணமாகி 17உ இரதோற்சவமும் 18உ தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

—கடி.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மையுண் டாகப் பெறின்.

# சுற்றுடல்.

—"வாராந்தன்."

அரசாங்க சபையில் வரவுசெலவுத் திட்ட விவாதம் நடைபெற்றபோது நமது யாழ்ப்பாணப் பிரதிநிதிகளிலொருவர் பல விஷயங்களைக் குறித்துப் பேசாநிற்கையில் சபையைச் சற்றே சந்தோஷப்படுத்துவதற்காக ஓர் செய்யுளை வாசித்துக் காட்டுவதற்குத் தமது மேசையிலிருந்த கடுதாசிக்கட்டுகளை ஒவ்வொன்ருகப் பிரித்துப் பார்த்தார். செய்யுள் எழுதப்பெற்றிருந்த கடுதாசி காணப்படவில்லை. அதற்குப் பதிலாக அன்றுகாலை அவரது பணிமகன் குறித்துக் கொடுத்த வீட்டுக்கணக்கு கையிலகப்பட்டது. இது இவருக்குப் போதியது. இவர் எந்த விஷயத்தைக் குறித்தும் பேச வல்லபம்படைத்தவர். குறிக்கப்பட்ட கணக்கை எவ்வளவு அவசரத்துடன் கண்ணுற்ருரோ அவ்வளவு சீக்கிரத்தில் மனக்கணிதத்தால் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தார். பிடித்ததும் "ஐயா, முட்டையின்விலையேறிவிட்டது!" என்று திரு. செனனுயக்காவை நோக்கி ஆச்சரியமுற்று நின்ருர். விவசாய மந்திரியார் அது உண்மையல்லவென்று பதிலிறுத்தார். அங்கத்தவரின் பணிமகன் கூறுவதுண்மையா? அரசாங்கசபை மந்திரியார் கூறுவதுண்மையா? அங்கத்தவர் முழுக்கணக்கையும் வாசித்திருப்பாரேல் வேறும் அநேக பொருள்களுக்கு விலையேறியிருப்பதாக விளங்கும்.

* * *

## போதுசனசேவை

தன்னயங் கருதாதவர் ஒருவருமில்லையென்பது யாவரும் அறிந்த விஷயம். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வேறெரு பகுதிப் பிரதிநிதி வழக்கம்போல் எழுந்து திரு. செனனுயக்காவுக்கு முகமன்கூறி நின்ருர். ஒருவர் தமக்கிருக்கும் பசியைத் தீர்க்கவே முதலில் யோசிப்பார். பின்னர் தமது சகோதரரை நினைப்பார். பின்னர் தமது உறவினரை ....... அதின்பின்னரே மற்றவர்களை ....... ஆனல் சிலர் மற்றவர்களை அற்பமேனும் யோசிப்பதில்லை. இது வழக்கமே. இந்தப் பிரதிநிதி தாம் வாசஸ்தலமாகக்கொண்ட ஓர் கல்லூரி 14,000 ரூபா பூதல்வரியாகக் கொடுக்கவேண்டியிருக்கிறதெனக் கவலையுற்ருர். பின்னர் தமது ஜெனன பூமியாகிய இந்தியாவுக்கு வியாபார விஷயமாகச் சகாயஞ் செய்யவில்லையெனக் கூறி வருந்தினர். அதன்பின் ஆசிரியருக்கு நேர்சம்பளங் கொடுப்பதையிட்டு ஆவேசங் கொண்டார்.

* * *

## மூன்றுகாலம்

இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமென மூன்றுகாலங்களுண்டு. சிலர் இறந்தகாலத்தைப்பற்றி யோசிப்பதில்லை. நிகழ்காலத்துடனேயே நின்றுகொள்வார்கள். இந்தப் பிரதிநிதி தாம் ஒருகாலம் ஆசிரியராகவிருந்ததை மறந்துவிட்டார்போலும். ஆகவே "ஆசிரியரை ஆதரிப்பதற்காக மனேஜர்மாரை பரிகாசஞ் செய்து கோபமூட்டி விடவேண்டுமா?" என்ருர். "வயிற்றிலடி பெற்றவனுக்கே வருத்தம்" என்றுஞ் சிலர் கூறுவார்கள். மனேஜர்மாராக இருப்பவர்களுக்கே இது பரிகாசமாகத் தோற்றும். மற்றவர்களுக்கென்ன? என்பதும் ஒருசார்பாரின் கூற்று. இறந்தகாலமானது, நிகழ்காலமாகின்றது, எதிர்காலம் அல்லது வருங்காலம் வரும். தங்களைச்சேர்ந்த விஷயங்களைச் சபையில் பேசும் அங்கத்தவர்கள் இந்த மூன்று காலத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வ தவசியம்.

## காதலின் பலன்

யப்பானிய தேசத்தில் ஒசக்கா வென்னுமிடத்திலொருவர் ஓர் நாட்டுப் பகுதியைச் சேர்ந்த கன்னிகை மீது காதல் கொண்டார். இதை வெளியாக்ககூற இவரதுநாணம் விடவில்லை. தமது மூளையைக்கொண்டு தம்மாலியன்றளவு யூகித்தார். இவளது வீட்டுக்குத் தீமூட்டி விட்டால் வீட்டிலுள்ளவர்கள் அவஸ்தைப் படுவார்கள். அச்சமையம் அவளை அந்த அவஸ்தையின்றும் மீட்டுவிட்டால் அவள் தன்னை மணஞ்செய்துகொள்வாள் என்று மனதிலோர் மாளிகை கட்டினர். இவரது புத்தி இவரைச் சிறைச்சாலைக் கனுப்பிவைத்தது. தீமூட்டுஞ்சமையம் ஒருவர் இவரைக் கண்டுவிட்டார். கண்டதுங் கைதி செய்யப்பட்டார். இந்த மூடசிகாமணியைத் துணைவனுகக்கொள்ளாது தப்பிக்கொண்ட கன்னிகையின் விதியே விதி. இங்குள்ளவர்களிற் சிலர் வீட்டுக்குத் தீமூட்டாது விரும்பிய பெண்ணுக்கே தீமூட்டி விடுவார்கள்.

* * *

## வெள்ளையரின் சீற்றம்

நுவரெலியாவில் ஓர் வெள்ளையர் பெற்ரேல் விற்பவர் ஒருவரை "மூகத்தை நொருக்கிப்போடுவேன்" என்றுகூறி அவமானப்படுத்திய குற்றத்திற்காக ரூபா ஐந்து அபராதம் விதிக்கப்பட்டது. உண்மையில் நொருக்கியிருந்தால் தண்டனை வேறு நிற்க, இதுபோன்ற அவமரியாதையான பாஷைகள் தலைகாட்டாது தவிர்க்க அபராத விபரங்கள் குறித்துவைத்தல் அவசியம்.

| | | |
|---|---|---|
| "மூக்கைநொருக்குவேன்" | ரூபா | 5-00 |
| "மூக்கைக்கடிப்பேன்" | .... | 2-50 |
| "பல்லுடைப்பேன்" | .... | 2-00 |

இத்தவிதமாக மற்றக் குற்றங்களுக்கும் குறித்துக்கொள்ளலாம்.

* * *

## சாரதியும் போலிசாரும்

சென்றகிழமை பம்பலப்பிட்டியில் ஓர் மோட்டார் ரதச் சாரதியைப் பொலிசார் "விருந்தில்" பிடித்துப் பொலிஸ்தானத்துக்கு வரும்படி கட்டளையிட்டார்கள். சாரதி ஓர் றிக்ஷோவில் ஏறி உல்லாசமாக இருந்துகொண்டு தம்மால் நடந்துவர முடியாதென்றும் விருப்பமானல் கார் கொண்டுவந்து ஏற்றிக்கொண்டுபோகும்படியும் கீழேநின்ற பொலிசரைப் பார்த்துக் கூறினர். பொலிசார் நடந்துசெல்லவேண்டுமென வற்புறுத்தினர்கள். சாரதி பிடிவாதமாக இருந்துகொண்டார். ஏராளமான சனங்கள் இதைப்பார்த்துச் சந்தோஷித்துநின்ருர்கள். பொலிசாரும் ஒன்றுஞ்செய்ய வியலாது நின்ருர்கள். இது பொலிசாரின் வழக்கமே. கெஞ்சினல் மிஞ்சுவர், மிஞ்சினல் கெஞ்சுவர்.

* * *

## நரைமயிர்மாற்றம்

தற்போது பிரித்தானிய மந்திரி சபையில் அன்னியநாட்டு மந்திரியாக விருப்பவரும் முன்னர் இந்திய மந்திரியாக விருந்தவருமான சேர். சாமுவேல் ஹோர் ஒரு விருந்துக் கூட்டத்தில் ஓர் விஷயத்தை வெளியிட்டார். லண்டனில் ஓர் சித்திரவேலைக்காரியின் வேண்டுகோளுக்கிணங்கி தமது அங்க உருவத்தை மெழுகினற்செய்ய உத்தரவளித்தார். உருவம் செய்தாயது. இவர் உருவத்தைப் பார்த்தபோது லோயிட்ஜோர்ச் அவர்களினுடைய நீண்ட நரைமயிர்கள் இவரது தலையில் வைக்கப்பெற்றிருந்தது. அநேகர் இந்த உருவத்தை லோயிட்ஜோர்ச்சினுடையதென்று பிழையாக கவனித்துக் கொண்டார்களாம். சேர். ஹோர் மற்றவர்களின் அங்க அவயவங்களைத் தனக்கு வைத்துக் கொள்ளல் தகாதென்றும் தமது திறமையை தாம் செய்திருக்கும் சேவைகளிலிருந்தே அறிந்துகொள்ள வேண்டுமென்றும் இந்திய மந்திரியாகவிருந்தபொழுது தாம் காந்தியை இடதுபக்கத்திலும் அநேக இந்தியக் குடி அரசர்களை வலதுபக்கத்திலும் வைத்து விஷயங்களைக் கையாண்டு வந்தாரென்றும் கூறிநின்ருராம்.

# இந்தியச் செய்திகள்.

## காங்கிரஸ்தலைவர்க்கு உபசரணை

காங்கிரஸ் தலைவராகும் பாபு இராசேந்திரப்பிரசாத் அவர்கள் ஒக்டோபர் மாதம் 10-ந் திகதி சென்னை வந்து சேருவாராம். அவர்க்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கவேண்டுமென முன்னர் சென்னை நகரசங்கக் கூட்டமொன்றில் பிரேரிக்கப்பட்டும் அது நிறைவேருதாயிற்று. இப்போது மறுபடியும் அத்தீர்மானம் அச்சபையில் பிரேரிக்கப்படுமாம். இவ்விஷயத்தையிட்டு மேற்படி நகரசங்கத்தின் பொதுக்கூட்டமொன்று விரைவில் கூட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் தலைவர் சென்னையில் கூடவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் நிர்வாக சபை, காங்கிரஸ் காரிய நிர்வாகசபை என்னுங் கூட்டங்களை முடித்துக்கொண்டு காங்கிரஸ் கொள்கைகளைச் சனங்கட்கு எடுத்துரைத்தற்காகத் தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணஞ்செய்வார்.

## சேர் பஸில் பிளாக்கேட்

ரீடிங்பிரபு இராசப்பிரதிநிதியாகவிருந்தகாலத்தும் அதன் பின்னரும் இந்திய அரசாங்கத்தின் வரவுசெலவு மந்திரியாகவிருந்த சேர் பஸீல் பிளாக்கெட் என்பவர் ஜெர்மனியில்நடந்த மோட்டார் அபாயங் காரணமாகஇறந்துவிட்டாரெனக் கேள்வியுற்று மிகத் துயரமானேம். இந்தியாவின் பணநிலை பெரிதும் சீர்கெட்டிருந்தகாலத்தில் அதனைச் சீர்ப்படுத்தும் நோக்கமாக ரீடிங்பிரபுவால் அழைக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தவர். இவரது அரிய வன்மையை யாவருமறிவர். பண விஷயங்களில் இவர்க்கிருந்த ஆற்றல் மிக வதிகமென்றே கூறவேண்டும். இவருடைய ஆழ்ந்த அறிவின்பயனுக இவர்க்கு எத்தனையோ வியாபாரசமுதாயங்களின் தலைமை இவர்க்கு அளிக்கப்பட்டது. மாதவீதம் 5000 பவுணுக்குமேல் வரும்படி பெற்றுவந்தார். இவருடைய பிரிவு பொதுவாக பிறிட்டிஷ் அரசினர்க்குப் பெரும் நட்டமாகும்.

## பத்திராதிபர்கள் கூட்டம்.

சென்றவாரம் கல்கத்தாவில் இந்தியப் பத்திராதிபர்களின் கூட்டம் மிக விமரிசையாக நடைபெற்றது. சமீபத்தில் சிறையிலிருந்து விடுதலையடைந்த சரற்சந்திரவஸு என்பவர் அக்கூட்டத்தைத் திறந்துவைத்தனர். காந்திகோஷ் என்பவர் உபசரணைச் சங்கத்தின் தலைவர் என்ற பதவியில் ஓர் நீண்ட பிரசங்கம் செய்தார். இந்தியப்பத்திரிகைகள் சிறிதுசிறிதாக தூக்கிக்கொல்லப்படுவதாகக் கூறினர். இப்போதிருக்கும் பத்திரிகைச் சட்டங்கள் நிரந்தரமாகவிருப்பின் இந்தியப் பத்திரிகைகளெல்லாம் அழிந்தொழியுமென்றும் கூறினர். பத்திரிகைகள் நிலைபெற்று நாட்டிற்குப் பெருநன்மை புரியவேண்டில் அரசினர் பத்திரிகைகட்கு உரிமைகளை அளிக்கவேண்டுமென்றனர். அரசினர் குறைகளை எடுத்துரைக்கும் உரிமை இல்லாதிருப்பின் பின் பத்திரிகைகளால் ஏற்படும் பயன் யாது என்றனர்?

## பண்டிதர் ஜவஹரலால்நேரு

பண்டிதர் ஜவஹரலால்நேரு ஒருகால் அக்டோபர் மாதம் விடுதலையடையக் கூடுமெனச் சொல்லப்படுகின்றது. இவரது சிறைக்கால எல்லை அடுத்த மாசிமாதத்துடன் முடிவதாயினும் வழக்கப்படி ஏற்படும் கழிவு காலம் கொடுக்கப்படின் மேற்கூறியவாறு விடுதலையடைய வேண்டுமென்பது பலர் அபிப்பிராயம். லக்நோவில்கூடவிருக்கும் காங்கிரஸ் மகா சபையின் உபசரணைச் சங்கத் தலைவராக இவர் தெரியப்பட்டிருக்கிருர். இப்போது இவர் சிறைச்சாலையில் தமது இருப்பிடத்துக்கருகாமையில் ஓர் தோட்டம் ஏற்படுத்தி அதில் வேலைசெய்கிருராம். அடுத்த காங்கிரஸ் சபை முடிந்தவுடன் ஐரோப்பா சென்று தமதுமனைவியாரைச் சந்திப்பார். இவரது பாரியார் இப்போது பேர்லின் நகரில் சிறிது சுகமடைந்து வந்ததாகவும் பின் சிறிது நோயதிகரித்ததாகவும் புதினங்கள் கூறின. இப்போ கிடைத்த புதினப்படி இவ்வம்மையார் விரைவில் நோய்நீங்கி நல்லாரோக்கியம் பெறுவாரென வைத்தியர் அபிப்பிராயப்படுகின்றனராம்.

## புத்தகாயா

புத்தகாயா ஆலய விஷயமாக ஒரு நிர்வாகசபையினர் யோசித்து ஒரு திட்டம் வெளியிட்டது நேயர்கள் ஞாபகத்தில் இருக்கக்கூடும். நான்கு புத்தர்களும் நான்கு இந்துக்களுஞ்சேர்ந்த சபையினர் மேற்படி ஆலயத்தைப் பரிபாலிக்கவேண்டுமென்றும் அச்சபையின் தலைவர் ஒரு இந்து மந்திரியாராக வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது. இத்திட்டம் இந்து மகாசபையாராலும் புத்தப் பிரதிநிதிகளாலும் தயாரிக்கப்பட்டது. இது யாவராலும் ஏற்கப்படுமென நாம் எண்ணியிருந்தோம். இப்போது சனுதன தர்மக் கட்சியினரும், மேற்படி ஆலயத்தின் பரிபாலகரான மகந்து என்பவரும் இத்திட்டத்தைச் சிறிதும் அங்கிகரிக்கின்ருரில்லை. ஆகையால் பழையபடி இந்தியச் சட்டசபையில் முன்கொண்டுவரப்பட்ட தீர்மானம் விவாதத்துக்குக் கொண்டுவரப்படும். சங்கராச்சாரிய சுவாமிகளும் இத்திட்டத்தை ஏற்கின்ருரில்லை. இந்துக்களது முழு ஆதிக்கத்தில் இவ்வாலயம் இருக்கவேண்டுமென்பது இவர்கள் விருப்பம்போலும். தமது பரம்பரை உரிமையை மறந்து அவர்கள் விட்டுக்கொடுக்கப் பிரியப்படுகின்ருரில்லை. இத்தகராறு எப்போது தீருமோ?

## இந்துக்களின் கோவில் கிறீஸ்த ஆலயமாக மாறறப்படலாமா?

சமீபத்தில் சேலம்சில்லாவிலுள்ள ஒரு கிராமத்தில் வசித்த 60 ஹரிஜன வகுப்புக் குடும்பங்களில் 59 குடும்பத்தினர் கிறீஸ்தவ ராயினர். அவர்கள் முன் வணங்கிவந்த இந்து தேவாலயம் இப்போது கிறீஸ்தவ ஆலயமாக்கப்பட்டதாம். ஒருசமய ஆலயம் இன்னெரு சமயத்தவரின் ஆலயமாக்கப்படுவது ஒருபோதும் செய்யக்கூடிய விஷயமன்று. இவ்விஷயமாக இந்து மகாசபையார் சேலம் கோட்டில் ஒருவழக்குத் தொடுக்கப் போகின்றனர். இந்துக்களால் வணங்கப்பட்ட ஆலயம் எப்படி இன்னெரு சமயத்தவரால் மாற்றப்படலாம். சனங்கள் சமயத்தை மாறினல் அவர் தங்கள் புதிய சமயப்படி ஓர் ஆலயத்தைக்கட்டி வணங்க வேண்டியதே முறை. இந்துக்களால்வணங்கப்பட்ட ஆலயம்கிறீஸ்தஆலயமாவதுஎப்படிப் பொருந்தும். இந்துக்கள் வசம் அவ்வாலயம் ஒப்படைக்க வேண்டியதே முறையாகும்.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்;
யுவஹூ ஆவணிமீ கூ௨

# அரசியல் திருத்தம் சமீபத்தில் ஏற்படுமா?

தற்போது இலங்கையில் அனுசரணையி லிருக்கும் டொனமூர் அரசியற்றிட்டத்தில் ஏற்பட்டுள்ள குறைகளோ பல, வெளித்தோற்றத்தில் இலங்கைக்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டதாகக் காணப்படினும், உண்மையை ஆராய்ந்து பார்த்தால் எல்லாம் போலியாகவே இருக்கக்காணலாம். சென்ற நான்கு வருடங்களாக இப்புதிய திட்டத்தை பிரத்தியட்சத்தில் பரீட்சித்துப் பார்த்த மந்திரிமாரும் அரசாங்கசபை யங்கத்தவரும் இதையறியாதிருக்கவில்லை. அறிந்தாராயினும் உண்மையைச் சாதித்து நின்று பொது சனங்கட்குத் தமது அபிமானத்தைக் காட்டினரில்லை. இத்திட்டத்தின் குறைகளை அரசினர்க் கெடுத்துரைத்து விரும்பியபடி திருத்திக்கொள்ளலாமென அவர்கள் எண்ணினர்.

அரசாங்க சபையின் பிரதம மந்திரியாராகும் கௌரவ D. B ஜெயதிலக்கா அவர்கள் இப்போது லண்டனில்வைகின்றனர். ஏகாதிபத்திய தேசாளுமன்றங்களின் பிரதிநிதிகளின் மகாநாட்டில் சமுகமளித்தற்கே அவர் இலங்கையிலிருந்து சென்றாராயினும், அவர் இலங்கையின் அரசியற்றிட்டம் திருத்தப்படும் விஷயமாகவும் சிறிது அக்கறைகொண்டவராகக் காணப்பட்டார். இற்றைக்குச் சில மாதங்கட்குமுன் இலங்கை மந்திரிமார் தயாரித்த ஒரு திட்டத்தை அவர் குடியேற்றநாட்டு மந்திரியார்முன் சமர்ப்பித்தனர். மந்திரியார் இவர் எடுத்துரைத்த திட்டத்தை ஆவலுடன் செவிமடுத்தாராயினும் அத்திட்டத்தை ஆதாரமாகக்கொண்டு புதிய திருத்தங்கள் சமீபத்தில் அரசாங்க சபையமைப்பில் ஏற்படுமெனச் சொல்லவியலாதாகின்றது.

மந்திரியார் சமர்ப்பித்த அரசியற்றிட்டத்தை பிரிட்டிஷார் எப்போது கவனிப்பர்? எடுத்துரைத்தளவில் எல்லாம் முடிந்துவிடுமா? இல்லை. முதலாவதாக இலங்கையில், அரசியலில் திருத்தங்கள் வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்படவேண்டும். ஒவ்வொரு மாகாணங்களிலும் ஒவ்வொரு பிரிவுகளிலும் அரசியல் விஷயமாகப் பொதுசனங்கள் ஊக்கமுடையராய்த் தமக்கு உரிமைகள் அரசினர் அளிக்கவேண்டுமென விடாப்பிடியாக நின்று வாதாடவேண்டும். அப்போதுதான் அரசினர் நமக்குச் சுதந்தரங்களும் உரிமைகளும் ஓரளவுக்காவது அளிக்க முன்வருவர். நாட்டில் எவரும் அரசியல் விஷயத்தைக் குறித்து அக்கறைகொள்ளாதிருக்க, கொழும்பிலுள்ள சிலர் தாமேதேசப்பிரதிநிதிகள் எனக்கூறி எடுத்துக்காட்டுவனவெல்லாம் இலங்கை மக்களின் வேண்டுகோளாகுமா? இலங்கைப் பிரதம மந்திரியார் என்ன கூறினென்? பிரிட்டிஷார் மௌனஞ் சாதிப்பது நிச்சயம். கேட்கப்படும் கோரிக்கைகட்கிசைய நாட்டிலும் அரசியற் கிளர்ச்சிகளும் ஆரவாரமும் வேண்டாமா? குடியேற்றநாட்டு மந்திரியாகும் மல்கொம் மாக்டொனல்ட் அவர்கள் இலங்கையின் அரசியல் நிலையை ஊகித்து அறிந்துவிட்டனர்.

மேலும், அரசியற்றிருத்தங்கள் ஏற்படாதிருப்பதற்கு இன்னோர் நியாயமும் உண்டு. மந்திரிமாரது திட்டத்தை முற்றாகக் கண்டித்து, தமிழர், பறங்கிகள் முதலிய குறைந்த தொகையினராம் வகுப்பினர் பிரிட்டிஷ் அரசினர்க்கு பெரிய மனுப்பத்திரமனுப்பியுள்ளார். அன்றியும் குறைந்த தொகையினராம் வகுப்பினர்க்கு விசேஷ உரிமைகளும் அவசியமெனக் கேட்டுள்ளார். விஷயமிவ்வாறாக, அரசியற் றிட்டத்தில் திருத்தம் சமீபத்தில் ஏற்படுவதென்பது இலகுவா? மேலும், இப்போது அதிகாரத்தை வகிக்கும் சிங்களர் அரசினரைத் திருப்திசெய்து அனேகஉரிமைகளைப்பெற்றுவிடலாமெனவும் எண்ணுகின்றனர். இது உலகசரித்திரத்துக்கு முற்றும்மாறாகும். சுதந்திரத்தைநாடிக் கிளர்ச்சியும் தியாகமும் செய்யாது எந்நாடாவது பொறுப்பாட்சியையும் சுதந்திரத்தையும் இதுவரையும் பெற்றதில்லை. இதைச் சிங்களர் உணராதிருக்கும்வரையும் திருத்தமேது? மீட்சியேது?

இப்போது இலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் தேசநன்மையை நாடித் தொண்டாற்றுகிறாரா? உத்தியோகங்களையும், அரசாங்கசபையங்கத்துவத்தையும் பெறுதற்கு வழி யாதென யோசிப்பதே இவர் முழுநோக்கமுமாகின்றது. தேசநலம் மூலைக்குள் ஒதுக்கிவிடப்படுகிறது. அடுத்த தெரிவும் சமீபிக்கின்றது. அதற்குவேண்டிய ஆயத்தங்களே இப்போது செய்யப்படுவன. தெரிவுகாலங்களில்மாத்திரம் சுயராச்சியம் வேண்டும்! வேண்டும்!! எனக் கதறிநின்று யாவரையும் ஏமாற்றமுயல்வர். பொதுசனங்கள் இவர்களின் நடிப்புக்கு எடுபடாது உறுதியாக நிற்பின், ஒருபோது நமது நாடு நன்மையடையுமெனக் கூறலாம். பொதுசனங்களுக்கு வழிகாட்டிகளாவோர் களங்கமற்றதேசத் தொண்டராகவேண்டும். இவ்வாறன்றிச் சுயநலவாதிகள் அதிகாரமடையில் எல்லாம்கெடுதியாகவேமுடியும். தற்போதைய நிலைமையை நோக்கின் அரசியற்றிருத்தம் சமீபத்தில் ஏற்படாதென்பது திண்ணம்.

## புகையிலை-சுருட்டுத்தொழில் விருத்தியடையவேண்டின்

சென்றவாரம் திருநெல்வேலி அரசினர் கமவித்தியாசாலையில் புகையிலைத் தொழிலைக்குறித்து ஆலோசனைசெய்வதற்கு ஓர் மகாநாடு கூட்டப்பட்டு அனேக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. வடபகுதிக் கமத்தொழிற் பிரதம உத்தியோகஸ்தராகும் திரு. W. R. C. போல் அவர்கள் புகையிலைத் தொழிலின் பரிதாப நிலைமையை உணர்ந்து, அதனைப் பழைய நிலைமையை அடையச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யும் முயற்சிகளை நாம் மெச்சவேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணப் புகையிலைச் சுருட்டுக்கு ஒரு காலமிருந்த மதிப்பு அருகிப்போனதற்குக் காரணங்கள் யாவையென்பதை நாம் முன்னரே பன்முறையும் எடுத்துக் காட்டியுள்ளோம். சுறுட்டுத் தொழிலைச் செய்து பெரும் பொருள் ஈட்டிக்கொள்ளலாமென்ற ஒரே நோக்கத்தையுடையராய்ச் சுருட்டு வியாபாரிகள் தாம் கையாளும் முறைகளின் குறைகளை ஒருபோதும் சிந்தித்துப் பார்த்தாரில்லை. தொழிலை நடத்துவதில் அதிக செலவுச் சுருக்கத்துடன் தாம் தொழிலை நடத்துவதாக எண்ணி மகிழ்ந்தாரேயன்றி, தமது போலித் தொழில்முறை இந்தத் தொழிலுக்குப் பெருநட்டத்தை வருவித்துவிட்டதென இன்னும் உணராதிருப்பது பெருந்துக்கமானகாரியம். யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் சுருட்டுகட்கு முன்னிருந்த மதிப்பில் நூற்றில் பத்துமடங்காவது இப்போது கிடையாதென எவரும் துணிவாகக் கூறுவர். உதவாத சுவையற்ற குப்பைக்கேற்ற புகையிலையைச் சுருட்டுக்குள் பொதிந்து சுருட்டி விற்கும் வியாபாரத் தொழில் இனிது நிரந்தரமாக நடைபெறுமென்று எப்படிக் கூறுவது? ஐரோப்பியரது பொருட்களுக்கு அதிகமானமிருப்பதன் காரணமென்ன? அப்பொருட்கள் எப்போதும் ஒரே குணமுடையனவாயிருக்கின்றமையாலன்றோ. ஊரவர்களை அணுப்பிப் பொருள்பறித்துவிடலாமென எண்ணுவதாலேயே எல்லாக் கெடுதிகளும் தோற்றுகின்றன. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய விடங்களில் தயாரிக்கப்பட்டுவரும் சிக்காற்றுகளை நோக்குவாம். அவைகள் இன்ன குணமுடையன என்பதைப் பாவிப்போர் நன்கு அறிவர். அவை எப்போதும் ஒரேமாதிரியாகவேயிருக்கும். நம்பி விலைக்குப் பெறலாம். அணுப்பு என்பது கிடையாது. சுருட்டுத்தொழிலை யாழ்ப்பாணத்தில் நடத்துவோரில் தமது தொழிலை ஒரேமாதிரியாக நடத்துவோர் எத்தனைபேர் இருக்கின்றனர். ஒருவருமில்லையெனக் கூறினும் பொருந்தும். நிதானத்தைச் சுருட்டுத் தொழில்காரர் கற்றுக்கொள்வதே இப்போது வேண்டப்படுவது.

புகையிலைத் தொழிற்சாலையொன்று அரசினர் ஏற்படுத்திப் பலவிதமான சுருட்டுகளையும் முன்மாதிரியாகச்செய்து காட்டுவதும் பிரதானமான காரியம். சுருட்டு வியாபாரிகளை ஒரு சங்கமாகக் கூட்டி இவ்விஷயங்களை விளங்க வைப்பதும் அவசியம். புகையிலைப் பொருட்காட்சி வைப்பதாலும் சில நன்மைகள் ஏற்படலாம். எல்லாம் பொதுவாகச் சுருட்டு வியாபாரிகளிலேயே தங்கிநிற்கிறது. புகையிலை விஷயமாக யாழ்ப்பாணம் எவ்வளவு நன்மையடையக்கூடுமோ அவற்றையெல்லாம் செய்தற்கு அரசினர் உதவிபுரியவேண்டும். பொதுசனங்களும் அக்கறையுடன் உழைத்தாலன்றி விரும்பிய நன்மைகள் வரப்போவதில்லை. சுறுட்டுத்தொழில் அமைப்புமுறைபற்றியும் அதனால் அடையக்கூடிய நன்மைகளைப்பற்றியும் இன்னொருமுறை விரிவாகக் கூறுவாம்.

## சமயத்துவேஷங்கள்

சென்ற சிலகாலமாகப் பல்வேறு சமயத்தினர்க்குமிடையில் ஒருவித துவேஷமும்ஏற்படாதாக, இப்போது சிற்சில தகராறுகள் நிகழ்வதைக்கண்டு நாம் துயரமடையவேண்டியதாகின்றது. ஒவ்வொரு சமயத்தவருக்கும் தத்தம் சமயம் மேலானதும் உண்மையானதுமென்ற நம்பிக்கையிருப்பது இயற்கையே. ஆனால் மற்றைய சமயத்தவரையும் தம் சமயத்துக்கு இழுக்கவேண்டுமென்ற எண்ணம் எழுங்கால், எல்லா நியாயம் நீதிகளும் காற்றோடு எடுபட்டோடுகின்றன. தமது சமயத்தின் உண்மைகளை நன்கு போதித்து அதன் விசேடங்களை எடுத்துக்காட்டியபட்சத்தில் அதனை மெச்சி அச்சமயத்தைத் தழுவினோரை எவரும் குறைகூறார். இதைவிட்டு மறுசமயங்களை நாடகமூலமாகவோ வேறுவகையாகவோ அவமானப்படுத்திக் கண்டித்துப் பரிகாசம்செய்தும், சன்மார்க்கத்துக்கும் நீதிக்கும்மாறான வழிகளை உபயோகித்தும் மதவிருத்தியைநாடுபவர்களின்செயல்கள்கண்டிக்கப்படவேண்டியிருக்கிறது. இந்துக்களின் மனதைப் புண்படுத்தக்கூடியதான நாடகங்களைக் கத்தோலிக்க சமயிகள் நடிக்கஆரம்பிப்பதும், அதற்கு அச்சமய குருமார் உதவியாவதும் பெரும் இழுக்காகுமன்றோ. கல்வியிற் குறைந்தோர் இவ்வித இழிதொழிலைக் கையாள முற்படினும், குருமாராக விருப்போர்இவ்விஷயங்களிற்தலையிடாதபடி புத்திகூறித்தடுக்கவேண்டாமா? இந்துக்கள்கிறீஸ்தசமயத்தைநாடகமுறையில்கண்டித்துநிற்கின்றனரா? சமயவாதஞ்செய்யவிரும்பின், தர்க்கமுறையில் உயர்ந்தநோக்குடன்நடத்தலாமே. தமது மத அறிவிற்குறைந்தஏழைச்சனங்களின்கண்களைக் குளிரச்செய்வதற்காக இத்தன்மையான வழிகளை அனுட்டிப்பது எப்படி அங்கீகரிக்கப்படலாம்? இவ்வித துவேஷங்களைக் கிளப்புவதால் சிற்சில காலங்களில் பெரிய கலகங்களும் நிகழ்வதாகின்றதே. எல்லாச் சமயிகட்கும் பொதுவாகவிருக்கும் அரசினர், இவ்வித விரோதமான முயற்சிகளை நிற்பாட்டுவரென்பதே எமது நம்பிக்கை. புங்குடுதீவில் நடந்த கொலைகளும் கலகங்களும் இவ்வித நாடகத்தாலன்றோநிகழ்ந்தன. மறுபடியும் சமயவிரோதமான நாடகம் கரம்பனில் நடிக்கக் கத்தோலிக்கர் செய்யும் முயற்சிக்கு அரசினரும் அறிவிற் சிறந்த குருமார் முதலியோரும் இடங்கொடாதிருப்பாராக.

## கடிதம்

### யாழ்ப்பாணம் - மலையாளப் புகையிலை வியாபாரம்.

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

யாழ்ப்பாணத்துக்குப் பணவருவாய்க்குரிய முக்கியமான ஒரேஒரு தொழில் புகையிலைச்செய்கை என்பதை எவரும் ஒத்துக்கொள்ளுவர்.

ஆகையால், இப் புகையிலைச் செய்கையை விருத்திசெய்வது நல்லகாரியமல்லவா? இப்படியிருக்க, யாழ்ப்பாணத்தில் இருக்கும் மலையாளப் புகையிலை வியாபாரிகளும், இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கும் வியாபாரச் சங்கமும் போட்டிபோட்டு இவ்வியாபாரத்தைக் கெடுக்கப்போகிறார்கள் என்பதாக, ஷை வியாபாரத்தி லீடுபட்டிருப்பவரும், புகையிலை வியாபார விஷயத்தை நன்கு அறிந்தவருமாகிய திரு. அ. அப்பாத்துரைப்பிள்ளை அவர்கள், அபிப்பிராயப்படுவதாகக் கேள்விப்படுகிறேன்,

சமீபத்தில் திரு. அ. அப்பாத்துரைப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்ய எண்ணியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையாயின், யான் அவரைத் தயவாய்க் கேட்பது யாதெனில்; பொதுவாக இப் புகையிலை வியாபார சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் போட்டியில் சரிபிழை கூறுவதிலும் பார்க்க, அப்பெரியார் யாழ்ப்பாணத்தின் நன்மையை உண்மையில் விரும்பினவராயின் ஓர் பகிரங்கக் கூட்டத்தைக்கூட்டி, அக்கூட்டத்தில் இவ்வியாபாரத்தின் உண்மையான நிலைபரத்தையும், அதைத்திருத்தும் வழிவகைகளையும், பகிரங்கமாக எடுத்துக்காட்டி விடுவாரானால், அது புகையிலைத் தொழில் செய்யும் கமக்காரருக்கும் வியாபாரிகளுக்கும் மிக நன்மையாயிருக்குமென எண்ணுகிறேன்.

உண்மையை அறிய விரும்புவோன்.

## உபசரணைக் கொண்டாட்டம்

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ந. பொன்னையா அவர்கள் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறுவதால், அவரது பிரிவுபசாரக்கூட்டம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் 31-8-35 சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் நடைபெறுமென ஆசிரிய மாணவ சங்கத்தார் தெரிவிக்கின்றனர்.

# உலக அரசியற் போக்கு.

இத்தாலியர்க்குச் சமாதானமென்ற பேச்சில் பிடிக்கின்றிலது. எப்படியாயினும் அபிஸீனியாவினை தமது ஆதிக்கத்துள் கொண்டுவரவேண்டுமென்பதே அவர்கள் உள்ளக்கிடக்கையாகின்றது. பரிஸ் நகரில் நடந்த சமாதானக்கூட்டம் வீணுக முடிந்தது. இத்தாலியர் தாம் அபிஸீனியாவை வெற்றிகொண்டு அரசியல் விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் கீழ்ப்படுத்தலாமென்றும், இதற்குறுதுணையாக ஒரு பெரிய பட்டாளத்தை அந்நாட்டில் நிரந்தரமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் கருதுகின்றனர். பரிஸ்நகரில் நடந்த கூட்டம் உபயோகமற்றதாய் முடிந்துவிட்டமையால் அடுத்த மாசம் 4-ந் திகதி கூடவிருக்கும் சர்வதேச சங்கக் கூட்டத்தின் முடிவுமவ்வாறேயாகுமெனக் கருதப்படுகின்றது.

* * *

தற்போது பரிஸ் நகரில் இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய மூன்று வல்லரசினரும் கூடிய சமாதானக் கூட்டத்தில் இங்கிலாந்தும் பிரான்சும் கூறியது யாது? (1) அபிஸீனியாவில் இத்தாலியர் பொருளாதார விஷயங்களுக் குறுதுணையாகும் தொழில்களை நடத்தலாம். (2) இத்தாலியர் நாட்டிற்கும் அபிஸீனியாவிற்குமிடையிலுள்ள எல்லைப்புறம் வரையறுக்கப்பட்டு நன்கு காவல்புரியப்படும். (3) அபிஸீனியாவிலுள்ள இத்தாலியர் பாதுகாப்பதற்கு ஏற்ற வசதிகள் உண்டாக்கப்படும். இந்த நிபந்தனைகளை இத்தாலியர் ஏற்றுக்கொள்ளாது விட்டமையால் மேற்படி சமாதானக் கூட்டம் குலைவதாயிற்று. முழுவதையும் விழுங்க நினைக்கும் இத்தாலியர்க்கு இந்த அரைகுறையான சிலாக்கியங்கள் எப்படி ஒத்துவரும்

* *

இப்போது பிறிட்டிஷ் மந்திரி சபையினர் இத்தாலி, அபிசீனியா ஆகிய இரு நாடுகளுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்தும் விஷயத்தில் முற்றுக நம்பிக்கையில்லாதவராயிருக்கின்றனர். எப்போதாவது யுத்தம் ஆரம்பிக்கக்கூடுமென்பது அவர்கள் நம்பிக்கையாகிறது. இத்தாலியர் அபிசீனிய அரசாங்கத்திற்குமேலேநின்று கட்டளையிடுவதைப் பிறிட்டிஷார் ஒத்துக்கொள்கின்றுரில்லை. பிரான்சு தேசப் பிரதிநிதியாகும் மெஸ். லவால் என்பவர் இன்னும் சமாதானத்துக்கு இடமிருப்பதாக எண்ணுகிறுர். இத்தாலியர் பிடிவாதமாகநிற்பதை இவரறிந்தும் இன்னும் நம்பிக்கைகொள்வதற்குக் காரணம் யாதோ? பிறிட்டிஷ் பிரதிநிதியாகும் சேர் அன்றனிஈடின் என்பவர் முற்றுக நம்பிக்கையைக் கைவிட்டனர். மேலும் இத்தாலிய பிரதிநிதிபேசிய விதத்திலிருந்து சர்வதேச சங்கக் கூட்டப்போது சமாதானம் வருமெனநம்ப வியலாதாகின்றது.

* *

யுத்தம் ஆரம்பித்தால் தொடக்கத்தில் இத்தாலியசேனை செல்லவேண்டியதாகவிருக்குமிடம் மிக உயர்ந்தபூமியாம். கெதியாகச்செல்ல வியலாதாம். நாற்றம்நிறைந்த சேற்றுநிலமாம். காட்டுச்சுரம் அதிக வேகமாய்ப் பரவியுள்ளவிடமாம். அபிசீனியரது துருப்புக்கள்ஒழித்திருந்துசண்டைசெய்யும் முறையைக் கையாண்டால் இத்தாலியர் அவர்களை வெற்றிகொள்வது இலகுவான காரியமன்றும். ஆனல் வெளியரங்கத்தில் அபிசீனியர்வந்து இத்தாலியருடன் சண்டைசெய்யின் இலகுவில் தோல்வியடைவாராம்.

* *

இத்தாலிக்கும் அபிசீனியாவிற்கும் யுத்தம் எங்ஙிமிடத்திலும் ஆரம்பிக்கக்கூடுமென்றும் அவ்விஷயமாக வேண்டிய ஆலோசனை செய்தற்கு மந்திரிமார் லண்டனில் நிற்கவேண்டியது அவசியமெனவும் முதன்மந்திரியாராகும் போல்ட்வின் கூறுகின்றுர். ஐரோப்பாவில் நிற்கும் மந்திரிமார் யாவரும் லண்டனைநோக்கிச் செல்கின்றனர். அபிசீனியாவுக்காயினும் இத்தாலிக்காயினும் யுத்த ஆயுதங்கள் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படாதென முன்னர் பிறிட்டிஷ் அரசினர் முடிவுசெய்திருந்தனர். பரிஸில்நடந்த சமாதானக் கூட்டம் குலைந்து விட்டமையால் அவ்விஷயமாக இனி என்னசெய்யவேண்டுமெனவும் பிறிட்டிஷ் அரசாங்க மந்திரி சபையினர் ஆலோசிப்பர்.

* *

இத்தாலியரின் யுத்தவெறியை "மான்செஸ்றர் காடியன்" என்னும் பிறிட்டிஷ் பத்திரிகை மிகக் கடினமாகக் கண்டிக்கிறது. "துரோகம்" என்ற தலையங்கத்துடன் ஒரு விஷயம் எழுதியிருக்கின்றது. இத்தாலியர்வறுமையில்மூழ்க முசோலினி அவசரமின்றி யுத்தங்களைக் கிளப்பித் தேசத்தைப் பாழாக்கிறைராம். யுத்தமேற்படின் ஏற்படுஞ்செலவு எவ்வளவாகுமென முசோலினி அறிவாரா என்கின்றது. அபிசீனியாவுடன் இத்தாலி யுத்தம் ஆரம்பித்தால் அவுஸ்திரியா ஒருபோது இத்தாலிமீது படையெடுக்கக்கூடுமென்றும் அப்படியாயின் இதைத் தடுப்பது எப்படியென்றும் மேற்படி பத்திரிகைகேட்கின்றது. இவ்வித சங்கடங்கட்கிடையில் இத்தாலி கொடிய யுத்தத்தில் இறங்குவது புத்தியீனமான செயலாகும்.

* *

யுத்தம் ஏற்படின் இத்தாலியர் தமது நாடாகும் இறித்திறியாவிற்குச் செல்லும் பாதையாகும் சூயெஸ்வாய்க்கால் வல்லரசுகளால் மூடப்படக்கூடுமெனவும் சொல்லப்படுகிறது. அப்படியாயின் இத்தாலியர் தமது துருப்புக்களுக்கு எவ்வாறு சாமான்களைக் கொண்டுசென்று கொடுப்பாரோ? சூயெஸ்வாய்க்கால் மூடப்படுவதாயின் இத்தாலியர் யுத்தத்தில் வெற்றிகொள்வதும் ஒருபோதும் இயலாதகாரியம். சர்வதேச சங்கத்தின் முடிவான தீர்மானத்தை எந்த நாடு அங்கீகரியாதிருக்கிறதோ அந்த நாட்டின் கப்பல்கள் போகாது அவ்வாய்க்காலில் தடைசெய்யப்படும். இப்போது சர்வதேச சங்கத்தைத் துரும்பாக எண்ணிநிற்கும் நாடு இத்தாலியே. இத்தாலியர்பாடு எல்லாவழியிலும் சங்கடமாகின்றது.

* * *

சர்வதேசசங்கத்தின் மரியாதையையும் கௌரவத்தையும் பிரிட்டிஷ் அரசினர் காப்பாற்றவேண்டுமென அநேக அரசியல் வாதிகள் கூறுகின்றனர். பிரிட்டிஷ் மந்திரிசபையினரின் கூட்டம் 23-8-35ல் கூட்டப்பட்டதாம். ஆலோசனையின்முடிவு இன்னும் வெளியாகவில்லை. அங்கே ஆலோசிக்கவிருந்த விஷயங்கள் பல அடுத்துவரும் சர்வதேச சங்கத்தின் மகாநாட்டில் பிரிட்டிஷ் அரசினர் கையாளவேண்டிய முறைகளாம். மேலும் முஸோலினி பரிஸ் சமாதானக் கூட்டத்தினரின் நிபந்தனைகளைப் பரிகாசத்துடன் ஒதுக்கிய விஷயமும் ஆலோசிக்கப்படலாயிற்றும். சர்வதேசசங்கத்தின் முடிவுகள் நிறைவேற்றப்படவேண்டுமெனப் பிரிட்டிஷாரும் பிரான்சியரும் பிடிவாதமாக நிற்பின் நன்மையுண்டாகும்.

## கடிதம்.

**'ஈழகேசரி'ப் பத்திராசிரியர் அவர்கட்கு:**

ஐயா!

சைவ பரிபாலன சபையாரால் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்கள் உங்கள் பார்வைக்கு இத்துடன் அனுப்பிருக்கிறேன். இவ்விஷயங்களை நன்காலோசித்து வேண்டியதைச் செய்வீர்களென்று எண்ணுகிறேன்.

1. "புங்குடுதீவில் நடிக்கப்பட்ட தமிழ் நாடகம் சமயக்கிளர்ச்சியை உண்டுபண்ணக் கூடுமென யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதியும் உயர்தர நீதிமன்றத்தினரும் அபிப்பிராயப்பட்டுள்ளார்கள். மேலும் இந்நாடகம் அங்கே நடிக்கப்பட்டதன் காரணமாக கொலையும், கலகமும் இந்துக்களுக்கும் கத்தோலிக்கருக்குமிடையில் சம்பவித்தது. இந்நாடகம் இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் தன்மையதாயிருக்கிறபடியால் இதை முற்றுக நிற்பாட்டிவிடும்படி இலங்கை இந்துக்களின் சார்பாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் அரசினரைக் கேட்கின்றனர். மேலும் இவ்விதமான சமயத் துவேஷத்தை உண்டுபண்ணக்கூடிய நாடகங்களை நடிக்கவிடாது தடுப்பதும் அரசினர் கடமையாகும்."

2. "கதிர்காம தேவாலயத்தை வழிபடுவோரில் பெரும்பான்மையோர் சைவ சமயிகளாகையால், அவர்களின் பிரதிநிதிகள் சிலரைத் தெரிந்தெடுத்து மேற்படி தேவாலய பரிபாலன சபையில் சேர்க்கும்படி இலங்கையில் உள்ள இந்துக்களின் சார்பாக யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் இலங்கைத் தேசாதிபதியைக் கேட்கின்றனர். இத்தேவாலயம் இந்துக்களுக்கு மிகவும் பரிசுத்தமானவிடம். இதற்கு அவர்கள் வருடாவருடம் கொடுக்கும் காணிக்கைகள் சிறிதன்று. தற்போது இவ்வாலயத்தைப் பரிபாலிப்போர் இந்துக்களின் தேவைகளைப் பெரிதும் பொருட்படுத்துகின்றுரில்லை. வணக்கங்கட்கும் மற்றும் வழிபாடுகட்கும் போதிய வசதிகளும் இல்லாதிருக்கின்றது."

காரியதரிசி, சைவபரிபாலனசபை
21-8-35. வண்ணர்பண்ணை

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—8

# நாரந்தனைக் கத்திக்குத்து வழக்கு.

## நோட்டுவழக்கின் கோபத்தால் கொலைசெய்ய எத்தனித்தாராம்.

### எதிரி விடுதலைபெற்றுர்.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம், 23

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில், சென்ற வைகாசிமீ 25-ந் தேதியளவில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நாரந்தனை என்னுமிடத்தில் பேதுருப்பிள்ளை—நீக்கிலாப்பிள்ளை என்பவரைக்கத்தியாற்குத்திக் காயம்வருவித்துக் கொலைசெய்ய எத்தனித்ததாக, அவ்வூர் பேதுருப்பிள்ளை—அந்தோனிப்பிள்ளை அல்லது கறுவல்என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய நியாயவாதி வழக்கின் சாராம்சத்தை யூரிமாருக்கு எடுத்துரைத்ததன்மேல் ஊர்காவற்றுறை யூடிஷல் மெடிக்கல் ஆபீசர் டக்றர் L. C. போல் அவர்கள் சாட்சியங் கூறினுர். அதன்பின் ஊர்காவற்றுறைப் பொலிஸ்கோட்டு லிகிதர் திரு. V. T. யோசெப் என்பவர் எதிரிக்கும் வழக்காளிக்குமிடையில் நடைபெற்ற ஓர் வழக்கின் பிரதியைக் கோட்டில் ஒப்படைத்தார். நாரந்தனை வாசியாகிய சந்தியாப்பிள்ளை—சவரிமுத்து சாட்சியங் கொடுத்ததின்மேல் காயமடைந்த பேதுருப்பிள்ளை — நீக்கிலாப்பிள்ளை கூறியவற்றின் சாராம்சம்:

"எனது தந்தையார் இறப்பதற்கு முன்னராக எனதும் எனது மனைவி திவ்வியத்தினதும்பேரில் காணியை அறுதியாக எழுதித்தர நாங்கள் அவற்றின் பெறுமதியாகிய 150 ரூபாவில் 10 ரூபாவைக் கையில் கொடுத்ததுடன் மிகுதியாகிய 140 ரூபாவுக்கும் ஓர் நோட்டெழுதி நடுவுநிலைமை வகித்த சந்தியாப்பிள்ளை-சவிரிமுத்துவிடம் கொடுத்தோம். பின்னர் தந்தையார் இறந்துபோக நானே 118 ரூபாவரையில் செத்தவீட்டுக்குச் செலவழித்தேன். எதிரி ஒருசதமேனும் செலவழிக்கவில்லை. அதனல் சவிரிமுத்து வென்பவர் அந்நோட்டை என்னிடங் கொடுத்தார். இது விஷயத்தைப்பற்றிக் காம்பன் கிராமக்கோட்டில் எதிரி ஓர் வழக்கை வைக்க அச்சங்கத் தலைவர் வழக்கைத் தள்ளிவிட்டார். போனவருடம் நானும் எனது மனைவியுமாகச் சேர்ந்து எதிரிமீதும் அவரது மனைவியாகிய ரோசம்மாமீதும் 2 காணிகளில் ஆட்சிக்கு விடவில்லையென்பதற்காக 70 ரூபா நஷ்டஈடு கொடுக்கும்படி ஊர்காவற்றுறையில் ஓர் வழக்கைத் தொடர்ந்தோம். அவ்வழக்கில் எமது தொகையைச் செலவுகாசுடன் நீதிபதியின் தீர்வையின்படி எதிரியிடமிருந்து அறவாக்கினேம். நோட்டைப்பற்றிய வழக்கைத் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு இருநாட்களின் பின்னர், அதாவது வைகாசி மாதம் 25-ந் திகதியன்று பின்னேரம் 5 மணியளவில் நானும் எனது மனைவியுமாக எமது தோட்டத்தில் நின்று தண்ணீர் இறைத்துக்கொண்டு நிற்கையில், ஒழுங்கையின் எனது தோட்டத்துப் படலையடியில் எதிரி வந்துநின்று உன்னுடைய பெண்டிலை விழுத்தி.........டா என்று பேசினுர். பின்னரும் திரும்பி ஒழுங்கைவழியே சென்றுர் அதன்பின் நாங்கள் தண்ணீர் இறைத்து முடிந்ததின்மேல் வீட்டிற்குப் போவதற்காகச் செல்லும்போது எதிரி எங்களிடம்திரும்பிவந்தார் அப்போதும் எதிரி தூஷணையாகப் பேசிக்கொண்டு வந்ததால் "ஆரைப்பேசுநீங்கள்" எனக் கேட்க, எதிரி "உன்னைத்தானடா" என்று சொல்லியவண்ணம் எனது மயிரைப் பிடித்தார். பிடித்ததும் நான் திரும்பினேன். அதைக்கண்ட எதிரி கத்தியை ஓங்கநான் பக்கத்துத் தோட்டத்தில் நின்றவரைநோக்கி "அருமைநாயகம் கத்தியை ஓங்குகிறுர்" எனக் கத்தினேன். இதற்கிடையில் குத்து விழுந்துவிட்டது. நெஞ்சிலேதான் காயம் ஏற்பட்டது. பின்னர் குத்திப்போட்டாரெனக் குளறிக்கொண்டு இடதுகையால் (இயற்கையிலேயே இடதுகைவழக்காரன்). கத்தியைப் பிடித்துக்கொண்டு வலதுகையால் எதிரியினது கையைத்தட்டினேன். பின்னர் கத்தியை இழுத்து "அருமைநாயகம் எடு" என்று எறிந்தேன். பின்னரும் எதிரி எனது குடுமியைப்பிடித்து எனது பிடரியில் குத்தினுர். அதன்பின் நானும் மயிரைப்பிடித்தேன். ஈற்றில் கிறிஸ்தோ-ஜோசெப்பும், மனுவல்பிள்ளை-அந்தோனிப்பிள்ளையுமாக வந்து எம்மை அப்புறப்படுத்தினர்.

சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி முன்னுக்குப் பின் முரணுகவும் பொலிஸ்கோட்டில் சொன்னவற்றில் சிலவற்றை மறுத்தும் முன் சொல்லாதவற்றைச் சொல்லியும் சாட்சியங் கூறினுர்.

அதன்மேல் சவிரிமுத்து-அமிர்தநாதன் அல்லது அருமைநாயகமும், நாரந்தனைப் பொலிஸ் விதானை S. அல்பிரெட்டும், ஊர்காவற்றுறைப் பொலிஸ் சார்ஜண்ட் 2543 M. S. ஜோசெப்பும் சாட்சியங் கூறினர். இத்துடன் வழக்காளிபக்க விவாதம் முடிவுறறது. அதன்மேல் கிறிஸ்தோப்பிள்ளை-ஜோசேப்பும், மனுவல்பிள்ளை-அந்தோனிப்பிள்ளையும் சாட்சியங் கூறியதின்மேல் வழக்கின் எதிரியாகிய பேதுருப்பிள்ளை-அந்தோனிப்பிள்ளை கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம்:—

"எனது வயது 58. அன்றைய தினம் 5 மணியளவில் ஒழுங்கைவழியாக எனது வீட்டிற்குச் செல்லுகையில் நோட்டு விஷயத்தினுலும் வேறும் மனஸ்தாபங்காரணமாகவும பொதுவாக ஒருவரையுங் குறிப்பிடாது பேசிக்கொண்டு போனேன. அப்போது வழக்காளியும் மனைவியும் தோட்டத்தில் நின்று தண்ணீர் இறைத்துக்கொண்டு நின்றவர்கள் என்னைத் தேடிவந்தார்கள். அவர்கள் வீட்டிற்குப் போவதற்கு வேறோர் குறுகிய வழியிருந்தும் இவ்வழியால் வந்தார்கள். வரும்போதே இவது கையில் கத்தியிருந்தது. என்னைக் கண்டதும் 'என்னடா பேசினுய்' எனக்கேட்க, நான் 'பேசினுலென்னடா' எனச் சொல்ல, வழக்காளி கத்தியைஓங்கினுர். உடனே நான் கையையும் கத்தியையும் சேர்த்துப் பிடித்தேன். பிடித்ததும் அவன் எனது குடுமியைப் பிடித்தான். நானும் அவனது குடுமியைப் பிடித்தேன். இருவரும் இழுபட்டோம். ஈற்றில் கல்லின்மீது அவன கீழாகவும் நான் மேலாகவும் வீழ்ந்தோம். அந்நேரத்தில் கத்தி எங்கிருந்ததென்பது தெரியாது. (கத்தி நெஞ்சின்மீது பட எதிரி அவன்மேல் வீழ்ந்ததாகவும், அதனல் காயம் வந்ததாகவும் எதிரிபக்க விவாதம்) பின்னர் இருவர் வந்து எம்மைப் பிரித்துவிட நான் போய்விட்டேன்.

எதிரியைக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது நீதியரசர் தமது அபிப்பிராயத்தை ஜூரிக்கனவான்களுக்கு எடுத்துரைக்க, அவர்கள் சிறிதுநேர ஆலோசனையின்பின் ஏகமனதாக எதிரி சுற்றவாளியெனக் கூறினர். நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார்.

—நமது நிருபர்.

## தெல்லிப்பழையிற் கத்திவெட்டு

சென்ற 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில், தெல்லிப்பழைகிழக்கிலே நளவ வகுப்பைச் சேர்ந்த இராமன்—சின்னவன் என்பவன் வீட்டிலிருக்கும்போது, அவ்வூரைச் சேர்ந்த சடையன்—காசி, சடையன்—முருகன், சடையன்—சரவணை, மொட்டையன்—கந்தன், மொட்டையன்—தம்பன் முதலியவர்கள் வீடு தேடிச் சென்று அவனை அடித்தனரென்றும், அடிபட்ட சின்னவன் என்பவன் கத்தியால் மொட்டையன்—கந்தனைப் படுகாயமுற வெட்டினுனென்றும், இச்சமையத்தில் அவர்களை விலக்கிவிடச் சென்ற முதலி—சின்னத்தம்பி என்பவனும் காயமுற்றுனென்றும், காயமடைந்த கந்தன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறுனென்றும் அறியக்கிடக்கின்றது.

—நமது நிருபர்

பிறதெய்வத்தைவணங்காது கணவனைத்தொழுதெழுபவள் பெய்யென்றுசொல்ல மழைபெய்யும்

# சொல்லுகிறேன் - - - - கேளுங்கள்!

(ஒருவர்)

## லின்லித்கோ பிரபு

லின்லித்கோ பிரபு வருகிற சித்திரை மாதம் இந்திய இராசப்பிரதிநிதியாவார். இப்பதவியைக் கையேற்றதினால் இவர் வருடாவருடம் ஆயிரக்கணக்கான பவுண்களை இழந்துவிடுவார். இவர் தற்போது ஏழு பெரிய ஸ்தலங்களுக்குத் தலைமை யதிபதியாகவிருந்துவருகிறார். ஸ்கொத்லாந்து வங்கி, J. P. கோற்றஸ் லிமிட்டெட் ஆதியாம் வங்கிகளுக்கும் வேறு சில ஈட்டுச் சங்கங்களுக்கும் தலைமை வகித்துவருகிறார். இராசப் பிரதிநிதியினுடைய சம்பளம் ஒருவருடத்துக்கு 19,000 பவுண். இது விருந்தாளிகளை உபசரிப்பதற்கே போதியதன்று. பிரதானமாக வருகிற ஐந்து வருடங்களுள் இந்தியவிஷயமாக அநேக குடியரசர்களை உபசரித்துச் சம்பாஷிக்கநேரும். இவருடைய தந்தையார் ஒருகாலம் அவுஸ்றேலியாவுக்கு அதி உத்தம தேசாதிபதியாகவிருந்தபொழுது 10,000பவுண் சம்பளம்பெற்று அத்துடன் தமது பணம் 25,000பவுணையும் உபசரிப்பதிற் செலவிட்டார். இதுகாரணமாக இவர் தமது பதவியையும்விட்டு விலகினார். ஸ்கொத்லாந்தில் இவரது இல்லம் மிகச் சிறந்தமாளிகைகளிலொன்றாகும். அன்னி, (20) ஜோன்கோப், (21) என இவருக்கு இரு குமாரத்திகளுண்டு. லேடி டோறியன் என்னும் 15 வயதையுடைய இவரது இளைய மகள் கல்விபயின்றுவருகிறார். இவருக்கு கோப்ரன் பிரபுவும், கோப் பிரபுவுமென இரணைப் பிள்ளைகளுண்டு. இவர்களுடைய வயது 23. லின்லித்கோ பிரபுவுக்குத் தற்போது வயது 48. ஏர்வின் பிரபு 44-வது வயதிலும், கார்சன் பிரபு 40-வது வயதிலும் இந்தியாவுக்கு இராசப்பிரதிநிதியாக நியமனம் பெற்றார்கள்.

## இத்தாலிய—அபிசீனிய சோதிடம்

இத்தாலிய—அபிசீனிய விஷயமாக நமது இலங்கைச் சோதிடர் திரு. புலச்சிங்காலா என்பவரும் எகிப்திய தேசத்திற் பெரும் புகழ்படைத்த புறபெசர் சேயிட் அலிசாலி அசியொன்றே என்பவரும் வித்தியாசப்படுகிறார்கள். திரு. புலத்சிங்காலா ஒரு போதும் யுத்தம் நடவாதெனக் கூறியிருக்கிறார். நமது எகிப்திய சோதிடர் முந்திக்கூறிய விஷயங்கள் பல உண்மையாக நடைபெற்றன. இவர் தற்போது செப்டம்பர்மாத நடுப்பகுதியில் அல்லது அக்டோபர் முதற்பகுதியில் நிச்சயமாக யுத்தம் ஆரம்பிக்குமென்றும், முதலில் இத்தாலி வெற்றிபெறுமெனவும், வெற்றிபெறுஞ்சமையத்தில் கொள்ளைநோய்காரணமாக இத்தாலியப்படை புறங்காட்டி ஓட நேருமென்றும் கூறியிருக்கிறாராம். 1936 மார்ச்சு மாதம்தொடக்கம் 1937 பிப்பிரவரி மாதம் வரைக்கும் ஓர் உலக யுத்தம் நடைபெறுமென்றும் 40 கோடிசனம் யுத்தத்தாலும் வேறு உலக அதிர்ச்சியாலும் அழிந்துபோவார்களென்றுங் கூறியிருக்கிறாராம்.


## NOTICE

I the undersigned **Swaminather - Vetharaniam** of Chunnakam, shall from this day forward sign my name in English as **"A. S. Vetharaniam Pillai"**, and in Tamil **"Avenna. Soona. Vetharaniam Pillai"**.

S. Vetharaniam

Chunnakam
25-8-35


# கலம்பகம்

தற்போது அளைறமுக இஞ்சினியரிங் பகுதியிலுள்ள உதவி என்சினியர் ஸ்தாபனங்கள் எல்லாவற்றுக்கும் இலங்கையருக்குப் பயிற்சியளித்து அவர்களையே நியமனஞ்செய்யவேண்டுமென்பதைப்பற்றிப் போக்குவரத்து மந்திரி நிர்வாகசபையார் யோசித்துவருகின்றனராம்.

o o o

கொழும்பு புறக்கோட்டையில் மதுவிலக்குச்சம்பந்தமாகப் பொதுசனங்களின் சம்மதம் எடுக்கப்படுமாம்.

o o o

இலங்கை அரசாங்கசபையின் பொதுத்தேர்தல் வருகிற ஜனவரிமீ நடைபெறுமெனவும், வாக்காளர் பதிவு புத்தகத்தை சென்னைக்கு அனுப்பி ஒரு மாசத்துள் அச்சிட்டு முடிப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுமெனவுந் தெரியவருகிறது.

o o o

அம்பலாங்கொடை நகரசபையின் காரியாலயம் அமைப்பதற்கென ஸ்ரீமதி அமராசூரியா என்பவர் நிலம் இனாமாக அளித்துள்ளாராம்.

o o o

அம்பாந்தோட்டைப்பகுதியில் மழையில்லாமையால் 2000 எக்கர் நிலத்திலுள்ள பயிர்கள் யாவும் கருகிப்போய்விட்டதாம்.

o o o

காலி நகரசபையின் தலைமை எழுத்தாளர் பதவிக்கு பீ. ஏ. பட்டதாரிகளும் பிறக்றர் ஒருவரும் மனுக்கள் செய்திருந்தனராம்.

o o o

கொழும்பு—கோட்டையைச்சேர்ந்த 7 பேர் 'ரைம்ஸ்' பத்திரிகாலயக் கட்டிடத்தின் பின்பக்கத்தில் சூதாடினார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டனராம்.

o o o

ரூவான்வலையைச்சேர்ந்த கன்னத் தோட்டத்தில் சென்ற 17-ந்உ 2 தொழிலாளருக்கிடையில் நடைபெற்ற கலகங்காரணமாக ஒருவர் கொலைசெய்யப்பட்டாராம்.

o o o

இலங்கைப் புகைரதப்பகுதியிலுள்ள 31 ஸ்ரேசன்களில் போதிய வருமானங் கிடைக்கவில்லையாம்.

o o o

சென்ற திங்கட்கிழமை பார்பர் வீதியைச்சேர்ந்த றிக்ஷோ வண்டியிழுக்குமொருவன் பிரயாணியை றிக்ஷோவண்டியிலேற்றிச்செல்லுகையில் மாரடைப்பினால் திடீரென விழுந்து உயிர்துறந்தாராம்.

o o o

கொல்லனுவா மின்சாரப்பகுதியில் வேலைசெய்துவந்த நாகூர் என்னும் தொழிலாளி சென்ற திங்கட்கிழமை காலை இருவருடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் மாரடைப்புக்காரணமாகத் திடீரென உயிர் துறந்தாராம்.

o o o

கொழும்பு—டாம்வீதியைச்சேர்ந்த இலங்கா விடுதியில் வேலைபார்த்துவரும் எஸ். கணபதிப்பிள்ளை என்பவரை, யாழ்ப்பாண விடுதியின் மானேசரும், விடுதியில் வேலை செய்துவரும் கே. கந்தையா என்பவரும் சருவினார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 15 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பெற்றனராம்.

o o o

சிலாபத்தைச்சேர்ந்த உடப்பு என்னுமிடத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை 12 அடி நீளம், 4 அடி அகலமுள்ள பள்ளத்தில் விறகுகட்டைகளைப்போட்டு நெருப்பு மூட்டிவிட்டு அதன்மேல் பலர் நடந்து சென்றனராம்.

o o o

திரு. லோயிட் ஜார்ஜின் காரியதரிசியாயிருந்தவரும், பிரிட்டிஷ்பத்திரிகையின் நிருபருமாகிய திரு. காரத் ஜோன்ஞ் என்பவரைச் சீனக் கொள்ளைக்காரர் கொலை செய்துவிட்டனராம்.

o o o

வருகிற டிசம்பர் மாதம் 28-ந் தேதி இந்தியதேசீய காங்கிரசின் பொன்விழா நடைபெறுமாம்.

o o o

அகில இந்திய தொழிற்சங்கத் தலைவரான திரு. ரூய்க்கர் என்பவர் இராசத்துவேஷப் பிரசங்கஞ் செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 1 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றாராம்.

சிவகங்கை ஜமீனைச்சேர்ந்த தாத்தாங்குளம் என்னுங் கிராமத்திலுள்ள காளிகோயிலில் கொள்ளைக்காரர்புகுந்து 3000 ரூபா பெறுமதியுள்ள பொருள்களை எடுத்துச் சென்றுவிட்டனராம்.

o o o

விருதுநகருக்குச் சமீபமாகவுள்ள வெள்ளூர் என்னுங் கிராமத்திலுள்ள கிறீஸ்த வகுப்பைச்சேர்ந்த 24 வயதுடைய ஒருவன் வயலில் காவலுக்குப் படுத்திருந்தபோது கொலைசெய்யப்பட்டதாகவும் உடலைக் காணவில்லையென்றும் கூறப்படுகின்றது.

o o o

பிரிட்டிஷ் மத்தியதரைக்கடலில் 2-வது தளகர்த்தராகவிருந்த அட்மிறல் சேர் ரொஜெர்பாக்கவுஸ் என்பவர் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றாராம்.

o o o

விமானவிபத்தில் மரணமடைந்த அமெரிக்க நடிகையான வில்ரோ ஜர்ஸ் என்பவரின் சொத்து 60 லட்சம் டொலர்வரையிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கின்றதாம்.

o o o

பார்சல் ஒன்றுக்கு 1000 பவுண்வீதம் 20 பார்சல்கள் மார்ஸேல்ஸ் நகரிலிருந்து பம்பாயிலுள்ள பிரான்சு வங்கியின் ஏசண்டுக்கு அனுப்பப்பட்டன. அவற்றை இந்தியத் தபாலதிகாரிகள் திருப்பியனுப்பிவிட்டனர். தபாற்சட்டப்படி அவ்வளவு தொகையான பவுண் பார்சல்மூலம் அனுப்ப முடியாதாம்.

o o o

பிரிட்டிஷ் பாராளுமன்ற வாக்காளரின் புதியஅட்டவணை அக்டோபர்மீ 15உ அனுசரணைக்குக் கொண்டுவரப்படும். அதன்படி பிரிட்டனிலும், வட அயர்லாந்திலுமாக 3 கோடியே 10 லட்சம் வாக்காளர் இருப்பார்களாம். இவர்களில் பெண்களே அதிகமானவர்களாம்.

o o o

அபிஸீனிய எல்லையிலிருந்து 120 மைல் தூரத்துக்கப்பால் லிகபொண்டிக்கும் புட்டயாடோவுக்குமிடையே பெரிய வைரக்கல்லொன்றை இத்தாலிய கப்ரின் ஒருவர் கண்டெடுத்திருக்கிறாராம்.

o o o

தூத்துக்குடியிலுள்ள ஆதிதிராவிடர்கள் பலர் இந்துசமயத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மாறி வருகின்றனராம்.

o o e

ஸ்ரீமான் அகில சந்திரதத்தர் என்பவர் இந்திய சட்டசபையின் அடுத்த கூட்டத்தில், இந்தியா சர்வதேச சங்கத்திலிருந்து விலகவேண்டுமென்றும் இந்தியாவைப்பற்றி வெளிநாடுகளில் பிரசாரஞ்செய்யவேண்டுமென்றும், மாணதண்டனையை நீக்கிவிடவேண்டுமென்றும், பாதுகாப்புக் கைதிகளை விடுதலைசெய்யவேண்டுமென்றும் பல பிரேரணைகளைக் கொண்டுவர உத்தேசித்திருக்கிறாராம்;

## தென்மயிலைச் சன்மார்க்கசபை

நிகழும் யுவஹூ ஆவணிமீ 17-ந்உ சனிக்கிழமை மாலை 6-மணியளவில் மேஷ சபையின் பொதுக்கூட்டமொன்று மணிவாசக நூல்நிலைய மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. நா. பொன்னையா அவர்களின் தலைமையில் நிகழ்வதாயிற்று. சென்றகூட்ட அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பட்டுச்சபையினங்கீகாரம்பெற்றதும், ஏழாலைச் சைவசன்மார்க்க வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. வ. இராமலிங்கமவர்களால் "ஆன்மவிசாரம" என்னும் விஷயம் வெகு அழகாக உபநியாசிக்கப்பட்டது. உபநியாசகர் தம் விஷயத்தை எடுத்தாளுகையில் ஆன்மா, உடல், கன்மம் ஆதியாம் பொருள்களையும், அவற்றின் பல்வேறு தன்மைகளையும்; வேறுபாடுகளையும், இருவகை வினைகளையும், வினைகளாலாம்பயன்களையும் சிறந்த மேற்கோள்கள்காட்டி ஆராய்ந்து சென்றனர். விஷய முடிவில் திரு. சீ. தம்பிப்பிள்ளை அவர்களால் குறிப்புரை கூறப்பட்டது. பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 8 மணியளவில் முடிவெய்தியது.

—கடித.

## சாவகச்சேரி அபின் வழக்கு

### போலிஸ் பரிசோதகர்களுக்கு போலிஸ்தலைவரின் தண்டனை

சென்ற சில நாட்களின் முன் யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் நடைபெற்ற அபின் வழக்குச் சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விடுதலைபெற்ற சாவகச்சேரி இ. கனகசபை என்பவர், பொலிஸ் தலைவருக்கு இவ்வழக்குச் சம்பந்தமாக யாழ்ப்பாணப் பொலிஸ் பகுதியில் வேலை பார்க்கும் இரு சப்இன்ஸ்பெக்றர்மாரைக் குறித்து செய்துள்ள மனுவுக்கு மேற்படி சப்இன்ஸ்பெக்றர்மார் இவருக்கும் "பிளாக்மார்க்" (குற்ற அடையாளம்) கொடுத்திருப்பதாகப் பொலிஸ் தலைவர் அறிவித்திருக்கிறார்.

இவ்வழக்குச் சம்பந்தமாக யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்பிறின்டென்ட் மூலம் விசாரணை செய்ததாகவும அவ்விசாரணையின் பின் இவ்விரு உத்தியோகஸ்தரும் ஒரு குறித்த குற்றச்சாட்டுக்கு உட்பட்டவர்களெனக்கண்டு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டதாகவும் அறிகின்றேம்.

இப்பரிசோதகர்களி லொருவர் வேறிடத்துக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. —ந. நி.

### மாடுகளைக் கொலைசெய்யும் மந்திரவாதி

பிரான்சு தேசத்திலே ஓர் மந்திரவாதி மாட்டினுடைய இருதயத்தை எடுத்து அதில் அநேகஊசிகள் குத்தி மந்திரமோதி புதைத்துவைத்து ஒருவருடைய ஆடு, மாடுகளை இறக்கச் செய்தாராம். இதையறிந்த மாடுகளின் சொந்தக்காரன் மந்திரவாதியைச் சுட்டுக் கொலை செய்துவிட்டானாம். விசாரணையில் "குற்றமில்லை" யென யூரிமார் கூறியதன் பேரில் எதிரி விடுதலை பெற்றான்.

## யாழ்ப்பாணம் - மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம் லிமிற்றெட்

சென்றகிழமை மலையாளத்தில், யாழ்ப்பாணம் புகையிலை விற்பனையான விலை விபரம்:—

| தினிசு: | | | கண்டி: |
|---|---|---|---|
| 8 | விலாசம் | (தீர்வை உட்பட) | ரூ. 530 |
| 10 | ,, | ,, | ரூ. 510 |
| 12 | ,, | ,, | ரூ. 490 |
| 14 | ,, | ,, | ரூ. 470 |
| 15 | ,, | ,, | ரூ. 450 |
| 17 | ,, | ,, | ரூ. 430 |
| 18 | ,, | ,, | ரூ. 410 |
| 19 | ,, | ,, | ரூ. 370 |
| 20 | ,, | ,, | ரூ. 340 |
| 020 | ,, | ,, | ரூ. 300 |
| பொடிவு | ,, | ,, | ரூ. 280 |


## Change of Name

I, Muttamma alias Amirtham, daughter of the late Mr. and Mrs. S. Sinnappah of Mallakam, and wife of K. Arumugam of Tellippallai West do hereby inform the public and the Government of Ceylon that I will be known and sign my name from this date as

**A. Amirthamalar**
(ஆ அமிர்தமலர்)

"Mani Mahal"
Mallakam,
22-8-35

## CHANGE OF NAME

I Sinnappillai, daughter of Mr. and Mrs. V. Kanthappillai of Tellippallai West do hereby inform the public and the Government of Ceylon that I will be known and sign my name from this date as

**N. Poomalar** (ந. பூமலர்)

Tellippallai West
22-8-35

சிறுவர் பகுதி

# காற்றுங் கமக்காரனும்.

சி. த.

மிக மிகப் பழையகாலத்திலே, ஒரு கமக்காரன் இருந்தான். அவனுடைய குடும்பமோ மிகவும் பெரியது. அக்குடும்பத்தேவைகளைப் பூர்த்திசெய்வது அவனால் முடியாதிருந்தது. ஒருநாள் அவன் தன்னுடைய சிறிய வயலுக்குப்போய்த் தானியங்களை அறுத்து மிதித்தான். ஆனால், காற்று மிக உக்கிரமாக வீசித் தானியங்கள் யாவற்றையும் வாரிக்கொண்டு போய்விட்டது. உடனே கமக்காரனுக்கு அடங்காக் கோபம் உண்டாய்விட்டது. இந்தக் காற்றை எப்படியாவது கண்டுபிடித்துத் தனது பொருள் நட்டத்தைச் சொல்லவேண்டுமென்று அவன் தீர்மானித்தான். தனது மனைவி மக்களிடம் விடைபெற்றுக்கொண்டு காற்றைத்தேடிப் புறப்பட்டான்.

அவன் நெடுந்தூரம் பிரயாணம் பண்ணினான். கடைசியாக ஒரு காட்டின் எல்லையை அடைந்தான். அங்கேயொரு குடிசையைக் கண்டான். அக்குடிசையின் கதவு திறந்திருந்தது. குடிசைக்குள் ராட்சத உருவமுடைய ஒரு மனிதன் நீட்டிநிமிர்ந்து படுத்திருப்பதைக், கண்டான். அவன்தான் "காற்று" என்று சொல்லப்படுபவன். 'வந்தனம்' என்றான் கமக்காரன். அந்த ராக்கதனும் பிரதிவந்தனம் செலுத்தினான். "நீ எதைத் தேடுகிறாய்" என்று வாயுபகவான் கேட்டான். "காற்றைக் கண்டுபிடிப்பதற்கே நான் உலகம் முழுவதும் அலைந்து திரிகிறேன்" என்றான் கமக்காரன். "அவனைக்கண்டால், அவன் எனக்குச் செய்த குற்றத்துக்கேற்ற தண்டனை செய்வேன்," என்றும் கமக்காரன் சொன்னான். "உனக்கு அவன் என்ன குற்றம் செய்துள்ளான்" என்று வாயுபகவான் கேட்டான்.

"எனது வயலிலேயுள்ள தானியம் முழுவதையும் அடித்துக்கொண்டு போய்விட்டான்" என்று விடை கூறினான் கமக்காரன். "அன்பனே நான்தான் அந்தக்காற்று; உனக்கு என்ன நடந்தது என்பதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று வாயுபகவான் கூறினான். "எனது தானியத்தைத் தா என்று கமக்காரன் கேட்டான். "இல்லை அப்படிச்செய்ய முடியாது, வேறொன்று செய்வேன். நான் உனக்கு ஒரு மந்திரச் சாக்குத் தருவேன். உனக்குச் சாப்பாடு தேவையானநேரம், "சாப்பாடும் பானமும்" உடனே அவை யாவும் கிடைக்கும்" என்று வாயுபகவான் சொல்லி மந்திரச்சாக்கையும் கொடுத்தனுப்பினான். வீட்டுக்குப் போகும்போது வழியிலுள்ள எந்தத் தவறணையிலாவது குடிக்கக்கூடாது என்றும் வாயுபகவான் கமக்காரனுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தான்.

கமக்காரன் காற்றுக்கு வந்தனமளித்துவிட்டுத் திரும்பினான். சிறிது தூரம் சென்றதும் ஒரு தவறணையைக் கண்டான். அவனுக்குக் கடும் விடாய் எழுந்தது. காற்றுக் கூறியதையும் மறந்து அவன் தவறணைக்குள்ளே போயுட்கார்ந்தான். அங்கே மந்திரச் சாக்கின் நினைவு வந்து, அதை சோதித்துப்பார்க்க விரும்பி "சாப்பாடும் பானமும்" என்று கூறினான். உடனே அவனுக்கு முன்பாகப் பலவிதமான பக்ஷண வகைகளும் பான வகைகளும் காணப்பட்டன. தவறணைக்காரன் இதைக்கண்டதும் மிகவு மதிசயப்பட்டான். மந்திரச் சாக்கையும் கண்டான். அதைத் தான் எப்படியாவது கவரவேண்டுமென்று நினைத்தான். கமக்காரனுக்கு நன்றாக மதுவை யருத்தினான். அவன் வெறி மிஞ்சி அயர்ந்து தூங்கினான். தவறணைக்காரன் வேறொரு சாக்கை வைத்துவிட்டு மந்திரச் சாக்கைத் தான் எடுத்துக்கொண்டான். மறுநாட்காலை கமக்காரன் எழுந்து போலிச் சாக்கையுமெடுத்துக்கொண்டு வீடுநோக்கிப் போனான். வீடு கிட்டியதும் அவன் மனைவியைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கும்படி கட்டளையிட்டான். தான் போதிய உணவு வைத்திருப்பதாக அவன் மனைவியிடம் கூறினான். மனைவி அதை நம்பவில்லை. கமக்காரன், "சாப்பாடும் பானமும் என்று கூறியும் ஒன்றுங் கிடைக்கவில்லை. அந்தக் கமக்காரனுக்கு அடங்காக்கோபம் மூண்டது. மறுபடியும் காற்றைத்தேடிப் புறப்பட்டான். மனையாள் வீட்டிலிருந்து திட்டிக்கொண்டிருந்தாள். கமக்காரன் காற்றையடைந்ததும் "நீ எங்கிருந்து வருகின்றாய். உனக்கு நான் மந்திரச் சாக்குத் தரவில்லையா?" என்று வாயுதேவன் வினவினான். "மந்திரச் சாக்கா? இதோ இருக்கிறது உன் மந்திரச்சாக்கு. எனக்கு இது வேண்டாம். என்னை நீ அனுப்பிவிட்டாய். வேறேதாவது கொடு என்று கமக்காரன்கேட்டான். வாயுதேவன் கமக்காரன் கொடுத்த சாக்கைப் பார்த்தான். "இது என்னுடைய சாக்கல்ல. எனது புத்திமதிக்கு மாறாக நீ தவறணைக்குப் போய்விட்டாய். போகட்டும் இனி, உனக்கு ஒரு வெள்ளாடு தருவேன். பணம தேவையான நேரம் "பணம் தேவை" என்று அதனிடங் கூறு. உடனே தங்கநாணயங்களையும் வெள்ளிநாணயங்களையும் அது கக்கிவிடும்" என்று வாயுதேவன் கூறி வெள்ளாட்டையுங் கொடுத்துத் தவறணைக்குப் போகவேண்டாமென்று புத்திமதியுங்கூறிக் கமக்காரனை அனுப்பினான். இனிமேற்றான் தவறணைக்குப் போகமாட்டேனென்று சபதங் கூறிக்கொண்டு கமக்காரன் வெள்ளாட்டையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனான். போகும் வழியில் முன்போலவே தவறணைக்குப் போனான். தவறணைகாரன் கமக்காரனுடைய வெள்ளாட்டைக் கவர்ந்துகொண்டு வேறொரு வெள்ளாட்டை அது நின்ற இடத்தில் கட்டிவிட்டான். கமக்காரன் அதையே தனது வெள்ளாடென்று நினைத்துக்கொண்டு அழைத்துச்சென்றான். வீட்டுக்குப் போனதும் மனைவியிடம் வெள்ளாட்டைப்பற்றிக் கூறிவிட்டு, "பணந்தேவை" என்று சொன்னான். வெள்ளாடு பணங்கொடுக்கவில்லை. கமக்காரன் கோபமடைந்து மூன்றாம்முறையும் காற்றினிடம்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

உண்மை அழகைப்பற்றி LORETTA YOUNG என்ற ஸினிமா நடிகை சொல்வதைக் கேளுங்கள்.




ஹொலிவுட் நகரிலும் இங்கிலாந்திலும் மிகவும் பிரபல ஸினிமா நடிகைகள் 857 பேர்களில் 846 பேர்கள் தங்கள் அழகை பாதுகாக்க லக்ஸ் டோய்லெட் ஸோப்பையே உபயோகிக்கிறார்கள். இதைத்தான் ஸினிமாபடச் சாலைகளிலெல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். லக்ஸ் டோய்லெட் ஸோப்பில் அதிசயிக்கத்தக்க ஏராளமான வெண்மை நுரை வெகு சீக்கிரத்தில் பொங்கி எழுகிறது. இந்த நுரை உடம்பின்மேல் பிடிக்கும் அழுக்கையும் அசுத்தத்தையும் அறவே எடுத்துவிடுகிறது. உங்கள் சருமத்தை மிருதுவாகவும் அழகாகவும் வைப்பதற்கு நீங்கள் இந்த ஸோப்பையே அவசியம் உபயோகிக்க வேண்டும்.

லக்ஸ் டோய்லெட் ஸோப் மிகவும் சுத்தமான சாமான்களிலிருந்து தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டியையும் அதன் இன்பமான வாசனையைக் காப்பதற்கு காகிதத்தினால் பொதியப்பட்டிருக்கிறது. இன்றே மேற்சொன்ன லேசான அழகு உண்டாக்கும் வழியை கைக்கொள்ளுங்கள்.




LUX TOILET SOAP

X-LTS 360-288A TAMIL

LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

# யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர்: அப்போ எப்பொழுது வாக்குமூலங்கொடுத்தாய்?

சாட்சி: நான் வாக்குமூலங் கொடுக்கவில்லை.

(விதானையினுடைய டயரியைப் பார்த்து) நீ அவரது டயரியில் கையெழுத்திட்டிருக்கிறாயா?— ஆம்.

வாக்குமூலங் கொடுக்காமல் எப்படிக் கையெழுத்திட்டாய்?— அடுத்தநாள் அதிகாலையில் விதானை என்னிடம்வந்து தான் எனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்திருப்பதாகவும் அதற்குக் கையெழுத்திடும்படியுஞ் சொல்ல நான் கையெழுத்திட்டேன்.

ஆங்கிலத்தில் கையெழுத்திட்டாயோ?— ஆம்.

டயரியில் என்ன எழுதினரென உனக்குத் தெரியாதோ?—தெரியாது. எதையோ எழுதிவிட்டுக் கையெழுத்தை வைக்குப்படி சொன்னார்.

எப்பொழுது விதானை டயரியில் பதிந்தாரென உனக்குத் தெரியுமோ?— ஆம்.

நீ விதானைக்குச்சொன்ன வாக்குமூலம் கடைக்காரன் சாட்சியத்தை ஒட்டியும் இங்கு சொன்னது சீனிவாசகத்தின் வாக்குமூலத்தை ஒட்டியும் காணப்படுகின்றது?—நான் சொன்னவைகளே சரி ஐயா.

விதானை மற்றச் சாட்சிகளிடமாவது கேட்டு எழுதினாரா?—ஒருவரிடமும் வாக்குமூலங்கேட்கவில்லை. மீண்டும் சாட்சி தொடர்ந்து கூறியதாவது. நான் இவ்வெதிரியை அடிக்கவில்லை. சுந்தரமிடமாவது விதானையார் கேட்கவில்லை. அந்நேரத்தில் நான் இவ்வெதிரியை அடிக்கவில்லை. எனது கையில் பொல்லுமில்லை. வேறுமொருவரும் அடிக்கவில்லை. சுப்பிரமணியம் என்பவர் எதிரியினது கையையும் கத்தியையும் பிடித்துக்கொண்டு வெளியே போனார். தாங்கள் சொல்வது போல, பொலிஸ்நீதிபதியிடம் கத்தியைப் பறித்ததாகச் சொல்லவில்லை. நீதிபதி ஏன் அப்படி எழுதினாரென எனக்குத் தெரியாது. பலசாலியாகிய காலஞ்சென்றவரைக் கத்தியாற் குத்திய இவ்வெதிரி சுப்பிரமணியத்தையும் குத்தாமல் விட்டதன் காரணம் ஏனென்ன எனக்குத் தெரியாது. எதிரி கத்தியாற் குத்தியதன்மேல் தப்பியோடிப்போனாரெனச் சொல்லமாட்டேன். தான் வந்து விசாரணை செய்தபோது இவ்வெதிரிகளை யார் அடித்தவர்களெனக் கேட்டபோது ஒருவரும் பேசாதிருந்தார்களெனப் பொலிஸ் விதானை ஏன் சொன்னாரெனத் தெரியாது."

நீதியரசர்:- ஓர் மனிதன் கொலை செய்யப்பட்டான். ஓர் மனிதன் கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கிறான். இந்நேரத்தில் உண்மை பேசவேண்டியது உனது கடமையாகவிருக்கிறது. நீ இயல்பாகவே உண்மைபேசாதவனாகக் காணப்படுகிறாய். உலகில் உண்மைபேசாதவர்களும் ஓர்சாரார் இருக்கின்றனர். அவர்களுள் நீயும் ஒருவனாயிருக்கக்கூடுமென எண்ணுகிறேன். ஆகையினால் நீ உண்மையையே பேசவேண்டும்.

சாட்சி தொடர்ந்து கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"பொலிஸ் விதானை வந்ததின் பின்னரே டாக்டர் சாக்கோ அவர்கள் வந்து காலஞ்சென்றவரதும் எதிரியினதும் கையைப்பிடித்துப் பார்த்தார். அப்போது டாக்டர் யாதொன்றுங் கூறவில்லை. பின்னர் விதானை எதிரியையும் இரத்தினத்தையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டதின் பின்னரே வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். அவர் தன்னுடைய எண்ணத்தின்படியே எனது வாக்குமூலத்தை எழுதினர்."

அதன் பின்னர் நீதியரசர் பொலிஸ் விதானையை வரும்படி அழைத்துத் தானாகவே விசாரணை செய்தார். அப்போது மானிப்பாய் விதானை வைத்திலிங்கம் - கந்தையா கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"அன்றையதினம் நான் வீட்டிலிருக்கும்போது 4 மணியளவில் கார்த்திகேசு வந்து அறிவித்தல் கொடுத்ததின்மேல் நான் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றேன். அன்றையதினமே சாட்சிக்காரர்களிடமும் வாக்கு மூலங்கள் பெற்றுக்கொண்டேன். காயக்காரர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விடுத்ததின் பின்னரே வந்து சுந்தரம், அமிர்தலிங்கம், சீனிவாசகம், சின்னத்துரை, சுப்பிரமணியம் முதலியோர்களது வாக்குமூலங்களைப் பெற்றேன். பொலிஸ் இன்ஸ்பெக்டரும் அங்கு நின்றதால் நான் சாட்சிகளை வேறிடத்திற்குக் கொண்டுபோய்க் கேட்டு எழுதினேன். நான் விதானை வேலைக்குப் புதியவனாகையால் நீதிபதி, இன்ஸ்பெக்டர் முதலில் வாக்கு மூலங்களைப் பெற்றதின் பின்னர், நானும் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய வேண்டுமெனவும், அது எனது கடமையென எண்ணியும் வாக்குமூலங்களைப் பதிந்தேன். சாட்சிகளது வாக்குமூலங்களைப் பெற்றதின் பின்னர் அவர்களுக்கு வாசித்து விளங்கப்படுத்தியதின் பின்பே கைச்சாத்தைப் பெற்றுக்கொண்டேன். பொலிஸ் சுப்றின்டென்ற் திரு. டிக்மன் அவர்கள் எனது டயறியில் அன்றையதினமே தனது கையெழுத்திட்டிருக்கிறார். அமிர்தலிங்கத்திடமும் அன்றையதினமே வாக்குமூலத்தைக் கேட்டு எழுதியதுடன் அன்றையதினமே அவரிடமும் கையெழுத்தைப்பெற்றேன். நான் எழுதிய வாக்குமூலமும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எழுதிய வாக்குமூலமும் ஒரேமாதிரியிலலாது வித்தியாசமாகக் காணப்படுவதற்குப் போதிய நியாயம் என்னவென என்னாற் சொல்ல இயலாது. அமிர்தலிங்கம் தனது வாக்குமூலத்தில் செல்வத்துரையும் நமசிவாயமும் சண்டைபிடித்ததாகச் சொன்னதாகவே எழுதியிருக்கிறேன். சில சாட்சிகளை நீதிபதிவந்துவிளங்கியதன்மேலுங்கேட்டு வாக்குமூலங்களைப் பதிந்தேன்."

இடைவேளையின் பின்னர் கோடு கூடியதும் வேலுப்பிள்ளை - சீனிவாசகம் என்பவரும் நாகலிங்கம்-சுப்பிரமணியம் என்பவரும் அமிர்தலிங்கத்தின் சாட்சியத்தையொட்டியே வாக்குமூலங்கள் கொடுத்தனர். அவர்களைக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகவும், யாவருடைய பதிவு வாக்குமூலங்கட்கும் விரோதமாகவும் கவலையீனமாகவும் நகைப்புக்கிடமாகவும் கூறினார்கள். இத்துடன் கோடு கலைந்தது.

யாழ்ப்பாணம் 22.

இன்றுகாலை 11 மணியளவில் சுபரீம் கோட் கூடியதும் வேலுப்பிள்ளை சீனிவாசகம் என்பவர் மறுபடியும் விசாரணை செய்யப்பட்டதின்மேல் ஆறுமுகம் சுந்தரம் என்வர் கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

"நான் யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய்க்குப் போகும் தெருவில் கடைவைத்திருக்கிறேன். இயந்திரசாமான்கள் யாவும் பழுதுபார்ப்பதே எனது தொழில். பின்னேரம் 3-30 மணியளவில் வந்த சுப்பிரமணியமும் என்னிடம் "றிப்பெயறிங்" கற்பதற்காக 1-மணியளவில் வந்த சின்னத்துரையும் எனது கடையில் நிற்கும் பையனாகிய கார்த்திகேசுவும் நானும் கடையிலிருக்கும் பொழுதே செல்லத்துரையும் (எதிரி) இரத்தினமும் 4-மணியளவில் எனது கடைக்குவந்து கோப்பிகேட்க, நான் போட்டுக் கொடுக்க அவர்கள் உள்ளேயிருந்த மேசைக்குப் பக்கத்தே நின்று பருகினார்கள். சுமார் 15 நிமிஷத்தின்பின்னர் நமசிவாயமென்பவர் சீனிவாசகத்துடனும் அமிர்தலிங்கத்துடனும் கூடிக்கொண்டு கடைக்குவந்தார். நமசிவாயம் கடைவாசலில்வரும்போதே இருவரையும் நோக்கி "நீங்கள்தானா தியாகுவுக்கு அடித்த நீங்கள்" என்று கேட்டுவிட்டு உள்ளே சென்றதைக் கண்டேன். பின்னர் ஐயோ கத்திக்குத்து எனச் சத்தம் கேட்டது. அந்நேரத்தில் நானோர் பழுதடைந்த கிரமபோனைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்தேன். இச்சப்தத்தைக் கேள்விப்பட்டதும் கிரமபோனை அம்மேசையிலேயே தள்ளிவிட்டு நிமிர்ந்து பார்த்தேன். அப்போது காயமடைந்த நமசிவாயம் சுவரிற் சாய்வதையும் கத்தி எதிரியாகிய செல்லத்துரையினது கையிலிருப்பதையுங் கண்டேன். இறந்தவரும் எதிரியும் ஒருவருக்கொருவர் அடிபட்டதை யான் காணவில்லை. அதன் பின்பு கார்த்திகேசுவைப் பொலிஸ்விதானையிடமனுப்பினேன். அதன் முன்னர் எதிரியைச் சுப்பிரமணியம் பிடித்துக் கொண்டு கடைக்கு வெளியேபோக அவர் பின்னே இரத்தினம் போனதையுங் கண்டேன். எதிரியும் இரத்தினமும் வெளியேபோனபோதாவது விதானை வந்ததின் பின்னராவது இன்றையவரையிலாவது அவர்களது சரீரத்தில் யாதொருவிதமான காயங்களையுங் காணவில்லை. (பார்த்து) இக்கத்தி என்னுடையதல்ல. எனது மேசையின் மீதும் இக்கத்தி இருக்கவில்லை."

சாட்சி மீண்டும் குறுக்குவிசாரணையின்போது கூறியவற்றின் சாராம்சம் :—

"நான் மெஷீன்கள் திருத்தியபோது கத்தி பாவிக்கும் வழக்கம் கிடையாது. எனது கடையிலிருக்கும் கார்த்திகேசு என்பவன் அப்பம் பிட்டு முதலிய பண்டங்களைச் சரிப்பண்ணுவதும் அதனைப் பொறுப்பேற்று நடத்துவதுமாக இருப்பான். அந்தக்கடையில் மெஷீன்கள் பழுதுபார்க்க வேண்டின் நானே பழுதுபார்க்கவேண்டும். நேற்றுச் சுப்பிரமணியம் எவ்விதம் சொன்னாரோ எனக்குத்தெரியாது. கார்த்திகேசுவும் சுப்பிரமணியமும் சம்பவம் நடைபெற்றபோது பைசிக்கிள் துடைத்துக்கொண்டு நின்றார்கள். அங்கிருந்த ஐவரும் எதிரியையும் இரத்தினத்தையும் அடிப்பதற்காகத்தான் வந்தார்களோ எனக்குத் தெரியாது. அப்போது சின்னத்துரை எனது கடையில் 'நவல்' வாசித்துக்கொண்டிருந்தார். இவர்களை எனக்கு நன்கு தெரியும். நான் போடும் கோப்பி திறமானதுதான். இவர்கள் அனேக முறைகளில் எனது கடைக்கு வந்து கோப்பி குடித்திருக்கிறார்கள். தேனீர் கேட்பவர்களுக்குக் கோப்பி கொடுக்கும் வழக்கம் கிடையாது. நான், கொலைசெய்யப்பட்டதென்ற பயங்குதியினால் — புத்தி தடுமாற்றத்தால் எதிரிகள் தேனீர் பருகினார்களெனவும் சொல்லியிருப்பேன். தேனீருக்கும் கோப்பிக்குமுள்ள வித்தியாசம் என்னவென்பது எனக்குத் தெரியும். நீதிபதியிடம் கத்தி பறிக்கப்பட்டதெனவும் சொல்லியிருப்பேன். இறந்தவர் எதிரியை உறுக்கித்தான் கேட்டார். எதிரியும் இறந்தவரும் ஒருவருக்கொருவர் அடிபட்டதை நான காணவில்லை. பொலிஸ் நீதிபதிக்காவது பொலிஸ் இன்ஸ்பெக்றருக்காவது அப்படிச் சொல்லவில்லை.

அதன் பின்னர் சண்டிருப்பாய் வாசியும் புத்தூரில் மணமுடித்தவரும், லத்தீன்பாஷை படிப்பவருமாகிய அப்பாக்குட்டி-தியாகராசா என்பவர் சாட்சியங் கொடுக்கையில் கூறியவற்றின் சாராம்சம்:

"நான் சென்ற வைகாசி மாதம் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் படிக்கவில்லை. அக்கல்லூரியில் உபாத்தியாயராகக் கடமைபார்க்கும் நவரெத்தினராஜா என்பவரிடம் லத்தீன்பாஷை படித்தேன. சோமசுந்தரம் என்றபெயர் கொண்ட மைத்துனன் முறை பூண்ட ஒருவர் இருக்கிறார். ஓர் நாள் பினனேரம் 4-15 மணியளவில் நான் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குப் பக்கத்தே யிருக்கும் நாகநாதரின் கடைக்குமுன்னால் இவ்வெதிரியையும் இரத்தினத்தையுங் கண்டேன். அப்போது அவர்கள் என்னிடம் ஓர் விஷயத்தைப் பற்றிக் கூறநான் சரியல்ல வென்றேன். உடனே இரத்தினம் எனது கன்னத்தில் இருமுறை அடித்தார். பின்னர் எனது கையைப்பிடிக்க இவ்வெதிரி பிற்பக்கத்தால் வந்து எனது பிடரியில் அடித்தார். பின்னர் நான் கடைக்குள் ஓடினேன். ஓடும்போதும் இரத்தினம் எனது வேட்டித் தலைப்பைப் பிடிக்க நான் அப்பகுதியைக் கிழித்துவிட்டு ஓடினேன். அதன் பின்னர் எதிரிகள் ஆனைக்கோட்டைப்பக்கமாகப் போனார்கள். இதுசம்பவத்தை மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியரிடமும் உதவிவித்தியாதரிசி திரு. விஜயரெத்தினமிடமும் முறைப்பட்டேன்."

சாட்சியை அட்வகேட் குணம் ஸ்பென்ஸர் குறுக்குவிசாரணை செய்தபோது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு :—

நான் மானிப்பாய் இந்துக்கல்லூரியினின்றும் 1933-ம்௵ விலகினேன். ஓர் முறை சைவக்கறியல்லாத மீன்கறியை விடுதியில் வைத்திருந்த குற்றத்தின்பேரில் "பப்ளிக் கேன்" கிடைத்ததேயொழிய பொன்னுத்துரை என்பவருடன் அசங்கிதமாக நடந்துகொண்டதற்காகவல்ல. நமசிவாயம், சின்னத்துரை, அமிர்தலிங்கம் முதலியோர்களை எனக்குத் தெரியுமேயொழிய அவர்கள் எனது கூட்டாளிமார்களல்லர். அவர்கள் எனது விஷயத்தில் சிரத்தையெடுத்திருப்பதற்கு ஓர் காரணமுமில்லை. எதிரியினது ஒரு சகோதரி மானிப்பாயிலுள்ள சோதிவேம்படிப் பள்ளிக்கூடத்தில் படிப்பிப்பது தெரியும். அவளை நானாவது மற்றையோராவது "மைனா" எனக் கூப்பிட்டிருக்கவில்லை. இவர்கள் என்னை அடித்தமையால் நான் அதிகம் வெட்கப்படுகிறேன்."

அதன்பின்பு மீண்டும் விதானை வைத்திலிங்கம்-கந்தையா சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார். ஈற்றில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு வைமன் பொலிஸ் விதானையின் சாட்சியத்திற்கு முரணாச் சாட்சியம் கூறினார்.

பின்னர் முடிக்குரிய நியாயவாதி, அட்வகேட் S. D. தம்பு, நீதியரசர் முதலியோர் தத்தமது அபிப்பிராயத்தைக் கூறினர். சிறிது நேர ஆலோசனையின் பின்பு ஜூரிக்கனவான்கள் ஏகமனதாக எதிரி குற்றவாளியல்லன் எனத் தெரிவிக்க நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார்

## காற்றுங் கமக்காரனும்

(முன்பக்கத் தொடர்ச்சி)

வந்தான். கமக்காரனைக் கண்டதும் வாயுதேவன் மிகுந்த கோபங்கொண்டு கர்ச்சித்தான். "இந்தமுறை நான் உனக்கு ஒரு பேரிகை தருவேன்" என்றும் கூறினான். இங்ஙனம் கூறிவிட்டு ஒருமூலையிற் கிடந்த பேரிகையைப் பார்த்து "எனது நண்பர்களே! பேரிகையினின்றும் வாருங்கள்" என்று காற்றுக் கூறியது. உடனே ஆறு பெலசாலிகளான குள்ளர்கள் கைகளிலே தடிகளுடன் பேரிகையினின்றும் கிளம்பினார்கள். அவர்கள் கமக்காரன்மேல்விழுந்து நன்றாகப் புடைத்தார்கள். "ஐயோ! ஐயோ!! என்னை மன்னிக்கவும். நான் இனிமேல் உன்னிடம் வரமாட்டேன் நீ சொன்னபடியெல்லாஞ்செய்வேன்" என்று கமக்காரன் அடி தாங்கமுடியாமற் குழறத்தொடங்கினான்.

"பேரிகைக்குள்ளே போங்களென்று காற்றுக் கூறியதும் குள்ளர்கள் மறைந்துவிட்டார்கள். நடுக்கத்தோடு மச்சத்தோடும் நின்ற கமக்காரனிடம் பேரிகையைக்கொடுத்து, "இனி யுன் புத்திக்கெட்டியபடி நட" என்று காற்றுக் கூறியது. கமக்காரன் பேரிகையையுங்கொண்டு தவறணைக்குப் போனான். தனது சாக்கையும், வெள்ளாட்டையும் தரும்படி தவறணைகாரனைக் கேட்டான். தவறணைக்காரன் தன்னிடம் அவையொன்றுமில்லையென்று கூறினான். உடனே கமக்காரன் குள்ளர் அறுவரையும் வெளிக்கிடும்படி கட்டளையிட்டான். பேரிகையினின்றும் அவர்கள் குதித்தார்கள். தவறணைகாரனை நையப் புடைத்தார்கள். தவறணைகாரன் அடிதாங்கவியலாது "எல்லாந் தருகிறேன், என்னைக் கொல்லாதீர்கள்" என்று கத்தினான். சமக்காரன் குள்ளரைப் போகும்படிசொல்ல அவர்கள் மறைந்துவிட்டனர். மந்திரச் சாக்கையும் வெள்ளாட்டையும் பெற்றுக்கொண்டு கமக்காரன் வீட்டுக்குப்போனான். இழந்துபோன அவற்றைத் தான் மீண்டும் பெற்றுக்கொண்டவகையை விபரமாய் மனைவியிடங் கூறினான். அவனும் அவன் மனைவியும் மந்திரச்சாக்கு வெள்ளாடு பேரிகை என்ற இவற்றின் உதவியாற் சுகமாக உண்டுடுத்து வாழ்ந்து வந்தார்கள்.

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 1. காட்சி 2.

இடம் :— துரியோதனன் கொலு மண்டபம். வேந்தர் சபை கூடியிருக்கின்றது.

சேவுகன் வருகின்றான்.

சேவு :— வேந்தர்வேந்தே! மன்னர்குழாம் வீற்றிருக்கக்கூடிய அழகிய மண்டபமொன்று கட்டி முற்றுப்பெற்றுவிட்டது. தங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு அரசர் யாவரும் தத்தம் இடங்களுக்கு விரைவாய்ச்சென்று கட்டுவேலைக்குரிய பொருள்களை மல்லர் மூலமாயும், தேர்கள் மூலமாயும் கொண்டுவந்துசேர்த்தனர். சிற்பநூல்வல்லோர் சித்திரத் தூண்களைநாட்டி மாணிக்கவுத்திரங்களையேற்றி முத்துக்களால் வேய்ந்தனர். ஓவியமுந் தீட்டப்பெற்றுக் கொடிகளும் நிரைநிரையாகக் கட்டப்பெற்றுத் தங்கள் மனதுக்கினியந்த மண்டபம் முற்றுவிக்கப்பெற்றது.

துரி :— சேவுகா! உனதுரைகளைக்கேட்டு மிகவும் மனமகிழ்ந்தேன். (பிதாவை விளித்து) தந்தாய்! எனது எண்ணம் பூர்த்தியாகிவிட்டது. கார்முகில்கள் படிந்து தவழக்கூடிய சிகரத்தையுடைய ஒளிபொருந்திய அழகிய மண்டபமொன்று கட்டுவித்தேன். அதன் வனப்பை வந்து பார்க்கும்படி தூதொன்றனுப்பிப் பஞ்சபாண்டவரை இவ்விடந் தாங்கள் அழைத்துத்தரவேண்டும்.

திரி :— மகனே! அங்ஙனமாயின் நான்வரைந்த தன்மைபதாய் ஓர் திருமுகமெழுதிக்கொடுப்பாய்.

துரி :— அங்ஙனமே கொடுக்கின்றேன், எந்தாய். (ஓர் ஓலையை வரைந்துகொடுத்து) இதோ இருக்கின்றது திருபம்.

திரி :— (ஓலையைப்பெற்று விதுரனை விளித்து) தம்பி விதுரா! காட்டின்கண் நல்லவயலிருப்பினும் நாட்டின்கண் கல்வயலிருப்பது நன்றல்லவா! உன்போன்றவோர் பெருந்தகைக்கு இதையெடுத்துக் காட்டவும் வேண்டுமோ! நீ கபடமாய் விளங்கிக்கொள்ளவேண்டாம். நீதியில் வல்ல பஞ்சபாண்டவர் உனது சொற்கேட்டு நடப்பது திண்ணம். ஆகையால் இந்தவோலையைக்கொடுத்து அவரை மருட்டி யிங்கே யழைத்துவருவாய். "தூரத்துத்தண்ணீர் தாகத்துக்குதவுமா?"

விது :— அண்ணா! இவ்வஞ்சச் சூழ்ச்சிக்குடன்படுதல உமக்கழகன்று. இச்செயலே எமது குருகுலமரபு அழிந்துபோவதற்கேதுவாயிருக்குமென்று அறியக்கடவீர். உமது மைந்தரை ஒருவிதமாயும், தமையனின் மைந்தரை வேறொருவிதமாயும் நடத்தல் நீதியாகுமா? ஆயினும் மூத்தோன் ஏவலை மறுத்தலாகாதென்பது தருமநூலாதலின் இத்தூதை மேற்கொண்டு இக்கணமே சென்று ஐவரையு மழைத்துவருகின்றேன்.

(செல்கின்றான்)

காட்சிமுடிகிறது.

அங்கம் 1. காட்சி 3.

இடம் :— இந்திரபுரவீதி.

விதுரன் வருகின்றான்.

விது :— ஆகா, என்ன அழகாயிருக்கின்றது இவ்விந்திரபுரம்! அமராபதியோ, அளகாபுரியோ அல்லது அறக்கடவுள்வாழும் நகரோ! வெண்கொடிகளாடுகின்ற மதில்சூழ்ந்த இந்நகரத்தின் வனப்பைக்கண்டு என் விழிகள் களிக்கின்றன. நீர்நிறைந்த வாவிகள் பல. அவ்வாவிகள் நிறைந்த கமலர்கள். அம்மலர்களின் இதழ்களில் நிறைந்திருக்கும் வண்டுக்கூட்டங்களின் இசையானது எத்தகையின்பத்தைப் பயக்கின்றது! தீங்குயிலின் ஓசைகணிறைந்த சோலைகளும் மிளிரும். நாற்பக்கங்களிலும் செந்நெல் விளைகின்ற வயனிலங்கள். பாங்கரிலெங்கணும் இரத்தினமண்டபங்கள். அம்பண்டபங்கள் நிறையச் சிலம்பினதோசை. வயனிலமெல்லாம் புட்குழாம்நிறையும். அப்புட்கள் இன்பத்தை அனுபவித்தற்கேதுவாய்ச் சேவலும் பேடும் ஊடல்கொள்ளும். நீர்த்துறைகளெங்கணும் முத்துக்கள். அம்முத்துக்கள் வெண்மையான நிலாவினொளியைக்காலும். நதியெல்லாம் உண்ணுதற்கு விளக்கமாகும் புனல். புனனிறைந்த தாமரைப் பூக்கள் வீதிகளெங்கணும் வாத்தியங்களை முழக்கி, வந்துசேரும் ஆதுலர்க்கு அமுதம்போன்ற உணவையளிக்கும் நெடிய சாலைகள். கடவுளரும் விரும்பித் தமது நாட்டினைப்போலுமென்று இவ்விந்திரபுரத்துக்கு வந்திறங்கியுறைவர். தருமபுத்திரர் வாழும்பதிக்கு நிகரேது! அதோ தெரிகின்றது பஞ்சபாண்டவரின் மாளிகை. அங்குச்சென்று அவரைச் சந்திப்போம்.

(செல்கின்றான்)

காட்சி முடிகிறது.

## ஸ்ரீமதி தவமணி கதிரேசு அவர்களின் சங்கீத கதாப்பிரசங்கத்தை வியந்து பாடப்பெற்றது.

தேன்பிலிற்றுஞ் செந்தமிழுஞ் சிங்களமு
மீந்துமிக
வான்விளம்பி நன்னிலையம் வாழியவே—
கானமிகத்
தந்து மகிழ்பாவை தவமணியால்
நாளுமியாம்
சிந்தைமகிழ் கொள்ளச் சிறந்து.

கேட்டுமகிழ்ந்தனம் கேட்டுமகிழ்ந்தனம்
கோட்டமில்அருங்கலை கேட்டுமகிழ்ந்தனம்
தேனினுமினியநந் தெய்வத்தமிழையும்
ஆனத்தமிழ்க்கோர் அணியாம்இசையையும்
வீதிகள்தோறும் வீடுகள்தோறும்
போந்தொறும்வருந்தொறும் கேட்டுமகிழ்ந்
தனம்

தாவறுதமிழால் தண்கதைசாற்றலும்
ஓவறுசிங்களத் துயர்கதைஉரைத்தலும்
இசைவளம்இனிப்ப நகைவரப்பாடலும்
திசைதொறுங்கேட்டாங் கசைவறநின்று
நபமொழிநல்லாள் யாவளோஎன்ன
தமிழரும்பிறரும் தாம்நனிவியப்ப
கொழும்புவான்விளம்பிக் கோதறுநிலையம்
செழுந்தமிழ்இசைதந்து திருந்துபுகழ்
நிறைப்ப
கொழும்புமாநகரிடைக் குலவுவழக்கறிஞன்
கதிரேசபிள்ளையின் கவினுர்புதல்வி
தவமணிநங்கை தந்தனள்தந்தனள்
பண்டிதராயினர் பாடகராயினர்
ஒண்டொடி இவள்செயும் உயர்ந்தஇத்
தொண்டுக்
கிணையோ ஆகார்! இலங்கைஇவளினல்
பெருமிதமடைந்து பெருமகிழ்வுறுமால்
சீருஞ்செல்வமும் செழுந்தமிழ்க்கலையும்
பேரும்ஆயுளும் பெற்றனளாகி
இந்தியநாட்டிலும் இசைநனிபரப்பி
வாழிவாழி வளனொடுசிறந்தே.

சீரார் கொழும்பினில் வான
விளம்பிச் செழுநிலையத்
தோரா யிசைதமிழ்த் தீஞ்சுவை
நக்கட் குதவிநின்றாள்
ஆர்ஆர் எனச்சொல நின்றாள்
தவமணி ஆரணங்கு
பேராயுள் செல்வம் பிறங்க
விளங்குக பீடுபெற்றே.

"வான்விளம்பி"

கிராதார்ச்சுனீயம்.

1936-ம் ஆண்டிற்குரிய
சிரேட்டபாடசாலைத்
தராதரப்பத்திர வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னாகம்.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம் தஞ்சை.

மறைமலையடிகளது 'அறிவுரைக் கோத்து'க்கு ஆதரவு.

14-8-1935-மாலை மணி, 5.

நிகழும் பவ-ஆடி-30-ஆம் நாள் (14-8-35) மாலை மணி 5 க்கு, கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரி மண்டபத்தில் தஞ்சையரசர் அறநிலயங்களின் புரவலர், திருவாளர். J. M. சோமசுந்தரம்பிள்ளை B. A., B. L., அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அதுபோது கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ப் புலவர்-இராவ்சாகிபு, த, வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் B. A,, B. L., கீழ்க்கண்ட முடிபுகளை விளக்கி முன்மொழிந்தார்கள். அம்முடிபுகளாவன:—

"சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தாத்தேர்விற்கு (Intermediat Examination) உரிய தமிழ்ப்பாட புத்தகங்களுள், மறைமலையடிகளார் இயற்றிய "அறிவுரைக்கொத்து" என்னும் உரைநூலும் ஒன்றாக நியமித்தமையால் தமிழுலகின் நன்மதிப்பில் உயர்ந்தனர்."

"உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழியின் சிறப்பானது அயல்மொழிப் பற்றுடைய சிலர் இழைத்து வரும் தீயமுறைகளால் குலைபாது பாதுகாக்கும் பொருட்டு, மறைமலையடிகளார் எழுதிய "தமிழிற் பிறமொழிக்கலப்பு", "தனித்தமிழ் மாட்சி" என்னும் கட்டுரைகள் தமிழ் மாணவர் பல்காலும் பயலுதற்குரியன".

"தமிழ்நாட்டவர் உலகியலில் முன்னேற்றமடைதற்குரிய வழிதுறைகளை நடுநின்று ஆய்ந்த மறைமலை அடிகளார் தமது முடிபுகளைத் தெள்ளிதின் விளக்கி கல்வியின் சிறந்த நோக்கங்களைக் கருதாது, பிழைப்புக்கு வழியெனவே கருதி நம்மவர் கற்பது, மதியுடைமையன்றெனவும் நம்மவர் அனைவேமும் ஒருமைப்பாட்டுடன் நாட்டு நலத்திற்குரிய தொண்டுகளைப் புரியாது நம்மில் பிளவுகளை விளைத்துவரும் சாதி, சமய, ஒழுக்க வேற்றுமைகளை வலியுறுத்துவதும், பொதுநலம் பேணுதலையொழித்து தன்னல நாட்டம் கொள்ளுவதும் தேச முன்னேற்றத்திற்கு ஏலாதன எனவும், காரணகாரிய முறையாலும் மெய்ச்சான்றுகளாலும் மறைமலை அடிகளார் எழுதிய "தமிழ்நாட்டவரும் மேல் நாட்டவரும்' எனுங் கட்டுரையும் மாணவர் பயில வேண்டுதற்குரியன."

"இக் கூறிய கட்டுரைகளடங்கிய அறிவுரைக்கொத்து என்னும் நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத்தினர், மேதக்க தமிழ்ப்புலமை மிக்கோர் குழுமிய (Board of Studies) கல்விக் கழகத்தினராகிய குழுவினர் ஆய்ந்து தெளிந்த முடிபை, குறுகிய மனப்பான்மையுடைய ஒருசிலர் செய்யும் கிளர்ச்சி காரணமாக மாற்றத் துணிவது அடாத செயலாகும்".

அவற்றை தஞ்சைக் கீழவாயில் வழக்கறிஞர், திரு. வே. அழகர்சாமி நாயடு அவர்கள் B A., B. L., அணைமொழிதலாகப் பின்பற்றிப் பேசினார்கள். பின்னர் அவற்றையொட்டி, தஞ்சை தூய பேதுரு உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியர், திரு. பா. சிவகுருநாதபிள்ளை யவர்களும், கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரித் தலைமையாசிரியர், திரு. சிவ. குப்புசாமியவர்களும், கரந்தைத் தமிழ்ச்சங்கப் புலவர் திரு. பொன்னண்ணகளத்தில்வென்றார் அவர்களும்,திருவையாற்று அரசர்கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் திருவாளர். R. வேங்கடாசலம் பிள்ளையவர்களும், "அறிவுரைக்கொத்தைப் பாடமாக வைப்பது மிகவும் பொருத்தமுடைத்து" என்பதுபற்றி விரிவாகப்பேசி ஆதரவு தந்தனர்.

பின்னர் இம்முடிபுகள் யாவும் அவையோர் அனைவரின் ஒத்தவுள்ளத்துடன் நிறைவேறியன.

கடிதம

1936-ம் ஆண்டுக்குரிய
சிரேட்டபாடசாலை விடுகைததராதபத்திர
வகுப்பிற்குரிய

இலக்கியக் குறிப்பு

தமிழ்மணி மாலை—II

கொழும்பு சகிராக் கல்லூரித் தலைமைத்
தமிழ்ப் பண்டிதர்
திரு. மு. நல்லதம்பி அவர்களால்
எழுதப்பட்டது.

விலை சதம்—60

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

ஜோதிட விளம்பரம்

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர்
தங்கள் தங்கள் இஷ்டப்படி
சுத்தமாகவும் சீக்கிரமாகவும் செய்வித்துக்கொள்ளலாம்.

கிரகஸ்புடம், பாவஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், கிரக சமயம், கிரகபலன், அஷ்டவர்க்கபலனும், காலதெசை, பிராண தெசை, சீவதெசை, மனோதெசை, மிருத்துதெசை, இவைகளும், மகாதெசை அந்தரபலனுக எழுதியுங் கொடுப்பதற்கு ரூபா 60.
ஷெ ஒருதெசைக்கு அந்தரபலனும் மிகுதி புத்திபலனுமெழுத ரூ.35.
ஐந்துவருஷ அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 10.
முற்றும் புத்திபலனும் சுருக்கமான பிறபலன்களும் எழுத ரூபா 5.
குறிப்பு எழுத ரூபா 1. விவாகப் பொருத்தம் பார்க்க ரூபா 2.

கோவில், வீடு, கிணறு முதலிய கிருகசம்பந்தமான
கருமங்களும் எம்மிடம் செய்வித்துக்கொள்ளலாம்.

ஜாதகம், குறிப்பு, ரேகை முதலியனமூலம் தற்காலம் நடக்கும் பலாபலன் அறிய விரும்புவோர் ரூபா 1 கொடுத்தல்வேண்டும்.

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம், ஆண், பெண் முதலியவற்றின் சரியான விபரத்துடன் மேற்காட்டிய விகிதத்திற் பாதி முற்பணமாக அனுப்பவேண்டும்.

K. Vaithilingam,
Astrologer,
Urelu, Jaffna.

க. வைத்தியலிங்கம்,
சோதிடர், ஊரெழு,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(188) 9-9-34

# கலாசக்கரம்.

"ஆண்களைக் கீழ்நிலையிற்றள்ளி, பெண்கள் மேல்நிலையடைவதென்பது எப்படி? பெண்களின் இப்புதிய இயக்கம் எப்படி முடியுமென்பதை யாவர் அறிவர்?" எனப் பெண்கள் பகுதி கூறுகின்றது. எமக்கும் உண்மையாகவே இது புலப்படவில்லை. எமது நடேசன் வீட்டிலே பத்துப் பன்னிரண்டு கோழிகளுண்டு. அவைகளுள் நான்கு சேவல்கள். எஞ்சியவை மற்றவைகள். இந்தப் புதிய இயக்கம் அந்தக்கோழிகளையும் பற்றிக் கொண்டது. சிலவாரங்களுக்கு முன் ஒருநாளிரவு அந்தச் சேவல்களுக்கும் கோழிப் பெண்களுக்குமிடையே வாய்ப்போர் மூண்டது. பின்னர் அது கொத்துப் போராய், ஈற்றில் விருண்டுப் போராய் முற்றியது. மேல்நிலை கீழ்நிலை காரணமாக இரு பகுதியாருக்குமிடையில் எழுந்த வாதமே இதற்குக் காரணமாகும். இந்தப்போர் அர்த்தயாமம் வரையிலும் நடைபெற்றது. அயலிலுள்ள கோழிகளும் வந்து கைகலந்து கொண்டன. ஈற்றில் சனங்களின் சம்மதம் பெறும் முறைமையே கைக்கொள்ளப்பட்டது. கோழிச்சனங்களுள் பெண்பாலார் தொகை அதிகமானமையினால் அப்பகுதியே பூரண வெற்றி பெற்றது. எனவே கோழிப் பெண்கள் தங்கள் கீழ்நிலையைக் கோழிபாண்கள்பாற் சுமத்தி, அவைகளின் மேல்நிலையைத் தாமே கைப்பற்றிக்கொண்டன. இவ்வளவில் மூன்றும் சாமம் கழிந்தது. கோழி யாகண்ள் தமது குலாசாரப்படி கூவித் துயிலெழுப்பும் நாலாம் சாமம் வந்தது. கோழிப்பெண்கள் அக்கடமையைத் தாமே செய்வதாக ஏற்றுக்கொண்டு, சேவற்கோழிகளுக்கெல்லாம் வாய்ப்பூட்டுப் போட்டுக் கூவத் தொடங்கினர். அயலிலுள்ள கோழிப்பெண்களும், அவர்களைப் பார்த்து அடுத்த அடுத்த அயலிலுள்ளவர்களும் கத்தத் தொடங்கினர். கூவித் துயிலெழுப்பும் நன்மையான கருமம் முற்றாக ஒழிந்து, சிறிதுவேளையில் ஊரைக் குடியெழுப்பும் தீயகருமமே தலைப்பட்டது. ஊரெங்கும் சுமங்கல கரமான அபயக்குரலே நிறைந்திருந்தது. கோழிப்பெண் ஒருத்தி, குஞ்சுகளின் பொருட்டு இருபது இருபத்தைந்து நாட்கள் வரையும் இதுகாறும் செய்து வந்த கடமை சேவற்கோழிகள்மீது சுமத்தப்படவேண்டுமென்றும் ஓர் பிரேரணையை அடுத்த கூட்டத்திற் பிரேரிப்பதாகத் தெரிவித்ததும், சூரியன் கீழ்த் திசையில் உதயமாயினன். எல்லாக்கோழிகளும் தாமிருந்த மரக்கொம்பர்களை விட்டுக் கீழேகுதித்து மேயத் தொடங்கின.

* * *

தமிழரும் வரவரப் பற்பல பாகுபாடுடைய ராயினர். இங்கேயுள்ள தமிழர் யாழ்ப்பாணத் தமிழராம். மட்டக்களப்புத்தமிழர், கொள்ளுப்பிட்டித்தமிழர், அல்லைப்பிட்டித்தமிழர், பாணந்துறைத் தமிழர், முறட்டுத்தமிழர், சோனகத்தமிழர் (தமிழ்ப்பாஷை பேசும் மகமதியர்) இந்திய தமிழர் முந்திய தமிழர் பிந்தியதமிழர் கூலித் தமிழரெனப் பிரிவுபட்டனர். தமிழரென்றால் "ஹிண்டூஸ்" என்பதும் ஒரு சாராருடைய கருத்தாம். பாம்புகள் உடம்பின் எப்பாகத்தையும் விரும்பிய பிரகாரம் வளைப்பது போலவே, சிலர் எங்கோ எதற்கோவுள்ள சொற்களை தங்கள் நினைவைக் குறிக்கும் சொற்களாக வளைத்துப் பாவிக்கத் தொடங்கினர். தமிழரின் காலபலன் போலும் பலரும் வாயில்வைத்து உறிஞ்சும் ஒரு பொருளுக்கும் தமிழர் எனப்பேர் வந்துவிட்டது. இக்காலத்துள்ள கல்வியுலகம் சில இழிவான சொற்களை மிகவும் பெருமையுடன் எடுத்து உச்சிமேற்சூடுகின்றது. உதாரணமாக ஆங்கிலத்திலே "வேர்ணக்குலர் லாங்குவிச்" என்றால் அடிமைப்பாஷையென்பது கருத்தாகும். வேர்ணக்குலர் லாங்குவிச் வேர்ணக்குலர் ஸ்கூல் என்னுமிவைகள் முறையே அடிமைப்பாஷை கற்பிக்கப்படும் பள்ளிக்கூடமாவென்பதை எமது அந்த உலகம் ஒருபோதும் சிந்திப்பதில்லை. கல்வியென்னும் கடல்மீது நாகரிகம் என்னும் கப்பலில் ஏறிச்செல்லும் நாம் "அரையதனிற் பஞ்சேனும் பட்டேனும் வேண்டுமெவர்கவிதை நஞ்சேனும் வேம்பேனுந் நன்று" என்னும் துறைமுகத்திலிறங்கி விட்டோம்.

* * *

தனவந்தர் ஒருவர் வீட்டிலே யன்னல் கதவுநிலை முதலானவைகளுக்கு மைபூசுவதற்காக, சில நாட்களுக்கு முன் கூலியாட்கள் ஆறுபேர் வந்து சேர்ந்தார்கள். எல்லாரும் வயதளவில் முப்பதுக்குட்பட்டவர்களாவர். உடைநடை பாவனைகளைப் பார்த்து அவர்கள் இன்னசாதியினரென்று சொல்லுதல் கூடாதிருந்தது. அவர்கள் பேசும் பாஷை தமிழ்தான். ஆனால் அது யாழ்ப்பாணத்துத் தமிழல்ல. படுத்தாதபாடெல்லாம் படுத்தப்பட்ட ஒரு தமிழ்ப்பாஷையாகவிருந்தது. அவர்களுடைய சமயக் கொள்கையையும் மட்டுக்கட்ட முடியவில்லை. விசாரித்தளவில் தாங்கள் இந்துக்களென்று ஒருவர் விடையிறுத்தார். நாமும் விளையாட்டாக இந்துக்களென்றால் கருத்தென்ன என்றோம். "அந்தக்காலத்தில் வழங்கிய சைவர் என்னும் சொல் இக்காலத்திலே இந்துக்கள் என்று வழங்கப்படுகிறது; இந்துக்களென்றால் எல்லாருக்கும் விளங்கும்" என்று அவர்களுள் மேற்பார்வைக்காரனுயுள்ள ஒருவர் சொன்னார். குறித்த மேற்பார்வைக்காரனை எல்லோரும் "சைவம்" என்றே அழைத்தார்கள். எமக்கு அதுவும் விநோதமாகவிருந்தது. அடுத்த நாள் அந்தச் சைவம் எங்கிருந்தோ அறியோம்; ஒருபெரிய கருவாடும் கையுமாகத் தனவந்தர் வீட்டினுட் பிரவேசித்தார். நாமும் காத்திராவண்ணம் அப்பொழுது அங்குச் சமுகமாயிருந்தோம். அந்தச் சைவத்தைக் கண்டதும் (இதை வாசிக்கும் உங்களுக்கு வரும் சிரிப்பிலும்பார்க்க) அதிகமாகச் சிரித்து விட்டோம். வாயும் கழகழவெனப் பேரொலி செய்தது. ஓய்! சைவம்!! இன்றைக்கு நல்ல சைவமொன்று அகப்பட்டுவிட்டதே யென்று கூறித்தலையசைத்தேம். "ஆம், ஐயா; கறியொன்றுமகப்படவில்லை, என்ன செய்கிறது" என்று அந்தச் சைவம் கூறியது. எல்லாரும் சைவமென்று கூப்பிடுகிறார்களே! நீரும் சைவத்துட் சைவமாயிருக்கிறீரே என்றேம். "என்னைச் சைவம் என்றுதான் எல்லாரும் கூப்பிடுவது வழக்கம். வெள்ளிக்கிழமைகளில் நான் மாமிசம் சாப்பிடுவதில்லை. அதற்காகவே என்னை எல்லாரும் சைவமென்று கூப்பிடுகிறார்கள்." என்று மேற்பார்வைக்காரன் விடையிறுத்தார். சைவத்தின் நிலைமை ஒருசில இடங்களில் இப்படியாகவும் வந்துவிட்டது. பின்னர் வெளியிடுவதாக முந்திய பத்திரிகையிற் குறிப்பிட்ட "மேல்நாட்டுச் சைவம்" என்பதன் உட்பிரிவுகளுள் இதுவுமொன்றாகும்.

# நாகரீகம்.

(மேலைவேலணை,
ப. வாலாம்பிகை அம்மாள்.)

உலகத்திலே வாழுகின்ற பற்பல சாதியார்க்குமிடையில் அவ்வவர் மனோசக்திக்கேற்பப் பற்பல விதமான நாகரீகங்களும் விருத்தியாகி வருதலை யாங்காண்கின்றோம். ஆகவே அந்த நாகரீகம் எவ்வாறுண்டானதென்றும், அதன் பலாபலன்களென்னவென்றும் ஈண்டு ஆராய்வாம். மனுஷனே மேலான பிறவியையுடையான். ஒரு பொருளைப் பகுத்தறியும் சக்தி மனிதனுக்கேஉண்டு. பஞ்சபூதபரிணாமமாகிய உலகப்பொருட்களின் உண்மையான சக்தியை உணர்ந்து அவற்றை வேண்டியவிடத்துபயோகித்து அவற்றின் பயனைப் பெறுபவன் மனிதனே.

காலத்துக்குக் காலம் மனுஷ சாதியாருக்கிடையில் பற்பல விதமான நவ நாகரீகங்களும் விருத்தியாகி வருகின்றன. ஆனால் விலங்கு முதலான சீவராசிகள் எக்காலத்தும் ஒரே தன்மையான வாழ்க்கையை நடத்துகின்றன. உதாரணமாக ஒரு பட்சியை எடுத்துப் பார்ப்போம். ஒருபட்சி நூறு வருடங்கட்கு முன் தன் கூட்டை எவ்வாறு கட்டியதோ அவ்விதமாகவே இப்பொழுதும் கட்டுகின்றது. இன்னும் நூறு வருடங்கள் சென்றாலும் இதே மாதிரியாகவே இருக்கும். மனுஷனோ அங்ஙனமன்று. மனுஷனைக் கடவுள் உண்டாக்கிய ஆதிகாலத்தில் இருக்கக் குடிசையும் உடுக்க வஸ்திரமும், உண்ண உணவுமின்றி மரங்களிலிருந்தும், ஆடைகளின்றியும், கந்தமூலபலாதிகளையும் இறைச்சிகளையும் உண்டு காலங் கழித்தான் என்றும், அதன்பின்னர் சிறு குடிசைகளை உண்டாக்கி அவைகளில் வாழ்ந்தும் தழை முதலியவற்றை உடுத்தும், வெவ்வேறு விதமான உணவுப்பொருள்களைச் சமைத்து உண்டும் காலங்கழித்தனன் என்பது மேலைத்தேசவாசிகள் கொள்கை. காலஞ்செல்லச்செல்ல உலகப் பொருள்கள் ஒவ்வொன்றின் சக்தியையும் உணர்ந்து அவைகளைத் தனக்குப் பயன்படுமாறு செய்து அதனால் இன்பவாழ்வை நடத்துவானுயினான். மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் உண்டாக்கினான். பஞ்சு முதலியவற்றால் வஸ்திரங்களை உண்டாக்கினான். உலோகங்களால் ஆபரணங்கள் பாத்திரங்கள், ஆயுதங்கள் முதலான பல பொருள்களையுண்டாக்கினான். புஷ்பம் வேர் முதலியவற்றால் வாசனைத் திரவியங்களையுண்டாக்கினான். ஒருவருக்கொருவர் தம் உள்ளக்கருத்துக்களை உணர்ந்து கொள்ளுவதற்குப் பாஷைகளை உண்டாக்கினான். புகைவண்டி, ஆகாயரதம், முதலானவைகளை யுண்டாக்கினான். இம்மட்டோ இன்னும் எத்தனை எத்தனை செயல்களைச் செய்திருக்கின்றான், இவ்விதமாகவே மனிதன் படிப்படியாக நாகரீக வழிகளைத் திறந்து வருதலை நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம்.

பற்பல விதமான நாகரீகங்களிலும் சிறந்து விளங்கியோர் நம் பண்டைத்தமிழ் மக்களே என்பது பழந்தமிழ் நூல்களையாராய்ந்து பார்க்குமவற்கு இனிது விளங்கும். இக்காலத்தில் மேலைத்தேச வாசிகளால் நூதனமாகக் கண்டு பிடிக்கப்படும் பீரங்கி, றேடியோ, நீராவியந்திரம், நச்சுப்புகை, வெடிகுண்டு, ஆகாயரதம் முதலானயாவும் வேறு பல கருவிகளும் ஒரு காலத்துத் தமிழ் மக்களால் உபயோகிக்கப்பட்டே வந்தன. இவ்வுண்மையை பின்வரும் சிந்தாமணிச் செய்யுட்கள் இனிது விளக்கும்.

'மாற்றவர் மறப்படைமலைந்து மதில் பற்றி, நூற்றுவரைக் கொல்லியொடு தூக்கியெறி பொறியும், தோற்றமுறு பேய்களிறு துற்று பெரும் பாம்பும், கூற்றமனகழு குதொடர் குந்தமொடு கோண்மா."

"பண்டவழ் விரலிற்பாவை பொறிவலத்திரிப்பப் பொங்கி, விண்டவழ் மேகம் போழ்துவிசும் பிடைப்பறக்கும் வெய்ய, புண்டவழ் வேற்கட்பாவை பொறியிடந் திரிப்பத் தோள்கள், கண்டவர் மருள வீழ்ந்து கால் குவித்திருக்கு மன்றே."

என்னும்கவிகள் ஈண்டு அறியத்தக்கன.

ஆனால் இவ்விதமான உலகசம்பந்தமுள்ள செய்கைகளெல்லாம் நம் தமிழ்நாட்டில் பலகாலமாக நிற்கவில்லை. ஒருவன் ஒருத்தி ஒன்று பல என்று சொல்லப்படுகின்ற சாம் அசரமாகிய இருவகையான மாக்களும் காலநிலைக்கேற்பத் தோன்றி, நின்றழிதலாலே இத்தொழில்களைச் செய்தற்கு ஒரு கர்த்தா வேண்டுமென்பதை உணர்ந்து ஆராய்ந்து சிவம் என்னும் செம்பொருளைக் கண்டனர். பின்னர் சிவத்தை வழிபட்டு அதன் மூலமாக ஆன்ம சக்தியை உணர்ந்து பிரபஞ்சங்கள் யாவும் நிலையற்றனவென்னும் உண்மையைக் கண்டறிந்து உண்மை யுணர்வைப் பெற்றனர். இதுகாரணமாக யந்திரக் கருவிகளையும் பிறவற்றையும் உண்டாக்கி அவற்றின் மூலமாகப் பெருமையடையும் நோக்கத்தைப் பெரும்பாலும் கைவிட்டனர். கடவுளாற் கொடுக்கப்பட்ட வேதாகமங்களை ஆராய்ந்து அவற்றிற் கூறப்பட்ட தத்துவ வார்த்தைகளைத் தாம் உணர்ந்தும், பிறர்க்குணர்த்தியும் அறநெறி கடைப்பிடித்து ஒழுகுவாராயினர். இவர்களது தண்ணளி மிக்க நாகரீகம்தான் என்ன? தாம் அறிந்த உண்மைகளை அறிவினால் மேம்பட்டவர்க்கு இயற்றமிழால் உரைத்தனர். மத்திம அறிவுடையார்க்கு இசைத்தமிழால் விளக்கினர். அற்ப அறிவுடையார்க்கு நாடகத்தால் நடித்துக்காட்டினர்.

இக்காலத்திலுள்ள நம்மனோரெல்லாம் நாகரீகம் எனக்கொண்டு வாழ்வதெல்லாம், நம் மூதாதையர் நம் நன்மைகருதிச் செய்துவைத்த சாஸ்திரமுறைகளன்றோ. நவீன நாகரீகர் என்னும் பெயருக்குரியோரான மேனாட்டார் பற்பல கருவிகளைக்கொண்டு முயற்சித்து மிக்க சிரமத்துடன் கணிக்கும் சோதிட கணிதங்கள், ஆதிகாலம் தொடங்கி உயர்ந்த அறிவாளிகளாய் விளங்கிய தமிழ்மக்கள் தம்வழித் தோன்றியவரான நம்மனோர் நிலத்திற் கோடுகளைவரைந்து அவைகளிற் சம்பாக்களையுருட்டி எட்டெறிந்து விளையாடுமாறுபோலக் கணிக்கின்ற சோதிட கணிதங்களன்றோ.

நம் தமிழ்மக்கள் தம் நாடாகிய குமரிகண்டம் கடலினாற் சேதமுற்றுப் பற்பல இடங்களும் சாஸ்திரங்களும் அழிந்துபோயும் இப்பொழுது எஞ்சியிருக்கும் நாடுகள், அழியாதிருந்த சாஸ்திரங்களாலும், தமிழர்களிடத்தில் வழிவழியாக நிலைபெற்றுவந்த ஒழுக்கம் முதலியவற்றாலும், இந்த நேரத்திலும் பல்லோரும் தமிழ் நாகரீகத்தைத் தலைமேல்வைத்துப் புகழ்கின்றனர். ஆகவே நம் தமிழ்நாட்டு நாகரீகம் அறநெறியைக் கடைப்பிடித்துள்ளதென்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில் உணரக் கிடக்கின்றது.

ஆதலால் நாம் அந்நியர்தம் நாகரீகங்களைக் கைக்கொள்ளாது நமது நாகரீகத்தையே கைக்கொண்டு எவ்வுயிர்தமக்கும் தீமை யியற்றிடா தருளேசெய்யும் செவ்விய தருமநெறியைக் கடைப்பிடித்தொழுகித் தூய வாழ்வை யுடையோராய்ச் சிறத்தலே முறையாகும்.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—6

# கத்திமுனையில் கடத்தப்பட்ட பொன்னுப்பிள்ளை.

## மந்துவில் மற்கடலீலை.

## எதிரிகளுக்குக் கடூழியச் சிறை

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 19.

மந்துவிலைச்சேர்ந்த வேலாயுதர்மகள் பொன்னுப்பிள்ளை என்னும் 14 வயது மங்கையைப் பலாத்காரமாகக் கடத்திச்சென்றனர் என்று மேற்படியூர் வாசிகளான (1) சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை (2) சின்னத்தப்பி கந்தையா (3) சின்னர் பொன்னையா (4) D 1488 இலக்கங்கொண்ட மோட்டார் ரதச் சாரதி V. இராமலிங்கம் என்பவர்கள் யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் சென்ற திங்கட்கிழமை குற்றஞ்சாட்டப்பட்டனர்.

நியாயவாதிகள் திரு. S. தம்பு துரைசுவாமி, திரு. சபாபதிப்பிள்ளை என்பவர்களும், நியாயதுரந்தரர் திரு. C. R. தம்பையாவும் எதிரிகளுக்காக ஏற்பட்டனர். திரு. V. துரைசுவாமிப்பிள்ளை யூரிமார் தலைவராக இருந்தார்.

1-ம் எதிரிக்குக் கழுத்தில் ஓர் கத்திக் காயமும், ஷ்ெ பொன்னுப்பிள்ளையின் சகோதரி வள்ளிப்பிள்ளைக்குக் கழுத்தில் ஓர் காயமும், அவள் புருஷன் வேலுப்பிள்ளைக்குச் சில காயங்களுங் காணப்பட்டன என்று டாக்டர் சாட்சியங் கூறினர்.

முறைப்பாட்டுக்காரியாகிய பொன்னுப்பிள்ளை என்னும் மங்கை முதன் முதலாகச் சாட்சியம் பகரும்போது பின்வருமாறு கூறினள்.

“இதுசம்பவம் நடக்க 9 நாட்களின் முன்னர் எனது தந்தையார் இறந்துபோனர். இதற்கு 4 ஆண்டுகளின்முன் என் தாயும் இறந்துபோனர். எனக்கு ஆண் சகோதரங்கள் இல்லை. ஆனல் இரு சகோதரிகள் உளர். மூத்த சகோதரியான வள்ளிப்பிள்ளை இதுசம்பவம் நடக்க ஒருவருஷத்திற்குமுனனரே தனதுபுருஷனுடன வசிக்கப் போய்விட்டாள். ஆறுமாதகாலமாய் எங்கள்வீட்டிற்கு வரவில்லை. நான் பாராயமடைந்த அன்றுதான்வந்தாள். ஆனல் இந்த ஆறுமாதமும எனது மற்றச சகோதரி சினனம்மா எம்மிடம் வந்துபோகிறவள். நானும் என் தகப்பனும் தனியேதான் வசித்துவந்தோம். தகப்பனர் இறந்தபின் வள்ளிப்பிள்ளையும் அடிக்கடி வந்துபோகிறவள்.

“பிப்ரவரி மாதம் 9-ந் தேதி காலை 7 அல்லது 8 மணியளவில் நான், வள்ளிப்பிள்ளை, அவள் புருஷன் வேலுப்பிள்ளை, எனது மாமன் ஆறுமுகம் என்னும் நால்வருமாக வள்ளிபபிள்ளையின் வீட்டுக்கு நடந்துசென்றேம். அப்போது முதல் 3 எதிரிகளும், வேறும் இரு கறுத்த குட்டையான இருவரும் எம்மைச் சந்திததனர், முதல் இரு எதிரிகளும் சகோதரர். 3-ம் எதிரி அவர்களுடைய மைத்துனன். எனது மற்றச் சகோதரி சின்னம்மாவின புருஷன் வழியால் இவர்கள் எனக்கு இனதவராவர். எம்மைக் கண்டவுடன விரித்த ஓர் வில்லுக்கத்தியுடன் 1-ம எதிரி என்னைநோக்கி ஓடிவந்து என் கையிற் பிடித்தான், நான உடனே என சகோதரியின கையை இறுகப் பிடித்துக்கொண்டேன. எனது மைத்துனர் வேலுப்பிள்ளை 1-ம எதிரியின் குடுமியைப்பற்றிப்பிடிக்க அவன என் கையை விடுத்தான. உடனே நான் இராமலிங்கம் எனபவரின வீட்டுப் படலைககு ஓடினேன், இதற்கிடையில் வேலுப்பிள்ளையை 2-ம 3-ம் எதிரிகள் அடித்தனா. எங்களுடன் வந்த ஆறுமுகத்தையும் 2-ம எதாரியும் இன்னும சிலரும் வெருட்டினர், ஆகவே அவரும் எனது உதவிக்கு வாமுடியவில்லை, நான் இராமலிங்கததின வீட்டுப்படலைக்கு ஓடும்போது ‘ஐயோ ஆரோ என தாலிக்கொடியைப் பிடுங்கிக்கொண்டு ஓடுகிறார்களென்று என அக்காள் வள்ளிப்பிள்ளை குளறியது எனக்குக் கேட்டது. நான் சமீபமாகப் போனபோது, இராமலிங்கம் தனது படலையைத் திறந்துகொண்டு வந்தார். உடனே நான் அவரைக் கட்டிப்பிடித்து என்னைக் காப்பாற்றும்படி மன்றாடினேன். அப்போது 1-ம் எதிரியும் இன்னெருவனும் வந்து என்னை விடாவிட்டால் வெட்டிப்போடுவதாக இராமலிங்கத்தைப் பயமுறுத்தினர். இதன்பின் 1-ம் எதிரி என்னை இழுத்துப் பலாத்காரமாகத் தூக்கிச்சென்றார். இதற்குமுன் வேலுப்பிள்ளை முதலாம்எதிரியின் குடும்பியில் இரணடாம்முறையும் பற்றிப் பிடித்தார். உடனே 2-ம் எதிரி குடுமியை வெட்டிவிடக் குடுமி மாத்திரம் வேலுப்பிள்ளை கையில் இருந்தது. 1-ம் எதிரி தப்பிவிட்டார், இதன் பின் கால் மைல் தூரத்திற்கப்பால் காத்துக்கொண்டு நின்ற ஓர் மோட்டாரிரதத்தில் ஏற்றினார்கள். என்னை 1-ம் எதிரி தூக்கிக்கொண்டு போனபோது அவனுடைய தலையிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டேன். இரத்தம் என் கையிலும் வடிந்தது. மற்ற எதிரிகள் பின்னல் வருவதை நான் காணவில்லை. 1-ம் எதிரி என்னை மோட்டர்காரின் பின் ஆசனத்தில் இருத்தித் தானும் 3-ம் எதிரியும் எனக்கருகிலேயே இருந்தனர். 2-ம் எதிரியும் இன்னெருவனும் முன் ஆசனத்தில் இருந்தனர். நான் ‘ஐயோ’ ஐயோ என்று குழறினேன். எனது அம்மான் ஆறுமுகம் ஓடிவந்து கார் போகாதபடி தடுக்க யாரோ ஒருவர் அப்பால் பிடித்துத் தள்ளினர். இதன்பின் கார் சென்றது. அதிக தூரம் சென்றபின் மருதங்கேணியில் ஓர் கிணற்றுக்குச் சமீபமாக நின்றது. மோட்டர்கார் போகும்போது என்னை விவாகஞ் செய்துகொள்ளும்படியும் விவாகஞ்செய்தால் பெரிய தாலிக்கொடி கட்டுவதாயும் 3-ம் எதிரி முதலாம் எதிரி மூலமாக என்னைக் கேட்டான். 1-ம் எதிரி நான் அணிந்திருந்த அட்டியல் காப்பு அட்சரக்கூடு என்னும், இவற்றைப் பறித்துவிட்டான். நான் வலிந்து என் விருப்பப்படியே தங்களுடன் சென்றேன் என்றும் 1-ம் எதிரியின் தாய் எங்களுடன் வந்தாள் என்றும் சொல்லச் சொல்லி முதலாம்எதிரியும் 3-ம் எதிரியும் என்னைக் கேட்டார்கள். கிணற்றுக்குச் சமீபமாக மோட்டோர்கார் நின்றதும் நாங்கள் எல்லாரும் இறங்கினேம். “பெற்றோல்” வாங்கப்போவதாகச் சொல்லி 4-ம் எதிரி காரைக் கொண்டுபோய்விட்டான். 2-ம் எதிரியும் 1-ம் எதிரியும் அக்கிணற்றில் ஸ்நானம்செய்தனர். இதன் பின் ஒருவர் வந்தார், இவர் யார் என்பது எனக்குத் தெரியாது. பொலிஸ் விதானையாம். அவர் வந்து எங்கள் எல்லோரையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனர். அங்கே அவர் எனது வாக்குமூலத்தைப் பெற்றார். இதன்பின் நாங்கள் இன்னேர் மோட்டோர்காரில் ஏறி ஓர் வீட்டுக்குச் சென்றேம். இதன்பின் முதலாம் எதிரியை ஒழிந்த மற்றவர்கள் யாவரும் இன்னேர் வீட்டுக்குச் சென்றேம். அதன்பின்னும் ஓர் வீட்டுக்குச் சென்றேம், அது மணியகாரன் வீடாம். மந்துவில் விதானையும் அங்கே நின்றார். எனது மைத்துனன் வேலுப்பிள்ளையும் என் சகோதரி வள்ளிப்பிள்ளையும் அங்கே வந்தனர் நான் மருதங்கேணி பொலிஸ் விதானைக்கு ஓர் வாக்குமூலங் கொடுத்தேன், அது உண்மையானதல்ல. எனக்கு எதிரிகள் புதிய சீலையொன்றும் சட்டையொன்றும்தந்தனர். ஆனல் அவற்றைஅணிய நான்மறுத்துவிட்டேன்’.

பின்னரும் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்பட்டது

இதன்பின் வள்ளிப்பிள்ளை முந்திய சாட்சியின்கூற்றை ஆதரித்துச் சாட்சியம் பகர்ந்தாள். இதன்பின் வேலுப்பிள்ளை, சண்முகம் இராமலிங்கம், முருகேசு கணபதிப்பிள்ளை, கந்தர் வேலுப்பிள்ளை, சின்னையா செல்லையா, பொலிஸ்விதானை வேலுப்பிள்ளை இராசரத்தினம் என்பவர்களின் சாட்சியத்துடன் வழக்காளிபக்கச் சாட்சியங்கள் முற்றுப்பெற்றன. இத்துடன் எதிரிகள் நால்வரும் பொன்னுப்பிள்ளையைத் தாம் நடத்திச்சென்ற குற்றத்தை ஒப்புக்கொண்டனர். 2-ம் 3-ம் எதிரிகள் தாம் வேலுப்பிள்ளைக்கும் வள்ளிப்பிள்ளைக்கும் சரீரதீங்கு செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதன்பின நீதி ஸ்தலம் கலைந்தது.

யாழ்ப்பாணம், 21.

யூரிமார் ஏகமனதாக அக்குற்றங்களை ஒப்புக்கொண்டனர். அதன்மேல் நீதியரசர் 1-ம எதிரியைநோக்கி “உனது விஷயத்தில் மிகவும் கவனமாக யோசிக்கப்பட்டது. நீசெய்தகுற்றச்சாட்டு மறியலைவிட வேறு தண்டனை கொடுப்பதற்குக் கட்டளைச்சட்டம் இடங்கொடுக்காது. ஆகையால் உனக்கு 3 மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும், 2-ம் எதிரியைநோக்கி உனக்கு இன்று கோடுகலையும்வரையில் சிறைதண்டனையும் 75 ரூபா அபராதமும் தவறினல் ஒருமாசக் கடூழியச் சிறைத்தண்டனையும், 2-வது குற்றச்சாட்டிற்கு ரூபா 10 அபராதமும அல்லது ஒருமாசக கடூழியச் சிறைத்தண்டனையும், 3-ம் எதிரியை நோக்கி உனக்கு இன்று கோடுகலையும் வரையில் மறியலும் 25 ரூபா அபராதமும் தவறினல் ஒருமாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் 10-வது குற்றச்சாட்டிற்கு ரூபா 10 அபராதமும் தவறினல் ஒருமாதக் கடூழியச் சிறைத்தண்டனையும், 4-ம் எதிரியை நோக்கி உனக்கு 100 ரூபாவில் 2 வருடத்திற்கு நன்னடத்தைப்பிணை கொடுத்தல் வேண்டுமெனவும், 2-ம் 3-ம் எதிரிகள் குற்றப்பணம் இறுப்பதற்கு ஒருவாரத்தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது எனவுந் தீர்ப்புக்கூறினர்.”

## பசிப்பிணி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லர்ந்து வறளகின்றது. நாசிகுழைந்து அழல்கின்றது. தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது. கைகால்கள் சோர்ந்து துவளுகின்றன. வாக்குத் தொனி மாறிக் குளறுகின்றது. பற்கள் கிட்டுகின்றன. மலசல வழிகள் வெதும்புகின்றன. மேனி கருகுகின்றது. உரோமம் வெறிக்கின்றது. நரம்புகள் குழைந்து நைகின்றன, நாடிகள் கட்டுவிட்டுத் தளர்கின்றன. எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன. இருதயம் வேகின்றது. மூளை சுருங்குகின்றது. சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது. ஈரல் கரைகின்றது. இரத்தமும் சலமும் சுவறுகின்றன. மாமிசமகுழைந்து தன்மைகெட்டு வயிறு பகிரென்றெரிகின்றது. தாபசோபங்கள் மென்மேலு முண்டாகின்றன. உயிரிழந்து விடுதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் தோன்றுகின்றன. இக்நிலையில் மேற்கூறிய மானமாதிய பத்தும் எவ்வாறு நிற்கும்? இத்துணைக் கொடுமைகளையும் ஏககாலத்தில் உண்டாக்கக்கூடிய நோய் வேறொன்று மில்லையென்று துணிந்து கூறலாம்.

மரணவஸ்தையை விளைக்கும் இக்கொடிய வியாதிக்குத் தக்க மருந்து ஆகாரம் ஒன்றே. வேறெவ்வித ஔடதத்தாலும் விட்டு நீங்காது. இதனலேயே அன்னத்திற்கு “ஆருயிர் மருந்து” எனவும் ஒரு பெயர் ஏற்பட்டுளது. பசிநோய்க்குத் தக்க ஔடதமாகிய உணவை யருந்தியபின் உயிர்நிலைபெறுதலால் “மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லா, மூண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே” எனக் கூறப்பட்டிருக்கிறது. பிறநோய்களை ஒருமுறை யருந்தும் மருந்தினலேயே மறுமுறைவராமல் தடுத்துவிடலாம். இந்நோய்க்கு ஒவ்வொரு வேளையும் அன்னமாகிய ஔடதம கொடுத்துத் தீரவேண்டும, இது குறித்தே நம ஔவைப்பிராட்டியார்,

“ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய், இருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளும், என்னே வறியாய் இடும்பைகூர் என்வயிறே, உன்னேடு வாழ்தல் அரிது”

“துன்பம் பொதிந்த எனது வயிறே! இன்று உணவுகிடைக்கவில்லை, இன்னெரு பொழுது உணவை நீக்கியிரு என்றால ஒழித்திராய். இன்று அதிகமான உணவு கிடைத்திருக்கிறது, இரண்டு தினங்கட்குச்சேர்த்து ஏற்றுக்கொள் என்றால் ஏற்கமாட்டாய். ஒருபோதும் எனது துன்பத்தை நீ அறிந்து கொள்ளாய். யான் உன்னேடு கூடி வாழ்வது மிக அருமையெனக் கூறுகின்றார். இதனல் பசிப் பிணியாலே உணவு தேடி ஒவ்வொருவரும் அலைந்துதிரிய வேண்டியவ ராகின்றனர். “ஆக்கைக் கேஇரை தேடியலமந்து” என்றார் திருநாவுக்கரசர்.

ஆயினும் காணர், கேளார், கான்முடமானர், பேணுமாக்கள், பேசார், பிணித்தோர் ஆதிய மக்கள் உழைத்துணவு தேடுந திறனின்றி வருந்துவார்கள். அத்தகையோர்க்கு, சரீரதிடமாயுழைத்து உணவுதேடுவோர் ஒரு பகுதியை இட்டு உண்ணல்வேண்டும். அவ்வாறு பகிர்ந்துண்ணு மியல்புடையானைப் பசிநோயணுகாது. ஏனெனில்? தனக்கு மருத்துவன் தானேயாதலின் இதனை,

“பார்த்தூண் மரீஇ யவனைப் பசியென்னும், தீப்பிணி தீண்ட லரிது”

என்னும் வள்ளுவர்வாக்காலறிக. தவத்தால வல்லவராவோர் தம பசியையும் பிறரது பசியையும் நீக்க வல்லவராவர். இதனல், அத்தவ வலிமையாலும் பிறர்பசிநோக்குவாரது வல்லமை மிகச்சிறந்ததாம. பசிநீக்குதலாகிய புண்ணியமே பொருளைபபெற்றான் தனது பொருளைச் சேமித்து வைக்குமிடமாம். ஏனெனில் அப்புண்ணியமாகிய பொருட் பலன் தனக்கே வந்துசேர்தலின,

“அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன், பெற்றான பொருள் வைப்புழி”

என்பதிற்காண்க இக்கொடியநோய் நம்மைபபற்றாதிருக்க வேண்டுமானல் நாம பசித்தோர் முகம்பார்த்து இயன்றவாறு உணவளித்த லாகிய புண்ணியத்தைச் செய்து வருதலே முக்கிய கடமையாகும்.

“நட்டமாடிய சுந்தர நங்கை யெம்பிராட்டி, அட்டபோனகம் பணிவரை யனையவாயக் கிடந்த, தொட்டுவாய் மடுத்திடவுமெனசுடு பசிதணியா திட்டுணுதவர் வயிறுபோற் காந்துவ தெறான”

எனவரும், திருவிளையாடற் செய்யுளையும, “பசித்தவர்க் கிட்டுண்ணுன பாவியாமே” என வரும் பொயார் வாக்கையும சிந்தித்து ‘அன்னம பகிர்ந்திங் கிலைநதோர்க் குதவி செயுஞ் சென்மமெடுதத மக்கள, எருதுகள பூட்டி உழுது பயிரிடுதலா லுண்டான உணவுப் பொருள்களைப பலர்க்கு உபகரித்துப் பலரோடுண்டு ‘எந்தநாளும இரப்பவர்க் கிட்டு’, ‘அனனமிடுமின அறநெறியைக கைபபிடிமின’, ஐயமிட்டுண’ என்பனவாதிய உறுதிகளைக் கைக கொண்டொழுகுதலவேண்டும்.

விட்டுநீங்காது மாறிமாறி வருகின்றதால் “விடலரும பசிநோய” என்றார் வைராக்கியதீப நூலார்.

“தாதுவருஷம் வரப்போகின்றதே, சென்ற தாதுவில உண்டான பஞ்சம வந்துவிடுமோ? வந்தால நாம என்ன செய்வது?” என எண்ணி இப்போதே துயருற்றழும ஏழை மக்களது துனபத்தை இறைவன் கருணைகூர்ந்து நீக்கயருளுமாறு அவனது திருவருளை நாம அநவரதஞ் சிந்திப்போமாக!

பாரகமடங்கலும பசிப்பிணியறுக!

—“சிவநேசன்.”

தன் கணவரை வணங்கும் பெண்களைத் தேவர்கள் வணங்குவார்கள்.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol 6 Chunnakam, Jaffna, 25th August 1935, Sunday. No. 8


அகில இலங்கை

## ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி

**THE LANKA BENEFIT CO.,**

**GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.**

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 4-ம் வகு. | 1000/- ரூபா | 40/- ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் ,, | 500/- ,, | 20/- ,, | ,, | 25 | ,, |
| C | 12-ம் ,, | 250/- ,, | 10/- ,, | ,, | 25 | ,, |
| D | 7-ம் ,, | 125/- ,, | 5/- ,, | ,, | 25 | ,, |
| BMC | 2-ம் ,, | 250/- ,, | 10/- ,, | ,, | 12½ | ,, |
| WC | 3-ம் ,, | 250/- ,, | 5/- ,, | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 ,, | 125/- ,, | 5/- ,, | ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் ,, | 100/- ,, | 1/- ,, | ,, | | |


வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.
மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34



## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும்
விசேடமாக மதிப்புப்பெறும்
பவுண்மார்க் ஓடுகள்
இவைகளே.



இப்பொழுதும் நல்ல
மதிப்புடன் அழகு மிளிரும்
உன்னத மாளிகைகளில்
வேயப்படுவது.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். **பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.**

இங்ஙனம்

### சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு } சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.



சிட்டுக்குருவி சத்தினால் செய்யப்பெற்ற

## மின்சார லேகியம்

சாப்பிடுங்கள்

ஒரேவேளையில் குணந்தரும்

48 நாள் டின் 1க்கு ரூபா 5-0-0. வி. பி. வேறு
இனம்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனம்!

**எம். முகம்மது யூசுபு வைத்தியசாலை,**
பரங்கிப்பேட்டை, (Porto Novo.)

கொழும்பு ஏசண்டு :
ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ்ஸ்ரீட், கொழும்பு.

[(10) 14-7-35—12]



## திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரையறுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி **ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகைத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசியகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுகக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்.**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.

(203) 18-11-34—11-35



## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினேம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதாளசா லாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதாம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அனேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்தின் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் ருதுக்வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினாங்கு, முதலிய தொலைவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி" யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் வருடம் ஆகஸ்ட்மீ 25-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.